

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ வந்ததே புதிய பறவை... ★ முத்துலட்சுமி ராகவன்

# முத்துலட்சுமி ராகவன்




# வந்ததே புதிய பறவை...

லட்சுமி பாலாஜி பதிப்பகம்




லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ வந்ததே புதிய பறவை... ★ முத்துலட்சுமி ராகவன்



முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ‘ வந்ததே புதிய பறவை…’

## 1

மலை வாசஸ்தலத்திற்கு உரிய அனைத்து அடையாளங்களுடன் அந்தப் பாதை விரிந்து நீண்டு சென்றது.. இருபக்கமும் அடர்த்தியான தேயிலைச் செடிகள் பச்சைப் பசேலென்று கருத்தைக் கவர.. அந்தப் பாதையில் இறங்கி நடந்தாள் ஹரிதா…

இதமான குளிர்.. ஏஸியை நினைவூட்ட.. அந்த அழகான சீதோஷ்ண நிலையை அனுபவித்து ரசித்தபடி நடந்ததில்.. கையில் இருந்த பெட்டியின் கனம் கூட அவளைப் பாதிக்கவில்லை.

முதுகில் கூடையைச் சேர்த்துக் கட்டி.. தலைக்கு முக்காடு போட்டு தேயிலைக் கொழுந்துகளைப் பறித்துக் கொண்டிருந்த பெண்கள்.. அவளைப் பார்த்துவிட்டு.. தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர்..

அவர்களில் ஒரு பெண் அவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்..

"எங்கே போகணும்மா…?"

"கிருஷ்ணா எஸ்டேட்டிற்கு…"

"அதுக்கு இன்னும் நிறைய தூரம் போகணுமே.."

"அப்படியா..?"

"தனியாகவா போறீங்க..?"

"ஆமாம்…"

அந்தப் பெண் விசித்திரமாய்ப் பார்ப்பதை உணர்ந்தபடி.. மேலே நடந்த ஹரிதாவின் மனம் வலித்தது..

'தனியாகவா போறீங்க..?'

தனியாகத்தான் போயாக வேண்டும்.. பிறக்கும் போதே தாயையும்.. வளர்ந்த பின்னால் தந்தையையும் தொலைத்துவிட்டு.. வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருப்பவளுக்கு துணையாக யார் வருவார்கள்..?

ஹரிதாவும் யார் துணையையும் எதிர்பார்த்து நின்றதில்லை.. பெண்ணுக்கு பெண்ணாக.. ஆணுக்கு நிகராக அவளை வளர்த்திருந்தார் சம்பந்தம்.. ஹரிதாவும் அவரது விருப்பப்படி.. தைரியமான பெண்ணாக வளர்ந்தாள்... அவள் எதற்கும் அஞ்சியதில்லை...

ஆனால்.. அவளையும் அஞ்ச வைத்தது.. சம்பந்தத்திற்கு வந்த கேன்சர் நோய்.. கண் முன்னால் அவளைத் தாய்க்கு தாயாக.. தந்தைக்கு தந்தையாக வளர்த்த அந்தத் தாயுமானவர் துடித்த துடிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போன போது.. ஹரிதா மனத் தைரியத்தைக் கைவிட்டாள்..

"இந்தப் பாதையில் போம்மா.. இது குறுக்கு வழி.."

அந்தப் பெண் கைகாட்டிய கிளைப் பாதையில் சரிந்து இறங்கினாள் ஹரிதா..

எப்போதுமே நேர்வழியை விட.. குறுக்கு வழியில் செல்வது எளிதான ஒன்றுதான்.. ஆனால் ஹரிதா அதைச் செய்ததில்லை.. நிமிர்ந்த நடையும்.. நேர் கொண்ட பார்வையுமாக இருந்தாளே.. கடைசி வரை அவளால் அப்படி இருக்க முடிந்ததா...?

ஹரிதாவின் கண்கள் கலங்கின.. இமை கொட்டி விழி நீரைத் தடுத்தவள்.. நடையைத் தொடர்ந்தாள்.. தொலைதூரத்தில் தேயிலைத் தோட்டங்களின் ஊடே யாரோ ஒரு பெண் பாடும் ஒலி அவள் காதில் கேட்டது..

"ஓயிலா பாடும் பாட்டிலே...

ஆடுது ஆடு...

குயிலே நீயும் பாட்டிலே...

சங்கதி போடு...

கரிசல் காட்டுக் காடையே..

காடு கொடுத்த ஓடையே..

காட்டுக்கு வேலி தேவையுமில்ல..

என் பாட்டுக்குத் தாளம் தேவையுமில்ல.."

அந்தத் தனிமையான கானத்தில் தன்னை மறந்தாள் ஹரிதா.. அவளைப் போலவே அந்தப் பாட்டும்.. தனிமையாக அந்த மலைப் பிரதேசத்தில் பயணிப்பதைப் போல உணர்ந்தாள்..

அந்தப் பாடலில் ஒளித்த ஒருவித சோகம்.. அவள் மனதைத் தொட்டது...

"நான் எப்போதும் முழிச்சிருக்கேன்..

நான் எப்போதும் தனிச்சிருக்கேன்..

அட.. ஆஸ்தியுமில்ல.. அவஸ்தையுமில்ல..

அன்னாடம் சிரிச்சிருக்கேன்..

ஒரு குருவிக்கும் கூடிருக்கு..

இந்தக் குமரிக்கு வீடிருக்கா..

அந்த ஆத்துக்கும் கரையிருக்கு..

ஒரு அடைக்கலம் எனக்கிருக்கா..?

மழை வந்தாலென்ன.. இடிவந்தாலென்ன..

என் சந்தோசம் குறைஞ்சிருக்கா..?"

ஹரிதாவின் நடை தடைப்பட்டது.. அவள் கையில் இருந்த பெரிய பெட்டி.. இதுவரை கனக்காதது.. இப்போது கனக்க..

ஹரிதா பெட்டியை பாதையில் வைத்து விட்டு தோளில் மாட்டியிருந்த பெரிய பையைக் கழட்டி பெட்டியின் மேல் வைத்து விட்டு தளர்ந்து நின்றாள்..

இதைப் போல்தானே அவளது மனமும் தவிக்கிறது.. இருக்க இடமில்லாமல்.. ஆதரிக்க ஒரு மனமுமில்லாமல் அவள் மனம் இப்படித்தானே துடிக்கிறது..

அவளுக்கென்று ஒரு மனம் இருக்கத்தான் செய்தது.. அவளுக்கு ஒரு அடைக்கலத்தை கொடுக்கவும் செய்தது.. ஆனால் அது ஹரிதாவுக்கு நிலைத்ததா..?

ஒரு பெருமூச்சுடன் தோளில் பையை எடுத்து மாட்டிக் கொண்டு.. கையில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு.. தனது நடையைத் தொடர்ந்தாள் ஹரிதா..

பாதையின் முடிவில் மீண்டும்.. பிரதான சாலை வர அவளைக் கடந்து சென்ற ஜீப் ஒன்று நின்றது.. அதிலிருந்து எட்டிப் பார்த்த வாலிபன்.. அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்..

"எங்கே போகணும்..?"

"கிருஷ்ணா எஸ்டேட்டிற்கு.."

"நான் அந்தப் பக்கம்தான் போகிறேன்.. ஜீப்பில் ஏறுங்க. கொண்டு போய்விட்டு விடுகிறேன்.."

அவன் இயல்பாக அழைக்க... ஹரிதா தயங்கினாள்..

"நோ.. தேங்க்ஸ்.."

"எதுக்குங்க இந்த பயம்..? நான் உங்களை ஏதும் செய்துவிடுவேன்னா..? அதுக்கு உங்களை எதுக்கு ஜீப்பில் ஏறச் சொல்லணும்..? இந்த மலைப் பாதையில் உங்களை அலேக்கா தூக்கினால் யாரு பார்க்கப் போகிறது..?"

இதை கேட்டதும் ஹரிதாவிற்கு தூக்கி வாரிப் போட்டது.. சுற்று முற்றும் பார்த்தாள்.. ஆளரவமில்லாத பாதை அவளை அச்சுறுத்தியது.

லேசாக உதட்டைக் கடித்துக் கொண்டவளை கேலியாகப் பார்த்தான் அவன்.

"பயப்படாதீங்க.. எனக்கு உங்களை அலேக்காகத் தூக்கும் உத்தேசமில்லை.. இந்த மலைப் பாதையில் தனியாய் நடந்து போவதே கஷ்டம்.. இதில் நீங்க வேற இந்த பெட்டியையும்.. பையையும் சுமந்துகிட்டு நடக்கறீங்க.. நான் வேற அந்தப் பக்கமாக போகிறேன்.. அதனால்.. உதவி செய்யும் மனதோடுதான் கூப்பிட்டேன்.. எனக்கு வேறு உத்தேசமில்லைங்க.. நம்பிக்கைதான் வாழ்க்கை.. என் மேல் நம்பிக்கையிருந்தால் ஜீப்பில் ஏறுங்க.. இல்லைன்னா வேண்டாம்.."

அவன் யார்..? இவள் யார்..? அவன் மேல் இவள் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்..? அவன் பேசிய விதத்தில் அவளுக்கு சிரிப்பு வந்தது..

அவளது சிரிப்பைக் கண்ட அவனும் சிரித்தான்..

"பராவயில்லையே.. சிரிச்சுட்டிங்களே.. உங்களது ஜாக்கிரதையுணர்ச்சியைப் பார்த்து.. எங்கே உங்களுக்குச் சிரிக்கவே தெரியாதோன்னு நினைத்து விட்டேன்.."

ஹரிதா பெட்டியைத் தூக்கி ஜீப்பின் பின்பக்கம் வைத்து விட்டு.. பையைக் கழட்டினாள்.. சுமையிறக்கும் ஆயாச உணர்வு அவள் முகத்தில் தெரிந்தது..

"பார்த்தீங்களா.. நீங்களே அக்கடான்னு ஃபீல் பண்றீங்க தானே.. அப்புறம் எதுக்குங்க அந்த முன் ஜாக்கிரதை முனுசாமி போல ஒரு பார்வை பார்த்தீங்க..?"

அப்போதுதான் அறிமுகமானவனைப் போல இல்லாமல்.. நெடுங்காலமாய் பழகியவனைப் போல.. அவன் பேசிய விதத்தில் ஹரிதாவிடம் கொஞ்ச நஞ்சம் இருந்த தயக்கமும் அகன்று விட்டது.

ஹரிதா ஒரு நிம்மதியுணர்வுடன் ஜீப்பில் ஏறிக் கொண்டாள்..

"நீங்க 'கிருஷ்ணா எஸ்டேட்'டிற்கு என்ன விசயமாய் போகிறிங்க..?" அவன் ஜீப்பை மலைப் பாதையில் லாவகமாய் ஓட்டியபடி வினவினான்..

"வேலை பார்க்கப் போகிறேன்..?"

"என்ன வேலை..?"

அவன் விடாமல் குடையவும்.. ஹரிதா வேறு வழியில்லாமல் பதில் சொன்னாள்..

"அந்த எஸ்டேட்டில் இருக்கும் சகுந்தலா அம்மாளுக்கு உதவியாக இருக்கப் போகிறேன்.."

அவளைத் திரும்பிப் பார்த்தவனின் கண்களில் வியப்பு பளிச்சிட்டது..

"கிருஷ்ணா எஸ்டேட்டில் இல்லாத உதவியாளா..? அதற்காகவா வேலை மெனக்கெட்டு உங்களை வரவழைத்திருக்கிறாங்க..?"

"எனக்கென்னவோ தெரியாது.. விளம்பரம் வந்தது.. அப்ளை பண்ணினேன்.. நேரில் வரச் சொல்லி முன்பணம் அனுப்பிட்டாங்க.. கிளம்பி வந்துவிட்டேன்.."

இப்போது அவன் பார்வையில் அதிகமான வியப்பு பளிச்சிட்டது..

"முன்பின் தெரியாதவங்க ஜீப்பில் ஏறத் தயங்கின.. முன் ஜாக்கிரதை பேர்வழி நீங்க.. எப்படி.. முன்பின் தெரியாத எஸ்டேட்டில் வேலை பார்க்கத் தனியாக கிளம்பி வந்தீங்க.."

இதற்கு பதில் சொல்லாமல்.. ஹரிதா வெளியே வேடிக்கை பார்த்தாள்.. அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்..

"சரி.. விடுங்க.. உங்களுக்கு அதைப் பற்றிப் பேச விருப்பமில்லைன்னு தெரியுது.. அதை விட்டு விடலாம்.. என் பெயர் குமரன்.. உங்கள் பெயர் என்னங்க..? மல்லிகாவா.. ரோஜாவா.. இல்லை தாமரையா..?"

வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவள் திரும்பிச் சிரித்தாள்..

"ஏன் அப்படிக் கேட்கறீங்க..?"

"இல்லை.. உங்கள் முகத்தைப் பார்த்தால்.. பூவைப் பார்த்ததைப் போலவே இருக்கு.. அதனால்.. நிச்சயமாய் உங்கள் பெயர் பூவின் பெயர்களில் ஒன்றாகத்தான் இருக்கும் என்ற யூகம்தான்.."

அவனது நேரடிப் புகழ்ச்சியால் ஹரிதா லேசாக முகம் சிவந்தாள்..

"நீங்கள் சொன்ன பெயர்களில் ஒன்று கூட என் பெயர் இல்லை.. என் பெயர் ஹரிதா.."

"இதுமட்டும் குறைச்சலான பெயரா..? உங்களைப் போலவே அழகான பெயர்தானே..?"

இவன் சுற்றிச் சுற்றி வந்து.. அழகிலேயே நிற்கப் போகிறான் என்று எண்ணிக் கொண்டாள் ஹரிதா..

"ஏங்க.. உங்க பெயரை இவ்வளவு புகழ்கிறேனே.. பதிலுக்கு எனக்கு ஒன்றுமே கிடையாதா..?"

அவனது கேள்வியைக் கேட்ட ஹரிதா திடுக்கிட்டுப் போனாள்..

'இவன் என்ன இப்படிக் கேட்கிறான்..?'

"அதுக்குள்ளே என்னைப் பற்றி உயர்வாய் நினைக்க ஆரம்பிச்சிட்டிங்களா..?" குமரன் கிண்டலாகச் சிரித்தான்.,

"அப்படியெல்லாமில்லை..." ஹரிதாவிற்கு வெட்கமாகி விட்டது.

தனது திடுக்கிடலை.. முகத்தில் பிரதிபலித்திருக்கக் கூடாது என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

"என் பெயரைச் சொன்னேனே.. அதைக் கேட்டுவிட்டு உங்களுக்கு பொருத்தமான பெயர்ன்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமேங்கிற ஆதங்கத்தோடதான் நான்

கேட்டேன்.. நீங்களாக உங்கள் கற்பனைக் குதிரையை தட்டிவிட்டு பறக்க வைத்துக் கொண்டிருந்தால் அதற்கு யார் பொறுப்பு..?"

"நீங்கள்தான் பொறுப்பு.."

ஹரிதா அவனது பேச்சுத்திறமையில் ஈர்க்கப்பட்டு இயல்பாக பேச ஆரம்பித்தாள்..

"நானா பொறுப்பு..?"

"ம்ம்.. நீங்கள்தான்.."

"எதனால் அப்படிச் சொல்றீங்க..?"

"உங்க பெயர் குமரன்.. நீங்களும் இளம் வயது.. உங்களுக்குப் பொருத்தமான பெயர்ன்னு.. நான் உங்கள் பெயரைச் சொன்னால் கேட்க.. நன்றாகவா இருக்கும்..?"

"இருக்காதுதான்.."

குமரன் வாய்விட்டுச் சிரித்தான்.. தூரத்தில் கிருஷ்ணா எஸ்டேட் என்ற பெயர் பலகை தெரிந்தது..

## 2

"உங்கள் எஸ்டேட் வந்துவிட்டது.." குமரன் கைகாட்டினான்..

"என் எஸ்டேட்டா..?" ஹரிதா புருவம் உயர்த்தினாள்..

"ஆமாம்.. நீங்கள் வேலை பார்க்கப் போகும் எஸ்டேட்.."

"அப்படிச் சரியாகச் சொல்லுங்க சார்.. அதை விட்டுவிட்டு என்னவோ.. அது என் சொந்த எஸ்டேட்ங்கிற மாதிரி சொல்லி வைக்காதீங்க.. அப்புறம்.. வேலை யில்லைன்னு சொல்லித் திருப்பி அனுப்பிவிடப் போறாங்க.."

"அப்படியா.. ஹா.. ஹா.."

"உங்களுக்கு சிரிப்பாக இருக்கிறதா..?"

"பின்னே.. உங்களுக்கு கஷ்டமாக இருக்கிறதா..?"

"ஆமாம்.. ஏழையின் கஷ்டம்.. உங்களைப் போல முதலாளிகளுக்கு எப்படித் தெரியும்..?"

"இதைப் பாருடா.. நீங்க இதைப்போல பொதுவுடமைத் தத்துவங்களையெல்லாம் பேசுவீங்களா..?"

"தொழிலாளி பொதுவுடமைத் தத்துவங்களைப் பேசுவதில் உங்களுக்கென்ன ஆச்சரியமிருக்கு..?"

"ஹ.. இந்த முதலாளி.. தொழிலாளிங்கிறவர்க்க பேதமெல்லாம் எனக்கு இல்லை.."

"நீங்க.. கோடியில் ஒருத்தர்..."

"என்னங்க நீங்க.. கவனமா.. ஆயிரத்தில் ஒருத்தர்ங்கிற வார்த்தையை அவாய்ட் பண்ணிட்டிங்க.."

"ஆயிரம் பெரிதா.. கோடி பெரிதா...?"

"எனக்கு ஆயிரம்தான் பெரிது.."

"இதென்னங்க.. உங்க கணக்கு.. புதுக் கணக்கா இருக்கு..?"

"அப்படித்தாங்க.. ஆயிரத்தில் ஒருவனில் தானே ஹீரோ.. வந்து தூள் கிளப்புவார்...?"

இதைச் சொன்னவனை ஹரிதா விசித்திரமாய் பார்த்தாள்.. அவளது பார்வையைக் கண்ட குமரன் புருவங்களை உயர்த்தினான்..

"என்னங்க.. ஒரு மார்க்கமாய் பார்க்கறீங்க..?"

"ஒரு மார்க்கமா..?" ஹரிதா சிரித்தாள்..

"பின்னே.. இப்படிப் பார்த்தால் எப்படிச் சொல்லுவது..? ஏங்க இப்படி ஒரு பார்வையை பார்த்து வைக்கறீங்க..?"

"ஏன் சார்.. யங் ஜெனரேசன் கலக்குகிற காலத்தில நீங்க உங்க தாத்தா காலத்து எம்ஜிஆரை உதாரணம் காட்டினா இப்படிப் பார்க்காமல்.. வேறு எப்படிப் பார்ப்பாங்க..?"

"எம்ஜிஆரைச் சொன்னேனா..? பிளேட்டையே மாற்றிப் போடுகிறீங்களே.. நான் கார்த்திக்கையில்ல சொன்னேன்.."

"கார்த்திக்கைச் சொன்னீங்களா.."

"ம்ம்.. செல்வராகவனோட 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தை நீங்க பார்த்ததேயில்லையா.."

இதைச் சொன்ன குமரன்..

"கோவிந்தா.. கோவிந்தா.." என்று வாய்விட்டுப் பாடிக்காட்டினான்..

"ஓ.. அப்ப நான்தான் தப்பாய் புரிஞ்சுக்கிட்டேனா..?" ஹரிதா மீண்டும் சிரித்தாள்..

"நீங்க இதை மட்டுமா தப்பா புரிஞ்சுக்கிட்டிங்க...? என்னவோ நான் கொடுங்கோல் முதலாளியைப் போலவும்.. நீங்க கஷ்டப்படுகிற தொழிலாளியைப் போலவும் பிலிம் காட்டிக்கிட்டு இருக்கறீங்க.."

ஹரிதா இப்போது பொங்கிச் சிரித்தாள்..

'இப்படிச் சிரித்து எத்தனை நாள்களாகி விட்டது..' என்ற நினைவு அவள் மனதில் எழுந்தது.

சிறு வயதில் அவள் தாயை இழந்திருந்தாலும் சிரிப்பை இழக்காமல் தான் அவள் வளர்ந்திருந்தாள்.. என்று சம்பந்தம் நோயில் விழுந்தாரோ.. அன்றிலிருந்து.. அவளது சிரிப்பு கொஞ்சம்.. கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்து கடைசியில் காணாமல் போய்விட்டது..

அவளது சிரிப்பும் ஒரு நாள் மீண்டது... மீண்ட சுவடு தெரியாமல் அதுவும் தொலைந்து போகும் வரத்தைப் பெற்ற பின்னால் சிரிப்பு எப்படி அவளுக்கு வரும்..?

இன்று.. வார்த்தைக்கு வார்த்தை அவளைச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கும் குமரனுக்கு ஹரிதாவின் மனதிலிருக்கும் மனரணம் தெரியுமா...?

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படி யோசிக்கறீங்க..?"

"நான் கோட்டை விட்டவைகளை யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்.."

"என்னவோ போங்க.. இந்த மலைக்கு ஏற்ற ஆள்தான் நீங்க.."

"ஏன் அப்படிச் சொல்கிறீங்க..?"

"இப்படி அடிக்கடி மோன நிலைக்கு போய் விடுகிறீங்களே.. அதைச் சொல்கிறேன்.."

"அதுக்கும்.. மலைப் பிரதேசத்துக்கும் என்ன சம்பந்தம்..?"

"தவம் செய்ய இந்த இடம் தோதான இடம் பாருங்க.. நான் அதைச் சொன்னேன்.."

"தவமா..? நானா..?"

ஹரிதா இப்போது வாய்விட்டுச் சிரித்தாள்.. அவளது சிரிப்பைக் கனிவோடு பார்த்தான் குமரன்..

சிரிப்போடு அவனது பார்வையைச் சந்தித்த ஹரிதா வியப்புடன் புருவங்களை உயர்த்தினாள்..

"உங்களுக்குச் சிரிக்கவே தெரியாதோன்னு நான் நினைத்தேன்.."

"போதும் சார்.. இதையே எத்தனை தடவைதான் சொல்வீங்க...?"

மலைப்பாதை சீராகத் தெரிய.. இரண்டு பக்கமும் தெரிந்த பசுமையை ரசித்த வண்ணம் வந்தாள் ஹரிதா..

"உங்களுக்கு இயற்கைன்னா அவ்வளவு பிடிக்குமா..?"

"ஆமாம்.."

"அப்போ.. இங்கேயே இருந்து விடுவீங்கன்னு சொல்லுங்க.."

ஹரிதா மௌனமாகி விட்டாள்.. அவ்வளவு நேரமும்.. பேசிக் கொண்டே வந்தவள்.. திடீரென்று மௌனமாகி விடவும் குமரனுக்கு ஒன்றும் புரியவில்லை..

"என்ன ஆச்சு..? ஏனிந்த மௌனம்..?" என்று கேட்டான்..

"ஒன்றுமில்லை..."

"ஒன்றுமில்லைன்னு சொன்னால்தான் ஆயிரம் விசயங்கள் இருக்குன்னு அர்த்தம்.."

"இந்த டயலாக்கை நிறையக் கதைகளில் படித்திருக்கிறேன்.."

"ஓ.. நீங்க கதை படிக்கிற ஆளா..?"

"யெஸ்.."

"அட.. இங்கிலீஸெல்லாம் வருது.."

"இது ஒரு இங்கிலீஷா..?"

"ஸோ.. கதை படிக்கிற ஆள்கிட்ட கதை விட முடியாதுன்னு சொல்லுங்க.."

"தெரிந்துக்கிட்டால் சரி.."

"இப்படி விட்டேற்றியாய் பேசினால் எப்படி..?"

"விட்டேற்றியா..? அப்படின்னா...?"

"அதுக்கு அர்த்தம் தெரியாதா..? என்னங்க நீங்க.. இப்படி இருக்கறீங்க.."

"ஏதோ இருக்கேன்.. நீங்க அர்த்தத்தைச் சொல்லுங்க.."

"பட்டும்.. படாமல்ன்னு அர்த்தம்.."

"நானே தவம் செய்ய இந்த மலைக்கு வந்திருக்கிறேன்.. அப்புறம்.. பட்டும்.. படாமல்தானே இருப்பேன்..?"

இதைக் கேட்ட குமரனின் விழிகளில் பாராட்டு தெரிந்தது..

"என்கிட்டேயேவா..?"

"ஏன்.. நீங்க.. சுனாமியில் ஸ்விம்மிங் போடுகிற ஆளா..?"

"இதைப் பாருடா..."

குமரன் இப்படிச் சொன்னதும்.. ஹரிதா யாரையோ தேடுவதைப் போல.. கண்களுக்கு மேலே.. கையை வைத்து மறைத்துக் கொண்டு பார்த்தாள்..

"யாரைத் தேடுகிறீங்க.."

"நீங்க யாருகிட்ட.. இதைப் பாருடான்னு அடிக்கடிச் சொல்கிறீங்க..?"

"ஜோக்..?"

"அப்படித்தான் வைத்துக்குங்களேன்.."

"இதுக்கு.. இப்ப நான் சிரிக்கணுமா..?"

"அது உங்க இஷ்டம்.."

"தேங்க்ஸ்.."

"எதுக்கு..?"

"கட்டாயம் சிரித்துத்தான் ஆகணுமுன்னு எனக்கு ஆர்டர் போடாததற்கு.."

இப்போது ஹரிதா சிரிக்க ஆரம்பித்தாள்..

"ஹலோ.. ஜோக்கைக் கேட்டவங்கதான் சிரிக்கணும்.. சொன்னவங்க சிரிக்கக் கூடாது.."

குமரன் சொல்லிய விதத்தில் இன்னும் அதிகமாக அவள் சிரித்தபோது.. ஜீப் ஒரு பெரிய மாளிகை போன்ற வீட்டுக்குள் நுழைந்தது..

## 3

"இதுதாங்க உங்க வீடு..."

அந்த பிரம்மாண்டமான பங்களாவைக் காட்டி குமரன் சொல்லியதும்... ஹரிதா அவனை ஆட்சேபிக்கும் வகையில் பார்த்தாள்..

"என்னங்க..?" அவன் புரியாமல் திகைத்தான்..

"ஏன் சார்.. என்னை வேலையை விட்டுத் துரத்தி விடணும்கிற முடிவோட இருக்கீங்களா...?"

"ஏங்க.. தனியே.. தன்னந்தனியேன்னு.. மலை ரோட்டிலே நடந்து வந்து கொண்டிருந்தீங்க.. பாவம்ன்னு ஜீப்பிலே ஏற்றிக்கிட்டு வந்து உங்க வீட்டில் இறக்கி விட்டால்.. என் மேலேயே பழி போடுகிறீங்களே.."

"பார்த்தீங்களா..."

"எதைப் பார்க்கச் சொல்கிறீங்க.."

"போதும் சார்.. ஏற்கெனவே.. நிறைய கடிச்சுட்டிங்க.. இனிமேலும் கடித்தா தாங்க மாட்டேன்.."

"நீங்க என்னைக் குற்றம் சொல்வதிலேயே குறியாய் இருங்க.. எதுக்கு என்னை அந்த பொசுக்குகிற பார்வை பார்த்தீங்க...?"

"இது நான் வேலை செய்யப் போகும் வீடு சார்.. என் வீடு இல்லை..."

"அடடா.. நக்கீரர் பரம்பரையில் பிறந்தவங்க கிட்ட வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டேனே..."

குமரன் ஜீப்பை விட்டு இறங்கினான்.. ஹரிதாவும் இறங்கி.. பெட்டியை கையில் எடுத்துக்கொண்டு.. தோள் பையை தோளில் மாட்டிக்கொண்டாள்...

"இங்கே கொடுங்க.. நான் கொண்டு வருகிறேன்.."

குமரன் பெட்டியை வாங்க கைநீட்ட.. பதட்டத்துடன் பெட்டியை இறுக்கிப் பற்றிக் கொண்டு மறுத்தாள் ஹரிதா..

"யாராவது பார்த்தால்.. நிச்சயம் என்னை வழிப்பறி கொள்ளைக் காரன்னுதான் நினைத்துக்கு வாங்க.. ஏங்க.. உதவி செய்யத்தானே நினைக்கிறேன்.. உங்க பெட்டியை வைத்துக்கொண்டு நான் என்னங்க செய்யப் போகிறேன்..?"

"என் சுமையை.. நான்தான் சார் சுமக்கணும்..?"

இப்படிச் சொன்னவளை விசித்திரமாகப் பார்த்தான் குமரன்..

"ஏன் சார்.. இப்படிப் பார்க்கறீங்க..?"

"நிச்சயமாய் ஆசையாய் பார்க்கலைங்க.."

"அதுதான் உங்க பார்வையிலேயே தெரியுதே.."

"உங்க வயதுக்கு.. நூற்றுக் கிழவியைப் போல பேசறீங்களே.."

"ஓஹோ.."

இப்போது குமரனை ஒரு தினுசாகப் பார்த்தாள் ஹரிதா..

"என்னைச் சொல்லிவிட்டு.. நீங்க ஒரு மார்க்கமா பார்க்கறீங்களே.. என்ன விசயம்..?"

"வீட்டு வாசல் வரைக்கும் உங்க ஜீப்பில் லிப்ட் கொடுத்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ்..."

"அப்பாடா.. ஒரு வழியாய் தேங்க்ஸ் சொல்லிட்டிங்க.."

இதைக் கூறியவாறே குமரன் அவளுடன் வீட்டுப் படியேற முனைய.. ஹரிதா.. பழைய பார்வையை மீண்டும் பார்த்து வைத்தாள்..

"என்னன்னு சொல்லிடுங்க.."

"அதுதான் தேங்க்ஸ் சொல்லிட்டேனே.. இன்னும் எதுக்கு வீட்டுக்குள் வருகிறீங்க..?"

"அதில் உங்களுக்கு என்ன கஷ்டம்...?"

"அது இருக்கு நிறைய.. அதையெல்லாம்.. வார்த்தையில் சொல்ல முடியாது..."

"ஐயோ.. பாவம்..."

"எனக்குப் பாவம் பார்த்தது போதும்.. நீங்க போயிட்டு வாங்க.."

"என்னைத் துரத்துவதிலேயே ஏன் குறியாய் இருக்கீங்க..?"

"அப்படி ஒரு வேண்டுதல் எனக்கிருக்கு.."

"எனக்கும் அதுபோல்தான் தோன்றுகிறது.."

"தோன்றுகிறதில்லையா..? அப்பக் கிளம்புங்க சார்.."

"ஏன்.. கிளம்பாமல் இங்கே நின்று கொண்டிருந்தால் உங்களுக்கென்ன கஷ்டம்...?"

அவன் கிளம்ப மாட்டேனென்று அழிச்சாட்டியம் பண்ண.. ஹரிதா அழமாட்டாத குறையாய் அவனை நோக்கினாள்..

"நீங்களோ யங் மேன்.."

"இதுகூட உங்களுக்கு நினைப்பிருக்கா..?"

"ஏன் அப்படிக் கேட்கறீங்க..?"

"ஜீப்பில் வரும்போது.. இலை... தழையைப் பார்ப்பதைப் போல.. என்னையும்.. உனக்கென்ன கணக்கான்னு பார்த்துக்கிட்டு வந்தீங்களே... அதனால் தான் கேட்டேன்.."

"விளக்கம் பிரமாதம்.. நானும் யங் வுமன்.."

"அதுதான் எனக்குத் தெரியுமே..."

அவன் ரசனையாய் அவளைப் பார்க்க.. ஹரிதா புருவம் சுளித்தாள்..

"விளையாட்டு போதும் மிஸ்டர் குமரன்.. இது நான் வேலை செய்ய வந்த வீடு.. இந்த வீட்டில் இருக்கிறவங்க.. என்னைத் தவறாய் நினைத்துவிடக் கூடாது.."

"நான்.. உங்க கூட வந்தால்.. உங்களை அவங்க தவறாய் நினைப்பாங்களா...?"

"நிச்சயமாய்..."

"அதையும் பார்த்துவிடலாம்..."

குமரன் சுவாதீனமாய் அந்த வீட்டுப் படியேற.. ஹரிதா அரண்டு போனாள்..

"ஹலோ.. சார்.. நில்லுங்க.." என்றபடி அவனைத் தொடர்ந்து பதட்டத்துடன் வீட்டுக்குள் போனாள்..

வேகமாக குமரன் ஹாலுக்குள் நுழைந்தான்.. அவனைத் தடுக்க முயன்றபடி.. பின்தொடர்ந்து வந்த ஹரிதா.. ஹாலின் ஷோபாவில் அமர்ந்திருந்த பெண்மணியைக் கண்டதும் தயங்கி நின்றாள்..

அந்தக் காலத்து பண்டரிபாயைப் போன்ற அழகும்.. கனிவும் நிறைந்த முகம்.. கண்களில் கருணை.. பெரிய மனிதத் தோரணை.. இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றிருந்த அந்தப் பெண்மணி.. குமரனைப் கண்டதும் சிரித்தாள்..

"ஏண்டா.. இந்தப் பெண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு வர இவ்வளவு நேரமா..?"

இந்தக் கேள்வியைக் காதில் வாங்கிய ஹரிதா.. 'ஆ'வென்று வாய் பிளந்தபடி நின்றுவிட்டாள்..

குமரன் அவளைக் கூப்பிட வந்தவனா..?

'சொல்லவேயில்ல..' வடிவேலு பாணியில் அவள் விழிகள் கேட்க.. அதைக் கண்டு கொள்ளாதவன் போல..

"ஏன் பெரியம்மா.. பஸ் ஸ்டாண்டு என்ன பக்கமாகவா இருக்கு...? அங்கேயிருந்து வர நேரமாகாதா..?" என்று கேட்டான் அவன்..

'பெரியம்மாவா..?' அவளது விழிகள் இன்னும் விரிய..

"வாம்மா.. நான்தான் சகுந்தலா தேவி.. என்னைக் கவனித்துக்க ஆள் வேண்டும்ன்னுதான் உன்னை வேலைக்கு வரச் சொல்லியிருக்கிறேன்.." என்றாள் சகுந்தலா..

"பெரியம்மா.. இவங்க இயற்கையை ரசிக்கிறவங்க போல இருக்கு.. என் ஜீப்பை விட்டுவிட்டு.. தனியாய் மலைப் பாதையில் நடந்துதான் வருவேன்னு அடம் பிடித்தாங்க.. அதனால்தான் நேரமாகிடுச்சு..."

'பொய்.. கிருஷ்ணா எஸ்டேட்டிலிருந்து வருகிறேன்னு சொல்லாமல்.. லிப்ட் கொடுக்கிறதைப் போலப் பேசிவிட்டு.. என்னமாய் சரடு விடுகிறான்.. பார்..' ஹரிதா மனதிற்குள் கூவினாள்..

"அப்படியாம்மா.. உனக்கு இயற்கையை அவ்வளவு பிடிக்குமா..? ரொம்ப நல்லதாப் போச்சு.. இங்கே வருகிறவங்க.. இரண்டு மூன்று நாள்கள் தங்குவதுக் குன்னா சந்தோசமா தங்குவாங்க.. அதுக்கு மேல் தங்கணும்ன்னா அலறிவிடுவாங்க.. உன்னைப் பார்த்தால்.. நீ பாதியில் ஒடிவிட மாட்டேன்னு தோணுது.. கடைசி வரை என் கூட இருந்து விடுவாய்ன்னு நினைக்கிறேன்.. சரிதானேம்மா...?"

சகுந்தலா கூறிய வார்த்தைகளில் எதுவோ ஒளிந்திருப்பதைப் போலத் தோன்ற குமரன் அவளைக் கூர்ந்து பார்த்தான்..

## 4

சகுந்தலாவின் வார்த்தைகளைக் கேட்ட ஹரிதா இதழ் பிரியாமல் சிரித்தாள்..

"எனக்கும் அதுதான் எண்ணம் மேடம்.. ஆனால்.. ஆண்டவனின் கட்டளை எதுவென்றுதான் தெரிய வில்லை.." அவளது குரலில் ஒருவிதச் சோகம் தென்பட்டது.

குமரன் அந்தக் குரலில் தெரிந்த நிராசையில் பாதிக்கப்பட்டான்.. அவளது விழிகளில் நிரந்தரமாக குடிகொண்டிருந்த சோகத்தை அப்போதுதான் பார்த்தவன்.. யோசனையில் ஆழ்ந்தான்..

கொடி போன்ற உடலுடன்.. அழகான தேவதை போன்று தோற்றமளித்த அந்த இளம் வயது யுவதியின் கண்களைப் பார்த்தவனுக்கு காரணமே புரியாமல் மனம் வேதனைப்பட்டது..

'இந்த இளம் வயதில் இந்தப் பெண்.. ஏன் இத்தனை சோகமாக இருக்கிறாள்..?'

சகுந்தலாவுக்குள்ளும் அதே எண்ணம் ஓடியதோ என்னவோ.. அவள்.. ஹரிதாவை இரக்கத்துடன் பார்த்தாள்..

"கடவுள் கருணையுள்ளவர்ம்மா.. அவர் யாரையும் சோதிப்பதில்லை.."

"நான் சோதனைகளைத் தவிர.. வேறு எதையும் சந்தித்ததில்லை மேடம்.."

"சோதனைகளைச் சந்திக்காத மனிதர்கள் இந்த உலகத்தில் இல்லைம்மா.. சோதனைகள் இடத்துக்கு இடம் மாறுபடும்.. அவ்வளவுதான்.. ஒரு கட்டத்தில் சோதனைகள் நின்றுவிடும்..."

ஹரிதா பதில் சொல்லாமல் மௌனித்தாள்.. அவளது மௌனம் உணர்த்திய துக்கத்தை சகுந்தலாவினாலும் குமரனாலும் புரிந்து கொள்ள முடிந்தது..

சகுந்தலா பேச்சின் போக்கை மாற்ற உத்தேசித் தவளாய் குமரனைப் பார்த்தாள்.. அவளது விழி சொல்லிய செய்தியைப் புரிந்து கொண்டவனாக.. குமரன் அவனது இயல்பான உற்சாகத்துடன்,

"என்ன பெரியம்மா இது.. இப்படி இரண்டு பேரும் மாற்றி மாற்றி சோக ரசத்தைப் பிழிந்து தள்ளுகிறீங்க..? அப்படியே கருப்பு.. வெள்ளை சினிமாவைப் பார்த்ததைப் போலவே இருக்கு.. நீங்க சொன்ன ஒரு வார்த்தைக்காக.. இவங்களை.. இவ்வளவு கஷ்டப்பட்டு கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கிறேனே.. எனக்கு அட்லீஸ்ட் ஒரு கப் காப்பி கூடக் கொடுக்கக் கூடாதா..?" என்று கேட்டான்..

அவன் பேசிய விதத்தில் சகுந்தலா சிரித்து விட.. ஹரிதா அவளுடைய சோகத்திலிருந்து மீண்டாள்..

"ஏண்டா.. நீ என்ன இந்தப் பெண்ணைச் சுமந்துக் கிட்டா வந்த..?" சகுந்தலா வேடிக்கையாகக் கேட்டாள்..

"அது கூடப் பரவாயில்லை பெரியம்மா.. இவங்க உம்முன்னு வந்ததுதான் எனக்குப் பெரிய சுமையாய் இருந்தது.." குமரன் ஹரிதாவைப் பார்த்துக் கொண்டே கூறினான்..

'பொய் சொல்வதற்கு ஒரு அளவே இல்லையா...?' ஹரிதா விழிகளால் கேட்டாள்..

அதை அறியாதவனைப் போன்ற ஒரு பாவனையுடன் அப்பாவியாய் முகத்தை வைத்துக்கொண்டு...

"என்னங்க.. எதையோ சொல்ல நினைக்கிறதைப் போல இருக்கு...?" என்று அவளிடம் கேட்டான் குமரன்..

சகுந்தலாவின் முன்னால் எதையும் பேச முடியா தவளாய் ஹரிதா முறைக்க.. அதற்கும்..

"பதில் சொல்லாமல் இப்படிப் பார்த்தால் எப்படிங்க..?" என்று கேட்டு வைத்தான் குமரன்..

ஹரிதா செய்வதறியாதவளாக சகுந்தலாவைப் பார்க்க.. அவள் சிரித்துக் கொண்டே குமரனை அதட்டினாள்..

"டேய்.. நீ வாயடிப்பதற்கெல்லாம் ஹரிதா லாயக்கில்லை.. பாவம்.. அவளே பேசாமடந்தை..."

"பேசாமடந்தையா..? யார்.. இவங்களா..? குட் ஜோக்.."

வரும்வழியில் ஹரிதா பேசிக் கொண்டே வந்ததை நினைவு கூர்ந்தவனாக

அவன் சொல்ல.. ஹரிதா உண்மையிலேயே பேசாமடந்தையாகி.. அந்த ஹாலில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்களையும்.. படங்களையும் பார்வையிட ஆரம்பித்தாள்..

வேலை செய்யும் பெண்.. காபிக் கோப்பைகள் கொண்ட டிரேயுடன் வந்துவிட

"முதலில் காபியைக் குடிடா.." என்றாள் சகுந்தலா..

"இவங்களுக்கு காபி இல்லையா..?" குமரன் காபியை உறிஞ்சியபடி வினவினான்..

"கப் யாருக்குன்னு நினைத்தே...?" சகுந்தலா வினவ.. வேலைக்காரப் பெண் ஹரிதாவிடம் காபியை நீட்டினாள்..

"அப்போ.. அதுவும் எனக்கில்லையா..?"

"இவன் மொடாக்குடியன் ஹரிதா..."

"காபியைக் குடிப்பதில் மொடாக்குடியன்னு கரெக்டாகச் சொல்லுங்க பெரியம்மா.. அவங்க வேற குடியை நினைத்துவிடப் போறாங்க.."

"போதும்டா அரட்டை..."

"காபியைக் குடித்துவிட்டுக் கிளம்புன்னு சொல்லாமச் சொல்கிறீங்க...?"

"புரிந்து கொண்டால் சரி..."

"இந்தப் பெண்களே இப்படித்தான்.."

"எப்படித்தான்..?"

"வேலை முடிந்ததும் கழட்டி விடுவதில் கெட்டிக்காரங்க.."

குமரன் ஜாடையாக தன்னைக் குறிப்பிடுவதை ஹரிதா உணர்ந்து கொண்டாள்..

'ஆமாம்.. நாங்க அப்படித்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கறீங்க..?' என்று கேட்க வெகுவாய் ஆசைப் பட்டாள்.. ஆனால் சகுந்தலா இருந்ததால்.. கேட்க நினைத்ததைக் கேட்க அவளால் முடியவில்லை..

அவள் மனதின் அபிலாசையை அறிந்தவளைப் போல..

"ஆமாண்டா.. நாங்க தாய்க்குலம்.. அப்படித் தான் இருப்போம் அதுக்கு இப்ப என்னாங்கிற...?" என்று கேட்டாள் சகுந்தலா...

ஹரிதாவிடம் விழிகளில் தெரிந்த திருப்தியைக் கண்டு கொண்ட குமரனின் விழிகளில்

'அப்படியா..?' என்ற பாவனை தெரிந்தது..

"தெரியாமல் சொல்லிவிட்டேன் பெரியம்மா..." என்று கன்னத்தில் போட்டுக் கொண்டவன்..

"ஹப்பா.. அச்சு அசல் சொர்ணாக்காதான்.." என்று மெதுவான குரலில் முணுமுணுத்தான்..

அவன் முணுமுணுத்தது ஹரிதாவின் காதில் தெளிவாக விழுந்து விட.. சகுந்தலாவிற்கு சரியாகக் கேட்கவில்லை..

"என்னது..? இவன் என்ன சொல்கிறான்ம்மா...?" என்று ஹரிதாவிடமே அவள் வினவினாள்...

'சொல்லிவிடவா...?' ஹரிதா விழிகளால் மிரட்ட..

'ஐயையோ.. வேண்டாம்..' குமரனின் விழிகள் மறுத்தன..

'அஃது.. அந்த பயம் இருக்கட்டும்..' ஹரிதாவின் பார்வை கூறியது..

'யாரு.. நீங்க...?' குமரனின் விழிகளில் கேலி மின்னியது..

அப்போது வாசலில் கார் சத்தம் கேட்க.. சகுந்தலா சட்டென்று ஹரிதாவைப் பார்த்தாள்.. அவள் விழிகளில் ஏதோ இருந்தது..

"கிருஷ்ணா வந்துவிட்டான்.." என்றாள்..

ஹரிதாவின் பக்கம் திரும்பிய குமரன்.. அப்போதுதான் அதை உணர்ந்தான்..

ஹரிதாவின் முகம் மாறிவிட்டது.. சோகம்.. துக்கம்.. சந்தோசம்.. கோபம்.. யாசிப்பு.. எதிர்பார்ப்பு.. பரபரப்பு.. பயம்.. கருணை.. தவிப்பு.. என்று.. நவரசங்களையும் தாண்டிய பல ரசங்களை அவளது முகம் பிரதிபலித்தது..

அவளது உடலில் ஓர் அதிர்வு தோன்றுவதை குமரன் ஆச்சரியத்துடன் கண்டான்.. அதைவிட ஆச்சரியமாய்.. சகுந்தலா.. ஹரிதாவின் அந்த நிலையை எதிர்பார்த்தவளைப் போல இயல்பான முகத்துடன் அதை அங்கீகரிக்கும் விதத்தில் அமைதியாக இருந்தாள்..

'இவளுக்கு கிருஷ்ணாவைத் தெரியுமா...? இவள் யார்...?'

5

குமரனின் மனதில் அந்தக் கேள்வி தோன்றியது...

'இவளோ வேலை செய்ய வந்தவள்.. இந்த எஸ்டேட்டிற்கு புதியவள்.. இவளுக்கு எப்படி கிருஷ்ணாவைத் தெரிந்திருக்க முடியும்..?'

ஆனால்.. ஹரிதாவின் பார்வை ஆவலுடன் வாசலை நோக்கிப் பாய்ந்தது.. அவளது முகத்தில் எதிர்பார்ப்புடன் கூடிய தவிப்பு தோன்றியிருந்தது.. அதை குமரனால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது...

'இல்லை.. இவளுக்கு கிருஷ்ணாவைத் தெரிந்திருக் கிறது.. ஆனால்.. இவள் எப்படி இங்கு வேலை செய்ய வந்தாள்..?'

ஆராயும் பார்வையோடு குமரன்.. ஹரிதாவைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கூட உணராமல்.. ஹரிதா.. வாசலை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

கார் கதவு திறந்து மூடப்படும் சத்தம் கேட்டது.. தொடர்ந்து அழுத்தமான காலடியோசை அவர்களை சமீபித்தது.. அந்த ஹாலுக்குள்.. 'கிருஷ்ணா' என்று அழைக்கப்படும் 'சுரேஷ் கிருஷ்ணா' நுழைந்தான்..

சட்டென்று ஹரிதா பார்வையைத் தழைத்துக் கொண்டதை குமரன் கவனித்து விட்டான்.. அவளிடம் தென்பட்ட அனைத்து ரசங்களும்.. இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விட்டிருந்தன.. உணர்வுகளைத் துடைத்துவிட்ட கல் போன்ற முகத்துடன்.. எந்தவிதச் சலனமும் இல்லாமல்.. அவள் அமர்ந்திருந்தாள்..

"ஹாய் கிருஷ்ணா..."

குமரனின் அழைப்பிற்கு திரும்பிப் பார்த்த சுரேஷ் கிருஷ்ணா.. உயரமாக.. சிவந்த நிறத்துடன்.. அடர்ந்த மீசையுடன்.. வெகு கம்பீரமாக இருந்தான்..

ஒருமுறை பார்த்தவர்களை.. திரும்பவும் பார்க்க வைக்கும் தோற்றப் பொலிவும்.. கவர்ச்சியும்.. அவனிடமிருந்தன..

முகத்தில் ஓர் கடினத்தன்மை தெரிந்தது.. கூர்மையான பார்வையைத் தந்து கொண்டிருந்த தீட்சண்யமான விழிகள்.. எதிராளியின் ஆழ் மனத்தையும் ஊடுருவிவிடும் ஆற்றலைக் கூறின.. நிமிர்ந்த நடை.. அவனது ஆண்மையையும்.. அஞ்சாத குணத்தையும்.. பிரதிபலித்தது..

"ஹாய்.. குமரன்.. என்ன அதிசயமாக காலையிலேயே எங்கள் வீட்டிற்கு விஜயம் செய்திருக்கிறாய்..?"

சுரேஷ் கிருஷ்ணா.. குமரனை நெருங்கினான்.. ஹரிதா முகத்தை முற்றிலுமாக திருப்பிக் கெண்டாள்.. அதை கவனத்தில் பதித்தபடி சுரேஷ் கிருஷ்ணாவைப் ஏறிட்டுப் பார்த்தான் குமரன்..

"பெரியம்மா வரச் சொல்லியிருந்தாங்க.."

"யாரை..? உன்னையா..?"

"இல்லைடா.. என் வீட்டு ஆட்டுக்குட்டியை.. வரச் சொல்லியிருந்தாங்க.."

"நீ ஆட்டுக்குட்டியைக் கூட வளர்க்கிறாயா...?"

"ஏண்டா சொல்ல மாட்டே.. உன் வீட்டுக்கு வருகிறவங்களை அழைத்துக் கொண்டு வர.. உனக்குப் பதிலாக நான் போகிறேன் பார்.. என்னைச் சொல்ல வேண்டும்.."

"என் வீட்டுக்கு யார் வந்தது...?"

"அம்மாவின் செகரட்டரி.."

"உன் அம்மாவின் செகரட்டரியா...?"

"ஊஹூம்.. உன்னுடைய அம்மாவின் செகரட்டரி.."

"இதைப் பாருடா.. செகரட்டரி வைத்துக் கொள்கிற அளவுக்கு என் அம்மா பெரிய பிஸினெஸ் வுமன் ஆகிவிட்டாங்களா...?"

அப்போதும் சுரேஷ் கிருஷ்ணா ஹரிதாவைக் கவனிக்காமல் சகுந்தலாவின் மீது பார்வையை ஓட்டினான்..

அவள் மகனை செல்லமாக முறைத்தாள்..

"ஏண்டாப்பா.. நான் செகரட்டரி வைத்துக் கொண்டால் ஆகாதா..? பெரிய பிஸினெஸ் வுமன் தான் செகரட்டரி வைத்துக் கொள்ளணுமா..?"

"அப்படி யாரும்மா சொன்னது..? ஏண்டா குமரா, நீ ஏதும் அப்படிச் சொன்னாயா..?"

"டேய்.. இந்த விளையாட்டுக்கு நான் வரவில்லை.. நீ ஓட்டிப் பார்க்க நான்தான் கிடைத்தேனா...?"

"ஹா.. ஹா.. இருந்தாலும் அம்மா.. உங்களுக்கு செகரட்டரி வேணும்ங்கிறது கொஞ்சம் ஓவர்தான்.."

"கேட்டாயாடா குமரா..."

"கேட்டுக்கிட்டுத்தான் இருக்கிறேன் பெரியம்மா..."

"இவன் பிஸினெஸ் விசயமாய் மலையை விட்டு இறங்கினால்.. மாதக் கணக்கில் வர மாட்டான்.."

"அதுதான் எனக்குத் தெரியுமே.."

"இவ்வளவு பெரிய வீட்டில்.. நான் தனியாக.. கொட்டு.. கொட்டுன்னு விழித்துக்கிட்டு உட்கார்ந் திருக்கணுமாம்.. இவன் சொல்கிறான்.."

"த்சு.. த்சு..."

குமரன் படுபரிதாபமாக 'த்சு' கொட்ட.. சுரேஷ் கிருஷ்ணா அதை சுவாரஸ்யமாகப் பார்த்தான்..

"இப்ப எதுக்குடா இத்தனை 'த்சு...' போடறே...?"

"அம்மா பாவம்டா..."

"யாரு..? என் அம்மா பாவமா..? நீ அடி வாங்கப் போகிற.. இவ்வளவு பெரிய எஸ்டேட்டை ஒற்றை மனுஷியாய்

நிர்வகிக்கும் நிர்வாகியைப் பார்த்து நீ 'பாவம்' போடுகிற இவங்களும் அதை தலையைத் தலையை ஆட்டிக் கேட்டுக்கிட்டு.. வராத கண்ணீரை துடைத்துச்சு கிட்டு இருக்காங்க.."

"இரக்கமில்லாமல் பேசாதேடா..."

"அப்படியா...?"

"அம்மாவைப் பாவம்.. தனிமை வாட்டுது..."

"திரும்பவும்.. 'பாவம்' போட்டு விட்டாயா..? ஏண்டா இந்த வீட்டில் ஒரு டஜன் வேலையாட்கள் வேலை செய்கிறாங்க.. வாசலில் துப்பாக்கியோடு ஷிப்ட் மாத்தி.. இரண்டு செக்யூரிட்டிகளை போட்டிருக்கிறேன்.. போதாத குறைக்கு ராஜபாளையம் நாய்.. இதெல்லாம் அம்மாவுக்கு துணையில்லையா...?"

"ஆயிரம்தான் இருந்தாலும் அவங்க வேலையாள்கள் தானேடா...?"

"வேலை செய்கிறவர்களாய் இருந்தாலும்.. பரம்பரையாய் வேலை செய்கிறவங்க.. இந்த எஸ்டேட்டின் மீது விசுவாசமாய் இருப்பவங்க.."

"அது போதுமா கிருஷ்ணா..."

"இத்தனைக்கும் மேலாக.. அடுத்த எஸ்டேட்டின் சொந்தக்காரனாய் நீ இருக்கிற.. என் அம்மாவின் தோழி பெற்றெடுத்த அன்பு மகன்.. பாசமலர்.. நீ அம்மாவைப் பார்த்துக்கிறதை விடவா.. ஒரு செகரட்டரி பார்த்துக்கப் போகிறாங்க..?"

"என்னால் பெரியம்மா கூடவே இருக்க முடியுமா..?"

"அப்படிச் சொல்லிக்கிட்டே.. நாள் பூராவும்.. இங்கேயே அம்மாவின் முந்தானையை பிடித்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருக்கிறவன் தானேடா நீ...?"

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்கையில் சகுந்தலா தேவியின் குரல்.. தீர்மானமாக ஒலித்தது..

"இதோ பார்  கிருஷ்ணா.. இது நீ சுற்றும் மும்பை.. டெல்லி.. சென்னை போல.. சிட்டியில்லை.. மலைப் பிரதேசம்.. பச்சைப் பசேல்ன்னு.. செடியும்.. கொடியும்.. பகலில் பார்க்க நன்றாக இருக்கும்.. இருட்டில் அவைகளே நம்மை பயமுறுத்தும்..."

"இப்ப எதுக்கும்மா இதைச் சொல்கிறீங்க..?"

"எனக்கு வயதாகிவிட்டதுப்பா.. ஆடி.. ஓடி.. வேலைபார்க்கிற வயது எனக்கில்லை.. உன் அப்பா போன பின்னால்.. அவர் கட்டிக் காப்பாற்றிய எஸ்டேட்டை

கட்டிக் காப்பாற்றணும்கிற ஒரே நோக்கத்தோடு இத்தனை நாளாய் ஓடிக்கிட்டு இருந்தேன்.. இனியும் என்னால் அது முடியாது.."

அது நேரம் வரை.. குறும்புப் பார்வையுடன் குமரனிடம் வாயாடிக் கொண்டிருந்த சுரேஷ் கிருஷ்ணாவின் முகத்திலிருந்த விளையாட்டுத்தனம் ஓடி மறைந்து விட.. அவன் தீவிரமான முகத்துடன் தாயைப் பார்த்தான்..

6

"நீங்க ஏனம்மா இங்கே தனியா இருக்க வேண்டும்..? என்னுடன் வந்து விடலாமே.. நமக்கு மும்பையிலும்.. சென்னையிலும் வீடுகள் இருக்கின்றனவே.."

மகனின் பேச்சைக் கேட்டதும் புன்முறுவல் பூத்தாள் சகுந்தலா...

"அது சரி.. உனக்கு சென்னையிலும்.. மும்பையிலும் மட்டும்தான் வீடுகளும்.. தொழில்களும் இருக்கின் றனவா..? வெளிநாடுகளில் இருக்கும் வீடுகளையும்..

தொழில்களையும் கணக்கில் கொண்டு வராமல் விட்டு விட்டாயே..."

கிருஷ்ணாவின் முகத்தில் வெற்றிக் களiயுடன் கூடிய மனத்தாங்கல் தோன்றியது..

"எங்கே.. எவ்வளவு சொத்துக்கள் இருந்து என்ன பயன்ம்மா..? உங்களுக்குத்தான் இந்த மலையை விட்டு கீழே இறங்க மனமில்லையே..."

"ஏன்னா.. இது உன் அப்பாவின் எஸ்டேட்.."

"மத்ததெல்லாம் உங்கள் மகனின் சொத்துக்கள்.. அதில் உங்களுக்கு உரிமையில்லை.. அப்படித்தானேம்மா."

"இல்லை கிருஷ்ணா.. இங்கே உன் அப்பாவைப் பற்றிய நினைவுகளும்.. அவரின் நிழலும் இருக்கின்றன.."

அதற்கு மேல் பேசமுடியாமல் கண்கலங்க மௌனித்து விட்டாள் சகுந்தலா.. அவளது உணர்வுகளைப் புரிந்தவர்களாய் கிருஷ்ணாவும்.. குமரனும் அவளுடனே மௌனித்து விட்டார்கள்..

அந்த விஸ்தீரமான.. பெரிய ஹாலில் சற்று நேரம் அமைதி நிலவியது.. அந்த அமைதியை முதலில் கலைத்தவன் குமரன்தான்..

"அடடா.. போதும் பெரியம்மா.. விட்டால்... நீங்களும் கிருஷ்ணாவும்.. விடிய.. விடிய.. இதைப் பற்றி பஞ்சாயத்துப் பண்ணிக் கொண்டிருப்பீங்க போல இருக்கே.. இதோ பார் கிருஷ்ணா.. பெரியம்மாவுக்கு துணையாக.. அவங்களின் சார்பாக.. எஸ்டேட்டின் கணக்கு வழக்குகளை சரிபார்த்துக் கொடுக்க ஒரு செகரட்டரி தேவைப் படுவது உண்மை தான்ப்பா.."

"எனக்கென்னவோ இன்னும் இதில் உடன் பாடில்லை குமரா.. நம் எஸ்டேட்டின் மேனேஜரும்.. மற்ற ஆபீஸ் ஸ்டாப்புகளும் செய்யாததையா இந்தப் பெண் செய்து விடப் போகிறாங்க..? நான் வரும் போது கணக்குகளை சரிபார்த்துச் சொல்ல மாட்டேனா...?"

"இவன் சொல்வது எஸ்டேட்டிற்கு பொருந்தும் குமரா.. வீட்டுக்குப் பொருந்துமான்னு கேளு..."

"ஏன்.. வீட்டுக்கு என்னவாம்...?"

"எனக்குன்னு வருகிற தபால்களைப் படிக்க.. நான் வீட்டிலிருந்தபடியே கம்ப்யூட்டரில் நம் எஸ்டேட்டின் கணக்கு வழக்குகளை சரிபார்க்கன்னு.. நிறைய இருக்கு குமரா.. அதோடு.. எனக்கு இப்போதெல்லாம்.. உடம்புக்கும் முடிவதில்லை.. நேரா நேரத்திற்கு சாப்பிட்டயான்னு கேட்டு ஒரு மாத்திரை மருந்தைக் கொடுக்க.. எனக்குன்னு யாரிருக்கா சொல்லு குமரா..."

இப்போது சகுந்தலாவின் குரல் உண்மையிலேயே தழதழத்து விட.. குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டான் கிருஷ்ணா..

"அம்மா.. உங்களுக்கும்.. எனக்கும் நடுவில் குமரன் எதுக்கு..? நீங்க என்னிடம் நேரடியாய் பேச மாட்டீங்களா..?"

தாயின் மடியைத் தேடும் மழலையின் குரலாய் மகனின் குரல் இருப்பதை உணர்ந்து கொண்டாள் அந்தத் தாய்.. மகனைத் தவிக்க விடக் கூடாதென்ற தாய்மையின் பரிதவிப்பு அவள் இதயத்தில் எழுந்தது..

"அப்படியில்லை கிருஷ்ணா.. நீயும் உன் தொழில்களை விட்டு விட்டு.. என்னுடனேயே இருக்க முடியாதில்லையா..? நான் அப்படிக் கேட்பதும் நியாய மில்லையே.. அதனால்.. என் கூடவே இருப்பதைப் போல ஒரு செகரட்டரியை வேலைக்கு வைத்துக் கொள்ள நினைத்தேன்.. அது தப்பா..? அவள் என் சார்பாக இந்த எஸ்டேட்டையும்.. வீட்டையும் நிர்வகிப்பாள்.. நானும் நிம்மதியாக வீட்டில் ஓய்வெடுப்பேன்.."

சகுந்தலாவின் குரலில் தொனித்த கோரிக்கையைக் கேட்டு மனம் நெகிழ்ந்தான் கிருஷ்ணா.. சகுந்தலாவின் அருகே அமர்ந்து அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டவன்..

"இதற்கு என் அனுமதி வேண்டுமாம்மா..? கிருஷ்ணா.. நான் ஒரு செகரட்டரியை வேலைக்கு வைத்திருக்கிறேன்னு..

ரைட் ஆன்ட் ராயலாய் நீங்க சொல்ல வேண்டியதுதானே..?" என்று கேட்டான்..

"இதுவரை அப்படித்தானேடா பேசிக்கிட்டு இருக்காங்க..?" குமரன் புருவங்களை உயர்த்திக் கேட்டான்..

"ஓகே.. லீவ் திஸ் மேட்டர்.. அம்மா ஒரு செகரட்டரியை அப்பாயிண்ட் பண்ணியிருக்காங்க.. அவங்க இந்த வீட்டோடு செகரட்டரியாய் அம்மா கூடவே தங்கப் போறாங்க.. ஆம்.. ஐ.. கரெக்ட்...?" கிருஷ்ணா சிரித்தான்..

"அப்பா.. ஒரு வழியாய் விசயத்துக்கு வந்த.. இல்லேன்னா.. உனக்கும்.. பெரியம்மாவுக்கும் இடையில் பேசிப்பேசியே ஓய்ந்து போயிருப்பேன்.." குமரன் நிம்மதிப் பெருமூச்சைவிட...

"அடேங்கப்பா.. நீ பெரிய மௌனி.. எனக்கும்.. என் அம்மாவுக்கும் இடையில் பேசிக் களைச்சுட்டே.. போடா.." என்றான் கிருஷ்ணா..

"அதுதானே.. வாயைத் திறந்தால் ஓட்டைப் பானையில் நண்டை விட்டதைப் போல.. லொட.. லொடன்னு பேசிக்கிட்டு இருப்பான்.. இதில் என் மகன்மேல பழியைப் போடுகிறானே.." சகுந்தலா தன் பங்குக்கு குமரனை வாரினாள்..

"எனக்குத் தேவைதாண்டா.. நினைத்தால் நீயும்.. அம்மாவும் எதிர் எதிர் அணியில் நின்று மோதிக்குவீங்க.. அடுத்த நிமிசமே ஒன்று சேர்ந்துக்குவீங்க.. நீங்க மோதிகிட்டால் விலக்கி விட இந்த குமரன் வந்து நிற்கணும்.. நீங்க சேர்ந்துக்கிட்டா வாரி விடவும் இந்த குமரன்தான் அகப்படணும்.. நல்லாக் கூட்டுச் சேர்ந்துக் கிட்டீங்கடா..." குமரன் போலியாய்க் கோபப்பட்டான்..

"விடுடா.. விடுடா.. நீ யாரு..? என் நண்பன்டா.." கிருஷ்ணா குமரனின் தோள் மீது கை போட்டுக் கொண்டான்..

"இப்பக் கொஞ்சுவியே.." குமரன் கொஞ்ச நேரம் பிகு செய்து விட்டு.. ஹரிதாவின் பக்கம் திரும்பினான்..

"பார்த்தியா.. உன்கூட நடந்த பஞ்சாயத்தில் இவங்களை உனக்கு அறிமுகப்படுத்த மறந்து விட்டேனே.. இவங்கதான் ஹரிதா.. அம்மா புதிதாக வேலைக்கு சேர்த்திருக்கும் செகரட்டரி..."

குமரன்.. சுரேஷ் கிருஷ்ணாவின் முகத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டே ஹரிதாவை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்..

"ஹலோ.." என்றபடி ஹரிதாவின் முகத்தைப் பார்த்த சுரேஷ் கிருஷ்ணாவின் முகம் பேயறைந்ததைப் போல கணநேரத்தில் மாறிப் போனது..

ஹரிதா அவனை நிமிர்ந்து பார்த்தவாறு எழுந்து நின்று கரம் குவித்தாள்..

'இவளா...??' கிருஷ்ணாவின் பார்வையில் தெரிந்த அதிர்ச்சியையும்.. அவன் வருவதற்கு முன்னால் அவனை எதிர்பார்த்த பரபரப்பில் இருந்தவள்.. அவன் வந்த பின்னால்.. அறிமுகமற்ற பார்வை பார்த்தபடி கரம் குவிப்பதையும்.. கணக்கிடும் பார்வையோடு கவனமாக பார்த்துக் கொண்டிருந்தான் குமரன்..

"என்ன பெயர் சொன்ன..?" கிருஷ்ணாவின் புருவங்கள் மேலேறி முடிச்சிட்டன..

"ஹரிதாடா.. ஹரிதாதான் இவங்க பெயர்..." குமரன் அழுத்தமான குரலில் சொன்னான்..

"ஹரிதாவா...?" கிருஷ்ணாவின் குரலில் கோபம் தொனித்தது.. அது ஏன் என்று குமரனுக்குப் புரியவில்லை.

## 7

அதுவரை அமைதியான முக பாவனையுடன்.. சிரித்துப் பேசும் மனநிலையுடன் இருந்த சுரேஷ் கிருஷ்ணாவின்

மாற்றத்திற்கான காரணத்தை குமரனால் கண்டறிய முடியவில்லை..

கடுமையான முகபாவத்துடன் அங்கேயிருந்த சோபாவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்த கிருஷ்ணா.. அலட்சியமாக ஹரிதாவை சொடக்கு போட்டு அழைத்தான்.

அவனது விரல் தந்த சொடக்கின் ஓசையில் அவனைப் பார்த்த ஹரிதா.. அவனது அலட்சியத்தால் துளிக் கூடப் பாதிக்கப்படாதவளாக அவன் முகம் பார்த்தாள்...

"கிவ் யுவர் செர்டிபிகேட்ஸ்..."

கைப்பையிலிருந்த அவளுடைய சான்றிதழ்கள் அடங்கிய ஃபைலை எடுத்து அமைதியாக அவனிடம் நீட்டினாள் ஹரிதா..

அதை வாங்கி.. புரட்டிப் பார்த்தவன்.. அவளை அதே அலட்சியத்துடன் பார்த்தபடி..

"இந்தப் போலி சர்டிபிகேட்களை எங்கே தயாரித்தாய்..?" என்று கேட்டான்.

"கிருஷ்ணா..!" சகுந்தலா கோபக்குரலில் மகனின் செய்கையை ஆட்சேபித்தாள்..

"நீ பேசுவது கொஞ்சம் கூட நன்றாக இல்லை.. நம் வீட்டைத் தேடி வேலை செய்யவென்று ஊர் விட்டு ஊர் வந்திருக்கும் பெண்ணிடம் இப்படியா பேசுவது..? இது கொஞ்சம் கூட நாகரிகமான செய்கையில்லை.."

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது அம்மா.."

"எனக்கா ஒன்றும் தெரியாது...?"

"ஆமாம்.. உங்களுக்கு இந்த உலகத்தைத் தெரியாது.. இது வேடதாரிகளின் உலகம்.."

"எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்..?"

"போயும்.. போயும்.. இந்தப் பெண்ணை நம்பி.. உங்களின் செகரட்டரி வேலையை தூக்கிக் கொடுத்திருக்கிறீங்களே

அதை வைத்துச் சொல்கிறேன்.."

"ஏன்..? இந்தப் பெண்ணிடம் என்ன குறை கண்டாய்..?"

"இந்தப் பெண்ணே ஒரு குறைதான்.."

"கிருஷ்ணா...?"

"என் மேல் கோபப்பட்டுப் பிரயோசனமில்லைம்மா.. நீங்க நல்லவங்க.. வெளுத்ததெல்லாம் பால்ன்னு நினைக்கிறவங்க.."

"பாலை.. பால்ன்னு நினைக்காமல் வேறு எப்படி நினைப்பாங்க..?"

"பால் போல கள்ளும் உண்டு...

நிறத்தாலே இரண்டும் ஒன்று..."

கோபக்குரலில் பாடிய கிருஷ்ணா..

"இந்தப் பாட்டைக் கேட்டதில்லையாம்மா...?" என்று வினவினான்..

"உனக்கு என்னடா ஆச்சு...?"

"ஒன்றும் ஆகவில்லை.. நான் உலகம் சுற்றும் வாலிபன்.. நீங்க எஸ்டேட்டே கதின்னு கிடக்கிறவங்க.. உங்களைப் பாதுகாக்கன்னு வரும் பெண்ணின் நம்பகத் தன்மையை விசாரிக்காமல் நான் விட முடியாது.."

"நான் விசாரித்து விட்டேன்.."

"நான்தான் நீங்க 'ரொம்ம்ம்ப நல்லவங்க..'ன்னு சொல்லிவிட்டேனே.."

"நீ என் திறமையை குறைவாக எடை போடுகிறாய் கிருஷ்ணா.."

"நீங்கள்தான் அப்படி என்னை நினைக்க வைக்கறீங்க.. இந்தப் பெண்ணைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்..? இவள் நல்லவளா..? கெட்டவளா...? உண்மை சொல்பவளா.. இல்லை பொய் முகம் கொண்டவளான்னு எதுவுமே

உங்களுக்குத் தெரியாது.. வெறும் காகிதங்களையும்.. வாய் வார்த்தைகளையும்

நம்பி இந்தப் பெண்ணை வீட்டுக்குள் சேர்த்துக் கொள்ளப் பார்க்கறீங்க.. இதை நான் அனுமதிக்க முடியாது.."

"என்ன சொன்ன...?"

சகுந்தலா தன் காதுகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாதவளாய் இமை கொட்டி மகனை பார்த்தாள்..

கிருஷ்ணா இதற்கு முன்னால் அவளிடம் இப்படிப் பேசியதில்லை.. தாயின் முடிவுகளுக்கு பணிந்து பழக்கப் பட்டவன் அவன்.. தாயின் முடிவை மறுபரிசீலனை செய்ய முயன்றதே இல்லை..

இன்று அதே கிருஷ்ணன்தான்.. அவளின் முடிவை மாற்றி அமைக்க முயல்கிறான்.. அவளின் முடிவை 'தவறு' என்று சொல்கிறான்..

"நான் இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுத்து விட்டேன் கிருஷ்ணா.."

"இந்த வீட்டுக்குள் இப்போதுதான் இவள் காலெடுத்து வைத்திருக்கிறாள்.. அதற்குள் வேலை கொடுத்துவிட்டீங்களா...?"

"வாக்குக் கொடுத்து விட்டேனே..."

"ஹ.. இவளைப் போன்ற பெண்களுக்கு வாக்குறுதியின் மதிப்புத் தெரியாது அம்மா.. அதனால் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இவளைத் திருப்பியனுப்பும் வழியைப் பாருங்கள்..."

சகுந்தலா தர்மசங்கடமுற்றாள்.. அவர்கள் பேசுவதைக் கேட்டபடி.. அசையாமல் நின்றிருந்த ஹரிதாவின் முகம் பார்த்தாள்.. அவள் முகத்தில் எந்த விதச் சலனமுமில்லை..

'இவளால் எப்படி இப்படி நிற்க முடிகிறது...?' குமரன் ஆச்சரியப்பட்டான்..

அவளை அவமதிக்கும் வார்த்தைகளை கிருஷ்ணா பேசிக்கொண்டிருக்கிறான். அவளது நன்னடத்தையின் மேல் பழி சுமத்துகிறான்.. அவளது சான்றிதழ்களை பொய்யென்று சொல்கிறான்.. அவளுக்கு வேலை கொடுத்தது தவறென்று தாயைக் கடிந்து கொண்டு அவளைத் திருப்பியனுப்பச் சொல்லிக் கொண்டி ருக்கிறான்..

அவளோ... அவன் பேசிய காயப்படுத்தும் வார்த்தைகளால் துளிக்கூட பாதிக்கப்படாதவளாக.. மயிலிறகால் வருடிக் கொடுக்கப்பட்டுக் கொண்டி ருப்பதைப் போல.. அமைதியாய் அவன் பேச்சை செவிமடுத்துக் கொண்டிருக்கிறாள்..

'எப்படி என் நேர்மையை நீ சந்தேகிக்கலாம்..?' என்று ரோசப்படவில்லை..

'என் படிப்பு பொய்யானதா..? என் சர்டிபிகேட்கள் போலியானதா..?' என்று கோபப்படவில்லை..

இங்கே என்னதான் நடக்கிறது என்று தனக்குள் வினவிக் கொண்டான் குமரன்..

"இது என் முடிவு கிருஷ்ணா..." சகுந்தலாவின் குரல் தீர்மானமாக ஒலித்தது..

"என் முடிவு அம்மா..." கிருஷ்ணாவின் குரலும் தீர்மானமாக வெளிவந்தது..

"நான் வாக்கு மாற மாட்டேன்.."

"இவள் வாக்குப் பற்றிக் கவலைப்பட மாட்டாள்.."

"என்னை நம்பி இவள் வந்துவிட்டாள்.."

"இவள் நம்பிக்கைக்கு உரியவள் இல்லை.."

"நான் எதிர்பார்க்கும் தகுதிகள் இந்தப் பெண்ணிடம்தான் இருக்கின்றன..?"

"இவளே போலின்னு சொல்கிறேன்.. நீங்கள் இவள் தகுதிகளைப் பற்றிப் பேசுகிறீங்க.. இவளுடைய

தகுதிகளும் போலியானவைதான் அம்மா..."

"நான் மனிதரை நம்புகிறவள் கிருஷ்ணா.."

"இவள் மனுஷியே இல்லைம்மா.." கிருஷ்ணா இதை ஆவேசத்துடன் கூறினான்..

"கிருஷ்ணா...?" சகுந்தலா அதிர்ந்தாள்..

"அடுத்த வீட்டுப் பெண்ணைப் பற்றி இப்படியொரு விமர்சனத்தை செய்ய உனக்கு என்ன உரிமையிருக்கு கிருஷ்ணா..? உன்னை இப்படியா வளர்த்தேன்...?"

"அம்மா..." கிருஷ்ணா எதையோ பேச முயல..

"போதும்.." என்று கையமர்த்தினாள் சகுந்தலா.. என்றுமே கனிவைக் காட்டும் அவள் முகம் கோபத்தில் கன்றிச் சிவந்திருந்தது.. அவள் விழிகள் சூரியனாய் ஜொலித்தன..

## 8

"நீ பெரிய பிஸினெஸ் மேக்னெட்டாக இருக்கலாம் கிருஷ்ணா.. கோடிஸ்வரனாக இருக்கலாம்.. ஆனால்.. நீ என் மகன்.. அதை மறந்துவிடாதே..."

"யாரோ ஒருத்திக்காக என்னுடன் வாதாடு கிறீங்களா..?"

"இந்தப் பெண் யாரோ ஒருத்திதான்.. ஆனால் நான் உனக்கு யாரோ ஒருத்தியில்லையே.. நான் உன் அம்மா.. உன்னைப் பெற்ற தாய்.. டில்லிக்கு ராஜான்னாலும்.. தாய்க்கு அவன் மகன் மட்டும் தான்.. எனக்கும் நீ அப்படித்தான்..."

"நான் இல்லைன்னு சொன்னேனா...?"

"என் முடிவுகளை மாற்றியமைக்க நினைக்காதே..."

"உங்கள் பாதுகாப்பைப் பற்றி நான் கவலைப்படக் கூடாதா...?"

"நான் அப்படிச் சொன்னேனா...?"

"இந்தப் பெண்ணால் உங்களுக்கு ஆபத்து வரலாம் அம்மா..."

சகுந்தலா.. கள்ளங்கபடமில்லாத ஹரிதாவின் முகத்தைப் பார்த்தாள்.. மகனிடம் திரும்பிப் பேசினாள்..

"இவள் முகத்தைப் பார்த்த பின்னாலும் இப்படிப் பேச உனக்கு எப்படி மனம் வந்தது கிருஷ்ணா...?"

"நான்தான் வெளிவேசத்தைக் கண்டு ஏமாந்து போகாதீங்கன்னு சொன்னேனா இல்லையா...?"

"யார் வேசம் போடுவது ஹரிதாவா...?"

"ஹரிதாவா.. யார் அது...?"

இதைக் கேட்ட மகனின் முகத்தை வியப்புடன் பார்த்தாள் சகுந்தலா...

"இது என்னடா.. விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு சீதைக்கு ராமன் என்ன முறையாகனும்ன்னு கேட்டு வைக்கிற..? இவள்தான் ஹரிதா.. இவளைப் பற்றித்தானே நாம் இத்தனை நேரமாய் வழக்கடித்துக் கொண்டிருக்கிறோம்...?"

தாயின் பேச்சைக் கவனிக்காமல் ஹரிதாவை உறுத்துப் பார்த்தான் கிருஷ்ணா.. அவன் விழிகள் வெறுப்பைக் கக்கின..

"உன் பெயர் ஹரிதாவா...?" என்று அவளிடமே கேட்டான்..

"ஆமாம் சார்..." அவள் பணிவுடன் பதில் சொன்னாள்..

"இதை என்னிடமே சொல்ல உனக்கு எவ்வளவு தைரியமிருக்க வேண்டும்...?"

"பெயரைச் சொல்ல தைரியம் தேவையா சார்...?"

"இது உன் சொந்தப் பெயரா...?"

"ஆமாம்..."

"இதைப் போல எத்தனை சொந்தப் பெயர்கள் உனக்கு இருக்கின்றன...?"

"கிருஷ்ணா.." சகுந்தலா இப்போது குறுக்கிட்டால்..

"அம்மா.. இவள் இடத்திற்கு ஒரு பெயரை வைத்துக் கொண்டு அலைகிறவள்.. இவளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது..."

"உனக்குத் தெரியுமா...?" சகுந்தலா நிதானமாக கேட்டாள்..

"சொல்லுடா.. உனக்கு இவளைத் தெரியுமா...?"

கிருஷ்ணா அதற்குப் பதில் சொல்லவில்லை... மாறாக ஹரிதாவிடமே சீறினான்..

"இதோபார்.. உன் ஆட்டத்திற்கு இந்த வீடு தோதுப்படாது.. என் அம்மா கருணையானவங்க.. அவங்களை ஏமாற்றணும்னு நீ நினைத்தால் நான் சும்மாயிருக்க மாட்டேன்.."

"எனக்குப் பதில் சொல்வதை விட்டு விட்டு ஹரிதாவுடன் உனக்கு என்ன பேச்சு...?"

"இவள் பெயர் ஹரிதாவே இல்லைன்னு சொல்கிறேன்.. அப்புறமும் நீங்க பேசிக்கிட்டே இருக்கிறீங்களே.."

"உனக்கெப்படி அது தெரியும்..?" சகுந்தலாவின் கேள்வி கூர்மையுடன் வெளிவந்தது..

கிருஷ்ணா இந்தக் கேள்விக்கும் பதில் சொல்வதைத் தவிர்த்தான்..

"உன் நடிப்பை வேறு எங்காவது வைத்துக் கொள்.. என் அம்மாவிடம் வேண்டாம்.." என்று ஹரிதாவிடம் அவன் சொல்லிக் கொண்டிருக்க.. சகுந்தலா பொறுமை யிழந்தாள்..

"போதும்ன்னு சொல்லிவிட்டேன் கிருஷ்ணா..."

"நான் சொல்வதைக் கேளுங்கம்மா..."

"கேட்கிறேன்.. நீ சொல்வதைக் கட்டாயம் கேட்கிறேன்.. இந்த ஒரு விசயத்தைத் தவிர.. நீ எதைச் சொன்னாலும்.. நான் கட்டாயம் கேட்கிறேன்.."

கிருஷ்ணா தாயின் முகத்தையே இமைக்காமல் தீர்க்கமாகப் பார்வையை எதிர்கொண்டாள் சகுந்தலா...

"இதுதான் உங்கள் முடிவாம்மா...?"

"ஹரிதாவின் விசயத்தில் இதான் என் முடிவு.."

"இவள் பெயர் ஹரிதாவே இல்லைன்னு நான் சொல்கிறேன்.. நீங்க அதைப் பிடித்துக் கொண்டே தொங்குகிறீங்களே.."

"எனக்கு இவள்தான் ஹரிதா.."

கிருஷ்ணாவின் கைமுஷ்டி இறுகியது.. அவன் கடினமான முகத்துடன் ஹரிதாவை முறைத்துப் பார்த்தான்.. பின்.. கோப நடையுடன் மாடிப்படிகளில் வேகமாய் ஏறிச் சென்று விட்டான்..

சகுந்தலா.. தலையைப் பிடித்துக் கொண்டு குமரனைப் பார்த்து...

"இவனுக்கு என்னடா ஆச்சு...?" என்று கேட்டாள்..

"எனக்கென்னம்மா தெரியும்...?" குமரன் கைவிரித்து தோளைக் குலுக்கினான்..

"என்னவோ தெரியவில்லை.. இவன் இன்றைக்குன்னு இப்படி நடந்து கொள்கிறான்.." கவலையுடன் கூறினாள் சகுந்தலா...

"அவனைப் பற்றி அப்புறமாய் நாம் ஆராய்ச்சி பண்ணலாம். முதலில்.. இவங்களுக்கு.. தங்குவதற்கு ஒரு ரூமைக் காட்டுங்க.."

"விடிய.. விடிய பஸ் பிரயாணம் பண்ணி வந்திருக்கிறாங்க.. டயர்டா இருப்பாங்க.. குளித்துவிட்டு எதையாவது சாப்பிட்டு விட்டு.. தூங்கி எழுந்திருக்கட்டும். மீதிக் கதையை

அப்புறமாய் பேசிக்கலாம்..." பரிவுடன் ஹரிதாவைப் பார்த்தபடி கூறினான் குமரன்.

பதிலுக்கு நன்றி கலந்த பார்வையொன்றை அவன் மேல் வீசினாள் ஹரிதா..

அவள் மிகவும் களைத்திருந்தாள்.. உடலால் மட்டுமல்ல.. மனதாலும்..

ஓடி.. ஓடிக் களைத்திருந்தவள் இளைப்பாற ஒரு நிழல்தேடித் தான் அங்கே வந்தாள்.. தாயில்லாமல் வளர்ந்தவள்.. தந்தையையும் இழந்து அநாதையாய்.. ஒரு அடைக்கலம் தேடித்தான் அங்கே வந்தாள்.. பாதுகாப் பில்லாத வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பை தேடித்தான் அங்கே வந்தாள்..

இவையெல்லாம் தவிர.. அவள் அங்கே வர..

அவளது அடி ஆழ மனதில் ஒரு காரணம் இருந்தது.. அதை அவள் மட்டுமே அறிவாள்.. எல்லாவற்றையும் இழந்து நிற்கும் அந்தப் பேதைக்கு எல்லாமுமாக இருந்தது

அந்தக் காரணம்.

யாருக்காக இந்த உலகில் வாழ வேண்டும் என்று பற்றில்லாமல் நிற்கிறவளுக்கு.. ஒரு பற்றுக் கோடாய் இருப்பது அந்தக் காரணம்...

அலைகடலில் மூழ்கிக் கொண்டிருப்பவளை.. கரை சேர்க்கும் கட்டு மரமாய் இருப்பது அந்தக் காரணம்..

அந்த ஒரு காரணத்திற்காகத்தான்.. உலகத்தை வெறுத்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளவிருந்தவள்.. அந்த மலைவாசஸ்தலத்தைத் தேடி.. தனியாக வந்திருந்தாள்..

பசுமையான மரங்களும்.. செடிகளும்.. கொடிகளும் நிறைந்த இடம் அது என்பதற்காக அவள் அங்கு வரவில்லை..

வறண்டு போன அவளது வாழ்வின் பசுமை அங்கேதான் இருக்கிறது என்பதற்காக வந்திருந்தாள்..

# 9

"அன்று சென்றதும்
மறந்தாய் உறவை...
இன்று வந்ததே...
புதிய பறவை...
எந்த ஜென்மத்திலும்
ஒரு தடவை...
நாம் சந்திப்போம்
இந்த நிலவை..."

சகுந்தலா தேவி பார்த்துக் கொண்டிருந்த கருப்பு வெள்ளைப் படத்தின் பாடல் காட்சியில் கதாநாயகி பாடிக் கொண்டிருந்தாள்.. அதைக் கேட்டுக் கொண்டே.. மாடிப் படியில் இறங்கி வந்து கொண்டிருந்த கிருஷ்ணாவின் பார்வையில்.. தோட்டத்திலிருந்து பூக்களைப் பறித்துக் கொண்டு வந்த ஹரிதா பட்டுவிட்டாள்..

"என்ன அது...?" அனல் வீசும் பார்வையுடன் கேட்டான் கிருஷ்ணா..

"பூ...!" ஒற்றை எழுத்தில் பதில் சொன்னாள் ஹரிதா..

"அது தெரியும்.. நீ எதுக்கு பறித்துக் கொண்டு வருகிற...?"

"பூஜைக்கு.." இப்போது ஒற்றை வாத்தையில் பதில் சொன்னாள் ஹரிதா...

"என் வீட்டில் பூஜை செய்ய நீ யார்...?"

ஹரிதா பதில் சொல்லாமல் சகுந்தலாவைப் பார்க்க.. அவள் அலுப்புடன் டிவியை விட்டு எழுந்து வந்தாள்..

"அடடா.. காலையிலேயே அவளுடன் வம்பு வளர்க்கணுமாடா கிருஷ்ணா...?"

"இவள் எதுக்கு பூவைப் பறித்துக் கொண்டு வருகிறாள்..?"

"அது ஒரு குற்றமாடா தம்பி..? நான்தான் பூஜைக்கு பூ வேண்டும்ன்னு சொல்லி.. பறித்துக் கொண்டு வரச் சொன்னேன்.."

"ஏன்.. நீங்க போய் பறிக்க வேண்டியதுதானே...?"

"ஆமடா.. எனக்கு வயது திரும்புது பாரு.. காலம் போன கடைசியில்.. யாராவது ஒரு ஜீவன் உதவிக்கு வந்து ஒத்தாசையா இருக்காதான்னு நான் கிடக்கிறேன்.. இவன் இப்போதுதான் எனக்கு பதினாறு வயது ஆனது மாதிரி.. ஓடி ஆடி வேலை செய்யச் சொல்கிறான்.. ஹரிதா பூவைப் பறித்துக் கொண்டு வந்தால்.. உனக்கென்னடா வந்தது..?"

"இது பூஜைக்கான பூ..."

"ஆமாம்..."

"இவள் கொண்டுவந்த பூவையா.. கடவுளுக்குப் போடுவீங்க...?"

சகுந்தலா மகனை விசித்திரமாகப் பார்த்தாள்.. கிருஷ்ணா இவ்வளவு அபத்தமாகப் பேசி.. அன்று தான் அவள் கேட்கிறாள்..

"உனக்கு என்னடா ஆச்சு..? ஹரிதா பூவைக் கொண்டுவந்தால் சாமி அதை ஏத்துக்க மாட்டேன்னு உன்னிடம் வந்து சொல்லியதா...?"

"த்சு.. என்னம்மா நீங்க...?"

"போடா.. போய்.. ஏதாச்சும் வேலையிருந்தால் பாரு.. அதை விட்டுவிட்டு.. இப்படி உளறிக் கொட்டாதே.. சகிக்கவில்லை..."

ஹரிதாவின் முன்னால் சகுந்தலா திட்டியதும் கிருஷ்ணா கடுப்பாகி விட்டான்..

உலகம் முழுவதும் பறந்து.. பறந்து தொழில் செய்பவனை.. வேலை செய்ய வந்த பெண்ணின் முன்னால் அவனது தாய் திட்டுகிறாள்..

'ம்ஹூம்.. என்னதான் நான் பெரிய ஆளாக இருந்தாலும் என் அம்மாவுக்கு நான் இன்னும் கைக் குழந்தைங்கிற நினைவுதான்...'

அவன் பல்லைக் கடித்தபடி ஹாலைக் கடந்து வெளியேற முயன்றான்..

"பார்த்த ஞாபகம் இல்லையோ...

பருவ நாடகம் தொல்லையோ...

வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ...

மறந்ததே என்ன நெஞ்சமோ..."

டிவியின் பாடல் ஒலி.. அவனை இழுத்துப் பிடித்து நிறுத்தியது.. அவன் ஹரிதாவைப் பார்த்த அதே நேரத்தில்.. அவளும் அவனைப் பார்த்தாள்...

அவளைப் பார்த்த ஞாபகத்தில் அவன் அவளைப் பார்க்க.. அவள் அந்த ஞாபகமே இல்லாதவளைப் போல் அவனைப் பார்த்தாள்..

'இவளுக்குத்தான் எத்தனை நெஞ்சழுத்தம்...' அவன் பல்லைக் கடித்தபடி வெளியேறி விட்டான்.

'சாப்பிடாமல் போகிறானே...' ஹரிதா மனம் வருந்தினாள்..

"என்ன யோசனை ஹரிதா...?" சகுந்தலா இதமாக வினவினாள்..

"சாருக்கு என்னைப் பிடிக்கவில்லையே மேடம்..."

"அவனுக்கென்னம்மா.. சில நேரங்களில் இப்படித்தான்.. பைத்தியக்காரனைப் போல பிஹேவ் பண்ணுவான்.. கண்டு கொள்ளாதே.. அது என்னவோ.. உன்னைக் கண்டாலே அவனுக்கு ஆக மாட்டேன்கிறது.. அதுதான் ஏன்னு எனக்கும் பிடிபட மாட்டேங்குது.." சகுந்தலா ஜாடையாக ஹரிதாவைப் பார்த்தபடி கூறினாள்..

ஹரிதா மௌனமாகி விட்டாள்..

'பேச மாட்டாளே..' சகுந்தலா மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்..

அவளும் இதே கேள்வியை.. மாற்றி மாற்றி ஹரிதாவிடம் கேட்டுப் பார்த்து விட்டாள்.. தெளிவாகவும்.. கோர்வையாகவும்.. சகுந்தலா கேட்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிப்பவள்.. இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லவே மாட்டாள்.. அதைப் பற்றி சகுந்தலா பேச ஆரம்பித்தாலே மௌனமாகி விடுவாள்..

ஹரிதாவைக் கண்டாலே கிருஷ்ணாவுக்கு ஆக வில்லை என்பது ஒரு பக்கமிருக்க.. எப்போதும் அந்த எஸ்டேட்டில் ஒரு வாரத்திற்கு மேல் தங்காதவன்..

ஹரிதா வந்த பின்னால்.. பதினைந்து நாள்களாகியும்.. கிளம்பும் உத்தேசமில்லாதவனாய் அங்கேயே தங்கி விட்டான் என்பது சகுந்தலாவின் கவனத்தில் பதிந்துதான் இருந்தது.

'ஏதோ நடக்குது.. அது என்னன்னுதான் தெரியலை.. ஓடுகிற வரை கதை ஓடட்டும்.. பூனைக்குட்டி என்றைக் கிருந்தாலும் வெளியே வந்துதானே ஆகணும்..'

இந்த எண்ணத்துடன்.. ஹரிதாவிடம் எதையும் துருவிக் கேட்காமல் அமைதியாக இருந்தாள் சகுந்தலா..

"வாம்மா.. சாமி கும்பிடலாம்.." குத்துவிளக்கை ஏற்றியபடி ஹரிதாவை அழைத்தாள் சகுந்தலா...

கண்மூடி வேண்டி நின்ற அந்த அழகிய இளம் பெண்ணின் முகத்தில் தெரிந்த அநாதரவான தோற்றத்தைக் கண்டு அவள் மனம் இளகியது..

'பாவம்..' இரக்கப்பட்டாள் சகுந்தலா..

டைனிங் டேபிளுக்கு போன போது.. சகுந்தலாவின் முன்னால் தட்டை வைத்து பரிமாற ஆரம்பித்தாள் ஹரிதா..

"நீயும் சாப்பிட உட்காரும்மா.." கனிவுடன் அழைத்தாள் சகுந்தலா..

"வேண்டாம் மேடம்.. நான் அப்புறமாய் சாப்பிட்டுக் கொள்கிறேன்.." ஹரிதா மறுத்தாள்..

அவள் சொன்னால் கேட்க மாட்டாள் என்ற எண்ணம் தோன்ற.. சகுந்தலா மௌனமாக சாப்பிட ஆரம்பித்தாள்..

"மேடம்..." தயக்கத்துடன் அழைத்தாள் ஹரிதா..

"என்னம்மா...?" வியப்புடன் பார்த்தாள் சகுந்தலா..

"சார் கோபமாய் சாப்பிடாமல் போய் விட்டார் போல இருக்கே..."

சகுந்தலாவின் கை அப்படியே நின்று விட்டது.. அவளுடைய மகனைப் பற்றி.. அவள் கூட இவ்வளவு கவலைப் பட்டதில்லை என்ற உண்மை அவளது நெஞ்சத்தில் உறுத்த.. அவள் ஆச்சரியத்துடன் ஹரிதாவைப் பார்த்தாள்..

"அவன் எஸ்டேட்டை சுற்றிப் பார்த்து விட்டு வந்துதான் சாப்பிடுவான்ம்மா..."

"சாப்பிட்டு விட்டு போயிருக்கலாமே.. எஸ்டேட்டை சுற்றிப் பார்க்கத் தெம்பு வேண்டாமா...?" கவலையுடன் கேட்டாள் ஹரிதா..

அவளது கவலையை கண்டு கொண்ட சகுந்தலாவின் வியப்பு இன்னும் அதிகமானது..

'இவளைப் போயா கிருஷ்ணா வெறுக்கிறான்...?'

## 10

பூக்கள் அடர்ந்திருந்த அந்தப் பாதையின் முடிவில்.. சலசலத்து நீரோடை ஓடிக் கொண்டிருந்தது.. தூரத்திலேயே அதைப் பார்த்துவிட்ட ஹரிதாவின் மனதில் ஓர் உற்சாகம் ஏற்பட்டது..

"காவேரிக் கரையிருக்கு...

கரைமேல பூவிருக்கு...

பூப்போலே பெண்ணிருக்கு...

புரிந்து கொண்டால் உறவிருக்கு..."

வாய்விட்டு பாடியபடி.. நீரோடையை நோக்கி சரிந்து இறங்கிய பாதையில் இறங்கி நடந்தாள்...

"பாட்டெல்லாம் தூள் கிளப்புது.. ஆனால்.. ஒரு சந்தேகம்..." என்ற குரல் அவளது பின்னாலிருந்து ஒலிக்கவும்.. பதறித் திரும்பினாள்..

"யாமிருக்கப் பயமேன்...?" என்று சிரித்தான் குமரன்..

"அது சரி.. பின்னாலே வந்து திடீர்ன்னு பேசி பயமுறுத்தி விட்டு.. யாமிருக்கப் பயமேன்னு சொல்கி றீங்களா...?" ஹரிதா முறைத்தாள்..

"என்னங்க நீங்க.. இதுக்குப் போயெல்லாம் பயப்படலாமா...? இவ்வளவு தைரியமாய்.. மலையில் வேலை பார்க்கக் கிளம்பி வந்திருக்கீங்கன்னு உங்களைப் பற்றி பெருமையாய் நினைத்துக்கிட்டு இருக்கேன்.. நீங்க என்னடான்னா இப்படிச் சொல்கிறீங்க...?"

"பிழைக்க இடம் தேடி மலைக்கு வந்ததில் பெருமை என்ன இருக்கு.." ஹரிதா சோர்வுடன் மெதுவாக நடந்தாள்..

அவளுடன் இணைந்து நடந்த குமரனுக்கு.. அவளது சோர்வைக் கண்டு மனம் வலித்தது.. அவளது வார்த்தைகளில் பொதிந்திருந்த உண்மையை அவனும் உணர்ந்துதான் இருந்தான்..

"ஆமாம்... சந்தேகம்ன்னு சொன்னீங்களே.. என்ன சந்தேகம்..?" ஹரிதா குமரனைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்..

"இது அருவிக் கரை.. இதைப் போய் 'காவேரிக்கரை'ன்னு பாட்டுப் பாடுகிறீங்களே.."

அதைக் கேட்டதும் ஹரிதாவின் முகம் வெட்கத்தில் சிவந்துவிட்டது..

"நீங்க வேற.. நான் யாருமில்லைன்னு நினைத்துக் கிட்டு பாடினேன்.."

"யாருமில்லைன்னால்தான் பாடுவீங்களா...?"

"வேற பேசலாமா..?"

சற்றுத் தூரத்தில் கொட்டிக் கொண்டிருந்த அருவியை ரசித்துப் பார்த்தபடி.. சலசலத்து நீரோடையாய் ஓடிக் கொண்டிருந்த அருவிக் கரையில் இருந்த பெரிய கல்லொன்றின் மீது அமர்ந்தாள் ஹரிதா..

சற்றுத் தள்ளி அதே போலிருந்த வேறொரு பெரிய பாறைத்திட்டின் மீது அமர்ந்த குமரன் அவளைப் பார்த்தான்..

"உங்க ஊர் எது...?" பேட்டி எடுப்பவனை போல பேச்சை ஆரம்பித்தான் அவன்..

"சென்னை.." இயல்பாக பதில் சொன்னாள் ஹரிதா..

கிருஷ்ணா அதிகம் இருப்பது சென்னையில்தான் என்ற எண்ணம் அப்போது குமரனின் மனதில் தோன்றியது..

"அப்பா என்ன செய்கிறார்..?"

"எனக்கு அப்பா இல்லை.. இறந்துவிட்டார்..."

ஹரிதாவின் குரலில் தொனித்த துயரம்.. குமரனின் நெஞ்சை உலுக்கியது.

"ஐ ஆம் ஸாரி.. தெரியாமல் கேட்டுவிட்டேன்..."

"இட்ஸ் ஆல்ரைட்.. தெரியாமல்தானே கேட்டீங்க.."

"அம்மா எங்கே இருக்கிறாங்க...?"

"நான் பிறந்தபோதே சாமிகிட்ட போய்விட்டாங்க.."

குமரன் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.. கண்ணீர்க் குரலில் அவனுக்குப் பதில் சொல்லியவள்.. நீரோடையை வெறித்துக் கொண்டிருந்தாள்..

"இதை நான் எதிர்பார்க்கவில்லை ஹரிதா..."

குமரனின் குரலில் தென்பட்ட சங்கடத்தை உணர்ந்ததும் ஹரிதா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகைத்தாள்..

"யாரும் எதையும் எதிர்பார்ப்பதில்லை சார்.. எதிர்பார்க்காதது நடப்பதுதான் வாழ்க்கை.."

"இந்த வயதிலேயே தத்துவமெல்லாம் பேசுகிறீங்களே.."

"ஏன்.. இந்த வயதில் தத்துவம் பேசக்கூடாதா...?"

"ஒரு வகையில் கூடாதுதான்.. இது தத்துவம் பேச வேண்டிய வயதில்லை..."

"நூற்றுக்கிழவி கூட என்னளவு துன்பங்களையும்.. துயரங்களையும் சந்திருக்க மாட்டாள் சார்.. இந்த வாழ்க்கை எனக்கு அந்த அளவுக்கு அனுபவ பாடங்களை அள்ளித் தந்திருக்கிறது.."

குமரன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

ஒரு சாதாரண காட்டன் சேலையில்.. தேவதை போல அழகுடன் மிளிரும் இந்தப் பெண்ணுக்குள் இத்தனை மன வலியா...?

அவளது மனவலியை உணர்ந்தவனுக்கும் ஏனோ மனம் வலித்தது.. அது சக மனிதர்களை நேசிக்கும் மானிடனுக்கும் ஏற்படும் மனவலி.. குமரன் சகமனிதர்களை நேசிப்பவன்..

"எப்போதும் வாழ்க்கை இப்படியே இருந்து விடாது ஹரிதா.. நீங்கள் 'தொடுவானம்..' என்ற புத்தகத்தை படித்திருக்கிறீங்களா..."

"இல்லை..."

"படித்துப் பாருங்க.. அந்தக் கதையின் முடிவில் அதை எழுதியவர் எழுதியிருப்பார்..."

"என்ன எழுதியிருக்கிறார்...?"

"வாழ்க்கை யாரையும் வஞ்சிப்பதில்லை.. வாழ்ந்து பார்த்தால் தெரியும்.. தொடுவானம் என்பது தொட்டுவிடும் தூரம்தான் என்பது..."

ஹரிதாவின் விழிகளில் நன்றியுணர்வு தோன்றியது..

'இவன்தான் எவ்வளவு இதமானவன்..' என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

அவன் யாரோ.. அவள் யாரோ.. சில நாள்களுக்கு முன்பு வரை.. இருவருக்கும் இடையில் அறிமுகம் கிடையாது.. அவள் அவனுடைய எஸ்டேட்டிற்கு பக்கத்தி லிருக்கும் எஸ்டேட்டில் வேலை செய்ய வந்தவள்.. அவனோ ஒரு எஸ்டேட்டின் முதலாளி.. ஆனாலும்.. அவளை சக மனுஷியாக பாவித்து சிநேகிதத்துடன் பேசிப் பழகுகிறான்.. அவளது துன்பம் கண்டு ஆறுதல் சொல்கிறான்..

"தேங்க்ஸ்..."

"எதுக்கு இந்த தேங்க்ஸ்..?"

"உங்க ஆறுதல் வார்த்தைகளுக்கு..."

"காசா.. பணமா..? வெறும் ஆறுதல் வார்த்தைகள் தானே.. அதைச் சொல்லக்கூட கணக்குப் பார்க்கணுமா.. என்ன..?"

"யார் அப்படி நினைக்கிறாங்க..? எல்லோருமே பேசக் கூலி கேட்கிறாங்களே.."

"நீங்க யாரைச் சொல்கிறீங்க...?"

"பொதுவாகத்தான்.. சொல்கிறேன்..."

"இது ஒன்றும் பொதுவுடமைத் தத்துவம் போலத் தெரியலையே.."

இதைக் கேட்டதும் ஹரிதா வாய்விட்டுச் சிரித்து விட்டாள்.. ஒரு பூ ஒன்று இதழ் விரித்து மலர்ந்ததைப் போல் இருந்தது.. அவளது சிரிப்பு பரவி.. முகம் மலர்வதைக் கனிவோடு கவனித்தான் குமரன்..

'ஹப்பா... சிரித்துவிட்டாள்..'

"ஏன் சார்.. இப்போ நாம.. பொதுவுடமைக் கொள்கையைப் பற்றியா பேசிக் கொண்டிருந்தோம்...?"

"நீங்கள்தானே பொதுவாச் சொல்கிறேன்.. பொதுவாச் சொல்கிறேன்னு சொன்னீங்க...?"

"நான் சொன்ன 'பொது..' இந்தப் 'பொது' இல்லை சார்..."

மீண்டும் ஹரிதா சிரித்தாள்.. அவளது சிரிப்பை ரசித்த வண்ணம்.. அறியாப் பிள்ளை போல குமரன் உட்கார்ந்திருந்தான்..

## 11

"வேறு எந்தப் 'பொது'வைச் சொன்னீங்க ஹரிதா..?"

"பொதுவா எல்லோரும் சொல்கிறதைப் போலத்தான்.. நானும் பொதுவாய்ச் சொன்னேன்.."

"நீங்கள் சொன்ன பொதுவாய்.. பொதுவுடமைத் தத்துவத்தின் பொதுவாய்ன்னு நான் நினைத்துவிட்டேன்.."

"போதும் சார்..."

ஹரிதா முகிழ்ந்து சிரித்தாள்.. அவளுடன் பேசிக் கொண்டிருப்பதை மனம் விரும்புவதை உணர்ந்தாள் குமரன்..

அவள் அழகாக இருந்தாள்.. ஆனால் அதை உணராதவளாக இருந்தாள்.. அறிவாக இருந்தாள்.. ஆனால்.. அடக்கமாக இருந்தாள்.. அந்த இளம் வயதில் தனியாக இருந்தாள்.. ஆனால்.. ஒருவித நிமிர்வோடு இருந்தாள்..

எல்லாவகையிலும்.. இன்னதென்று வரையறுத்துச் சொல்லமுடியாத வகையில் ஹரிதா குமரனைக் கவர்ந்தாள்..

குமரன் அவளைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினான்...

"சென்னையில் தனியாகவா இருந்தீங்க..?"

"ம்ம்.. அப்பா போனபின் தனிமைதான்..."

திரும்பவும் அவள் முகத்தில் சோகம் கவிழ்ந்தது.. ஆனாலும் குமரனுக்கு வேறு வழியிருக்கவில்லை.. அவனுக்கு அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றிவிட்டது..

"அப்பா எப்போது போனார்...?"

"ஏழு மாதங்களுக்கு முன்னால்..."

"உடம்பு சரியில்லையா..?"

"ம்ம்..."

"என்ன உடம்புக்கு...?"

"கேன்ஸர்..."

ஹரிதா அண்ணாந்து வானத்தைப் பார்த்தாள்.. மேகங்களுடன் இடையில் தந்தையின் முகம் தென்படுகிறதோ என்று துழாவுவதைப் போல இருந்தது அவளது பார்வை...

குமரன் அதைக் கண்டு கொண்டாள்.. பேச்சை வேறு திசையில் மாற்றினான்..

"என்ன படித்திருக்கிறீங்க...?"

"எம்.எஸ்ஸி..."

"என்ன சப்ஜெக்ட்..."

"பயோ-கெமிஸ்டரி..."

இதைக் கேட்டதும் குமரனின் முகத்தில் வியப்பு தோன்றியது.. ஹரிதாவைப் பார்த்த அவனது விழிகளில் அந்த வியப்புத் தெரிய..

"ஏன் சார் இப்படிப் பார்க்கறீங்க..?" என்று அவள் வினவினாள்..

"கெமிஸ்டரிக்கும்.. செகரட்டரி வேலைக்கும் என்ன சம்பந்தம்...?"

"எல்லோருமே அவங்க படித்த படிப்புக்கு ஏற்ற வேலையைத் தான் பார்க்கிறாங்களா...?"

"அதைச் சொல்லுங்க..."

இப்போது இருவரும் சேர்ந்து சிரிக்க.. அதைக் கேட்டபடி.. அங்கே கிருஷ்ணா வந்து நின்றான்..

அவனது கண்களில் தீயின் ஜீவாலை.. வெறுப்பின் உக்கிரத்தை விழிகள் கக்க.. அவர்கள் இருவரையும் வெறித்துப் பார்த்தான்.. சிரித்தபடி திரும்பிப் பார்த்தாள் ஹரிதா.. அவனைக் கண்டதும் ஸ்விட்ச்சைப் போட்டது போல அவளது சிரிப்பு நின்று விட்டது.. அவள் பதட்டத்துடன் எழுந்து நின்றாள்..

'இவள் ஏன்.. இவனைக் கண்டு இப்படிப் பயப்படுகிறாள்..?'

குற்றம் செய்துவிட்டவளைப் போல.. தலை கவிழ்ந்து.. கைபிசைந்து நின்ற ஹரிதாவை விசித்திரமாகப் பார்த்தான் குமரன்.. அவனை ஏளனமாகப் பார்த்தான் கிருஷ்ணா..

"நீ புத்திசாலின்னு நினைத்தேனேடா..."

"இப்போது மட்டும் அந்த நினைவுக்கு என்ன குறை வந்துவிட்டது கிருஷ்ணா...?"

"இவள் மோகினிப் பேய்டா.. சிரித்து மயக்கும் மாயப் பிசாசு.. அதையறியாமல் இவளிடம் போய்ப் பல்லைக் காட்டுகிறாயே..."

கிருஷ்ணா அமிலம் தோய்ந்த வார்த்தைகளைக் கொட்டினான்..

அதைக் கேட்டதும் ஹரிதா சட்டென்று அந்த இடத்தை விட்டு விலகி.. வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்..

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணாவின் முகத்தில் கோப அக்னி குறையவில்லை..

"ஏண்டா.. அந்தப் பெண்ணை இந்த அளவுக்கு குரூரமாகப் பேசுகிற...?" குமரன் மனம் தாங்காமல் முறைத்தான்..

அவனைத் திரும்பிப் பார்த்த கிருஷ்ணா..

"உனக்கு எதற்கு அவள்மேல் இவ்வளவு அக்கறை..?" என்று கேட்டான்..

"த்சு.. புரியாமல் பேசாதே.. அவளின் நிலைமையைக் கேட்டால் நீ அவளை இப்படியெல்லாம் பேசமாட்டாய்..."

"அவள் நிலைமையை உன்னிடம் சொல்லி பரிதாபம் தேடிக் கொண்டாளா...?"

"நானாகத்தான் அவளைப் பற்றி விசாரித்தேன்..."

"உடனே கொட்டிவிட்டாளாக்கும்..."

"கிருஷ்ணா.. அவள் தாய்.. தகப்பனில்லாத பெண்..."

"அதற்காக.. எப்படி வேண்டுமானாலும் வாழலாமா..?"

"கிருஷ்ணா...!"

"எல்லோரும் அவர்களுடைய தவறுகளை நியாயப் படுத்த ஏதாவது ஒரு காரணத்தை வைத்துத்தான் இருப்பார்கள்.. இவளும் அப்படித்தான்..."

"சேச்சே.. இவள் அந்த மாதிரிப் பெண்ணில்லை..."

"அதை நீ எப்படி உறுதியாகச் சொல்கிறாய்...?"

"ஒருவரின் முகத்தைப் பார்த்தாலே அது தெரிந்து விடும்..."

"முகத்தைப் பார்த்து ஏமாந்து போகாதே.. அவள் பயங்கரமானவள்.."

உண்மையிலேயே ஒரு மோகினிப் பேயைப் பற்றிக் கூறுவதைப் போல கிருஷ்ணா கூற.. குமரன் அவனைக் கவலையோடு நோக்கினான்..

"நீ நார்மலாக இல்லை கிருஷ்ணா.."

"அப்நார்மலான ஆள்களைப் பார்த்து விட்டேனில்லையா.. அப்படித்தான் இருக்கும்.."

'யாரை அப்நார்மல்ன்னு இவன் சொல்கிறான்..? ஹரிதாவையா...?'

ஹரிதாவின் இயல்பான நடவடிக்கைகளை நினைத்துப் பார்த்த குமரன்.. தனக்குள் வினவிக் கொண்டான்..

"வேண்டாம் கிருஷ்ணா.. உன்னிடம் வேலை செய்ய வந்து விட்டாள் என்பதற்காக... அடுத்த வீட்டுப் பெண்ணைப் பற்றி இப்படி.. அவதூறாகப் பேசாதே..."

"போடா முட்டாள்.. அவளுக்கு.. அவளது அழகை ஆயுதமாகப் பயன்படுத்தும் வித்தை தெரியும்.. இது உனக்குத் தெரியுமா...? பெரிதாய் எல்லாத்தையும் கண்டுவிட்டதைப் போலப் பேசாதே..."

குமரன் அதிர்ந்தே விட்டான்.. கிருஷ்ணா கூறிய வார்த்தைகளில் பொந்திருந்த பொருளைக் கண்டு அவன் மனம் விக்கித்து விட்டது...

"டேய்.. டேய்.. நீ பாட்டுக்கு மனம் போலப் பேசிக் கொண்டே போகிறாயே.. நீ சொல்வதற்கு என்ன அர்த்தம்ன்னு தெரிந்துதான் பேசுகிறாயா...?"

"தெரியும்..."

"என்ன தெரியும்...?"

"எனக்கு அவளைத் தெரியும்..."

"ஸ்ஸ்.. வெறுப்பேற்றாதே கிருஷ்ணா.. அவளைப் பற்றி நீ சொன்னாயே.. அவளைப் பற்றி உனக்கு

என்ன தெரியும்..? எந்த அடிப்படையில் அவளை.. இப்படியெல்லாம் பேசுகிறாய்...?"

"எந்த அடிப்படையிலா..? ஹா.. ஹா..."

கிருஷ்ணா.. பலமாகச் சிரித்தான்.. அவனது சிரிப்பில் வெறுப்பு.. கோபம்.. ஆற்றாமை.. தோல்வி.. துயரம்.. எல்லாமே கலந்து ஒலித்தது..

'இவன் ஏன் இப்படிச் சிரித்து வைக்கிறான்...?' குமரன் அவனை சந்தேகமாகப் பார்த்தான்..

## 12

கிருஷ்ணாவின் முகம் நொடிப் பொழுதில் கடினமாக மாறியது..

"எனக்கு எப்படித் தெரியும்ன்னு சொன்னால் நீ தாங்க மாட்டாய்டா.. எந்த அடிப்படையில்ன்னு சொன்னேன்னு வை.. இப்போது அவளை உட்கார வைத்து கதை பேசிக் கொண்டிருக்கிறாயே.. இந்தக் கதைகளையெல்லாம் பேச மாட்டாய்.. அவள் முகத்திலேயே விழிக்க மாட்டாய்..."

குமரனின் மனதில் ஹரிதாவின் முகம் வந்து நின்றது.. பால் போன்ற.. மாசு மருவில்லாத முகம்.. கள்ளம்.. கபடமில்லாத கண்கள்.. நேர்கொண்ட அவளது பார்வை..

அவளைப் பற்றி கிருஷ்ணா சொன்னால்.. குமரன் அவளை உட்கார வைத்து கதை பேச மாட்டானா..? அந்த அளவுக்கு ஹரிதா மோசமானவளா...?

இதை நினைத்துப் பார்க்கக் கூட குமரனுக்கு பிடிக்கவில்லை.. அவனால் ஹரிதாவை மட்டமாக நினைக்க முடியவில்லை... அதே சமயம்.. கிருஷ்ணாவின் பேச்சை புறக்கணிக்கவும் அவனால் முடியவில்லை.. கிருஷ்ணா குமரனின் உயிர் நண்பன்.. சிறு வயதிலிருந்தே உடன் வளர்ந்த உறவினன்.. காரணமில்லாமல் கிருஷ்ணா ஒருவரை உதாசீனம் செய்ய மாட்டான் என்பதை அவன் அறிவான்..

"அந்தப் பெண்ணைப் பார்த்தால் நல்லவள் போல தெரிகிறதேடா..."

"கண்ணால் காண்பது பொய்.."

"நீ உலகம் சுற்றும் வாலிபன்.. இது போல கூட நீ பேசுவாயா...?"

"வேறு வழி.. இவளைப் பார்த்துத் தொலைத்த பின்னால்... பேசித்தானே ஆக வேண்டும்..."

"அப்படிப் பேச எதுவும் இருக்கிறதைப் போல எனக்குத் தெரியவில்லையேடா..."

"உனக்குத் தெரியாதுன்னுதானே நான் சொல்கிறேன்.."

"உனக்கு மட்டும் என்ன தெரியும்...?"

கிருஷ்ணா பதில் சொல்லவில்லை.. குமரனை யோசனையுடன் பார்த்துவிட்டு நடக்க ஆரம்பித்து விட்டான்.. அதற்கு மேல் அவனிடம் பேச முடியாது என்பதை நன்கு அறிந்திருந்த குமரனும் கூட நடந்தான்..

"நீ எஸ்டேட்டிலேயே அதிக நாள் தங்கிவிட்டாய்.."

"ம்ம்ம்..."

"இவ்வளவு நாள் நீ தங்கி இப்போதுதான் பார்க்கிறேன்..."

"ம்ம்ம்..."

"காலில் சக்கரம் கட்டிக்கிட்டு.. மும்பை.. டெல்லி.. கனடான்னு பறந்துக்கிட்டு இருக்கிறவன் நீ.. ஒரே இடத்தில் அடங்கி உட்கார்ந்துவிட்டது அதிசயமாகத்தான் இருக்கு.."

"ம்ம்ம்..."

"நீ இல்லாமல் உன் கம்பெனி வேலைகள் நின்றுவிடாதா...?"

நடந்து கொண்டே கிருஷ்ணா திரும்பி குமரனை உறுத்துப் பார்த்தான்.. அவன் பார்வையிலிருந்த ஏதோ.. ஒன்று.. குமரனைப் பாதித்தது..

"என்னடா.." தாங்க மாட்டாமல் குமரன் கேட்டான்..

"நான் இங்கேயிருப்பது உனக்கு இடைஞ்சலாக இருக்கிறதா...?" கிருஷ்ணா வன்மத்துடன் கேட்டான்..

"இடைஞ்சலா..? எனக்கா..? என்னடா.. ஒரு மார்க்கமாகப் பேசிவைக்கிற..?"

"வேறு எப்படிப் பேச..?"

"நீ இங்கேயிருப்பதால் எனக்கென்னடா இடைஞ்சல் வந்துவிடப் போகிறது...?"

குமரன் ஆற்ற மாட்டாமல் கேட்டுவிட்டான்.. கிருஷ்ணா லேசான பெருமூச்சுடன் அவனைப் பார்த்தான்..

"நான் கூட இப்படித்தான் ரொம்ப நாளாக நினைத்துக் கொண்டிருந்தேண்டா.. நான் உண்டு.. என் வேலை உண்டுன்னு இருக்கிறேனே.. என்னால்.. யாருக்கு என்ன இடைஞ்சல் வந்துவிடப் போகுதுன்னு தப்புக் கணக்கு போட்டிருந்தேன்டா.. ஆனால்.. என் கணக்கும் ஒரு நாள் பொய்யாய் போச்சே.."

"கிருஷ்ணா..."

"போடா.. உன் வீட்டுக்குப் போய்.. வேலை ஏதுமிருந்தால் பாரு.. எவளாவது கண்ணுக்கு குளிர்ச்சியாய் இந்த மலைப்பிரதேசத்திற்கு வந்துவிட்டால் சைட் அடிக்க அலையாதே..."

"டேய்.. என்னடா பேசற...?"

"போடா.. போ.. போய் உருப்படுகிற வழியைப் பாரு.."

கிருஷ்ணா வேகமாகப் போய்விட்டான்.. குமரன் அசையாமல் அதே இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்..

இதற்கு முன்னால் சுரேஷ் கிருஷ்ணா.. இப்படிப் பேசி.. அவன் கேட்டதில்லை.. குன்னூருக்கு அருகிலிருக்கும் அந்த எஸ்டேட்டிற்கு வந்தால்.. ஒரு நாளுக்கு மேல் அவன் தங்க மாட்டான்.. அந்த ஒரு நாளிலும் குமரனை விட்டுப் பிரியமாட்டான்..

அந்த கிருஷ்ணாதான் இன்று இப்படிப் பேசி விட்டுப் போகிறான்..

ஹரிதாவின் மேல் ஒருவித மயக்கம் மனதில் எழுவதை குமரனால் மறுக்க முடியவில்லை.. அந்த ஒரு காரணத்தினாலேயே கிருஷ்ணாவின் வார்த்தைகளில் அவன் கோபம் கொள்ளவில்லை..

ஆனால்.. அவன் ஹரிதாவைப் பார்வையிட்டால் கிருஷ்ணாவிற்கு ஏன் பற்றிக் கொண்டு வருகிறது...?

அதன் காரணத்தை அறிந்து கொள்ளாவிட்டால் குமரனுக்கு தூக்கம் வராது போல இருந்தது..

கிருஷ்ணாவின் கூற்றுப்படி.. அவனுக்கு ஹரிதாவின் மேல் வெறுப்பு இருந்தால்.. அவளை குமரன் பார்ப்பதைப் பற்றி ஏன் எரிச்சல் படுகிறான்..?

இதற்கு விடையைத் தேடி.. குமரன் மண்டையை உருட்டிக் கொண்டிருக்க.. கிருஷ்ணா.. அவனுடைய பங்களாவின் காம்பவுண்டிற்குள் வேகமாக நுழைந்தான்..

முன்புறத் தோட்டத்தில் ஹரிதா நின்று கொண்டிருந்தாள்.. தோட்டக்காரனிடம்.. பூச்செடிகளைக் காட்டி அவள் எதையோ விளக்கிக் கொண்டிருப்பதை கவனித்த கிருஷ்ணா தோட்டத்தை மாற்றியமைக்க அவள் யோசனை சொல்லிக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டு அருகில் சென்றான்..

"பரமா..."

"ஐயா.."

"இங்கே என்ன செய்கிறாய்...?"

"அம்மா தோட்டத்தில் மாறுதல் செய்யணும்னு சொன்னாங்க.. அதைக் கேட்டுக்கிட்டு இருக்கிறேனுங்கய்யா.."

"அம்மாவா.. எந்த அம்மா...?"

"நம்ம சின்னம்மாதானுங்க..."

"சின்னம்மாவா...?"

கிருஷ்ணா ஹரிதாவை முறைத்த முறைப்பிற்குச் சக்தியிருந்தால் அவள் அந்த இடத்திலேயே பஸ்பமாகியிருப்பாள்.. நல்லவேளையாக கடவுளின் அருளால் அவனது எரிக்கும் பார்வைக்கு அந்த சக்தி இல்லாததால் அவள் தப்பித்தாள்..

"ஆமாங்கய்யா.. நம்ம சின்னம்மாதான்..."

"அப்படி யார் சொன்னது...?"

"நம்ம அம்மாதான் அப்படிச் சொன்னாங்கய்யா.."

"அம்மா சொன்னாங்களா..?"

"ஆமாங்கய்யா.."

"என்ன சொன்னாங்க.."

"இனி சின்னம்மாதான் வீட்டையும்.. எஸ்டேட்டையும் பார்த்துக்குவாங்க.. அவங்க சார்பா சின்னம்மா வேலை செய்கிறதால.. அவங்களுக்கு கொடுக்கிற மரியாதையை சின்னம்மாவுக்குப் கொடுக்கணும்னு சொன்னாங்க.."

கிருஷ்ணா பல்லைக் கடித்தான்.. அவனை ஒரு வார்த்தை கூடச் கேட்காமல்.. அவன் அவ்வளவு தூரத்திற்கு எடுத்துச் சொல்லியும் சகுந்தலா ஹரிதாவிற்கு அவ்வளவு பெரிய உரிமையையும்.. சலுகையையும் அளித்திருப்பது அவனை அதிருப்தியில் ஆழ்த்தியது..

"சரி நீ போ..."

பரமன் போய்விட்டான்.. ஹரிதாவும் நகர முயன்றாள்..

"நில்.." என்றான் சுரேஷ் கிருஷ்ணா..

அந்த ஒரு சொல் ஹரிதாவை கட்டிப்போட.. அவள் அப்படியே நின்றுவிட்டாள்..

"நில்லென்று சொன்னால் - மனம்

நின்றா போகும்...?"

ஹரிதாவிற்கு பிடித்த திரைப்பட பாடலில் வரும் வரிகள் இவை.. அதை உணர்வுபூர்வமாக அன்று உணர்ந்தாள் ஹரிதா..

அவன் 'நில்'லென்று சொன்னான்.. அவள் நின்றுவிட்டாள்.. அவனது கட்டளையை மீறி ஓர் அடிகூட எடுத்து வைக்க அவளால் முடியவில்லை..

"என்ன.. குமரனோடு கொஞ்சுகிற...? அடுத்த ஆளைப் பிடிக்கிறாயா...?"

ஹரிதா கண்களை இறுக மூடித் திறந்து... அவனது வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள முயன்றாள்..

கடப்பாறையை ஜீரணம் செய்வதை விட.. இது மிகவும் கடினமாக இருந்தது..

"டோன்ட டால்க் லைக் திஸ்.."

"ஹ.. இங்கிலீஷ்..! எனக்கு இங்கிலீஷ் தெரியாது.. தமிழில் பேசு.. நீ தழிழச்சிதானே.. ஏன் தமிழில் பேசப் பிடிக்காதா...? இல்லை.. தமிழில் பேசினால்.. தமிழர் பண்பாட்டை ஃபாலோ பண்ணனுமேங்கிற பயமா..? நீ மனம் போனதுபோல வாழ்கிறவளாச்சே.. உனக்கு தமிழ் பிடிக்காதுதான்..."

"ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்..."

"நான் சொன்னதுதான் சரிபோல இருக்கே..."

ஹரிதா தன்னைக் கட்டுப்டுத்திக் கொள்ள மிகவும் பாடுபட வேண்டியிருந்தது..

"இப்போது உங்களுக்கு என்னதான் வேண்டும்...?"

"நான் கேட்டால் கொடுத்து விடுவாயா...?"

கிருஷ்ணாவின் பார்வை.. வேட்கையோடு அவள்மீது படிந்தது.. ஹரிதா முகம் சிவந்து போனாள்...

இந்தப் பார்வையை அவளால் எதிர்நோக்க முடியவில்லை.. முகம் திருப்பிக் கொண்டாள்..

"ஏன்.. என் முகத்தைப் பார்க்க பிடிக்கவில்லையா..? அந்த குமரனின் முகத்தைத்தான் பிடித்திருக்கிறதா...?"

"அசிங்கமாய் பேசாதீங்க.. குமரன் நல்ல மனிதர்..."

"நான் மோசமான மனிதனா...?"

"நான் அப்படிச் சொன்னேனா...?"

"ஏன்.. அதையும் சொல்லித்தான் பாரேன்.. அதை மட்டும் ஏன் மிச்சம் வைத்திருக்கிற...?"

"எனக்கு வேலையிருக்கிறது..."

"இதைப் பாருடா.. இவளுக்கு வேலை கொடுத்திருக்கிற எனக்கு வேலையில்லையாம்.. என்னிடம் வேலை பார்க்க வந்த இவளுக்கு மட்டும் வேலை யிருக்கிறதாம்..."

எப்படிப் போனாலும் அந்த வழியில் மறிக்கிறவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்தாள் ஹரிதா..

அவன் அதற்கும் வம்பிழுத்தான்..

"என்ன பேச்சையே காணோம்.. இவன் பேசுகிறதுக் கெல்லாம் கட்டாயம் பதில் சொல்லணும்கிற அவசியமென்னன்னு நினைக்கிறாயா...?"

"இல்லை.."

"என்ன இல்லை...?"

"அப்படி நினைக்கவில்லை..."

"வேறு எப்படி நினைத்த...?"

"எப்படியும் நினைக்கவில்லை..."

"ஓகே.. என்னை எப்படியும் நினைக்கவில்லை.. குமரனை எப்படி நினைத்த...?"

"ஒரு நண்பராக..."

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா...?"

"நம்பித்தான் ஆக வேண்டும்.."

"அப்படியென்ன கட்டாயம்..? நீ எனக்கு ஆர்டர் போடுகிறாயா..."

"விளக்கம் சொல்கிறேன்.."

"பொய் சொல்கிறாய்ன்னு சொல்லு.."

"உண்மையைத்தான் சொல்லுகிறேன்.."

"உண்மையா..? உன்னிடம் உண்மை இருக்கிறதா..? பொய்யைத் தவிர வேறு எதுவுமே இல்லாதவள் நீயாச்சே.. நீயெல்லாம் உண்மையைப் பற்றி வாயைத் திறந்து பேசலாமா...? உனக்கு அந்த தகுதி இருக்கிறதா...?"

ஈட்டிகள்.. குத்திக் கிழிக்கும் வார்த்தை ஈட்டிகள்.. அவளது இதயத்தை குத்திக் கிழித்து.. குருதியைச் சொட்ட வைக்கும் வார்த்தை ஈட்டிகள்..

கிருஷ்ணா பேசிய வார்த்தைகள் ஈட்டிகளாய் அவளது நெஞ்சில் பாய.. குருதிப் புனல் பெருக்கெடுக்க.. ஹரிதா அந்த கண்ணுக்கு தெரியாத அஸ்திரத்தால் பிணைக்கப்பட்டாள்..

ஆனாலும் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை.. முன்னால் நின்று கொண்டிருப்பவனின் முகம் பார்க்கத் துடித்த மனத்தை அடக்க முடியவில்லை..

'யார் பேசுவது...?' அவள் தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்...

'நீதானே பேசுகிறாய்.. பேசு.. எதை வேண்டுமானாலும் பேசு.. நான் கேட்டுக்கொள்கிறேன்..'

"என்ன.. வாயடைத்து விட்டதா...?"

'வாய்தான் அடைத்து விட்டது.. அன்பு அடைத்துக் கொள்ளவில்லை.. அன்பிற்கு அடைக்கும் தாழ் கிடையாது..

இதை நான் சொல்லவில்லை.. வள்ளுவரே சொல்லியிருக்கார்...'

"அவனிடம் அப்படிப் கொட்டும் அருவியைப் போலப் பேசிக் கொண்டிருந்தாயே.. என்னிடம் பேச மட்டும் வார்த்தைகள் கிடைக்கவில்லையா...?"

ஏனோ.. கிருஷ்ணாவின் கோபத்தில் ஹரிதாவின் மனதில் சாரல் அடித்தது.. குளுமையான அந்தச் சாரலில் மனம் நனைந்தாள் ஹரிதா..

கிருஷ்ணாவிற்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது..? அந்தக் கோபம் உணர்த்திய செய்தி ஒன்று தான்.. அந்தச் செய்தி.. குமரனுடன் ஹரிதா பேசியதை கிருஷ்ணா விரும்பவில்லை என்பதுதான்..

"அவனை உனக்கு முன்பே தெரியுமா...?"

"யாரைக் கேட்கறீங்க...?"

ஹரிதா வேண்டுமென்றே அறியாதவளைப் போலக் கேள்வி கேட்டாள்.. கிருஷ்ணா பல்லைக்கடித்தான்..

"தெரியாதவளைப் போல நடிப்பதில் நீ கில்லாடிடீ.."

கோபத்தில் கிருஷ்ணா 'டீ' என்று அழைத்து விட ஹரிதா கண்கள் மின்ன.. அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

அவளைக் காயப்படுத்தும் வேகத்தில் பேசிக் கொண்டிருந்தவன் அவள் முகம் ஒளிர நிமிரவும்.. பேச்சை நிறுத்திவிட்டான்..

அவளது விழிகளில் மின்னலும்.. முகத்தின் மலர்ச்சியும் அவனை என்னவோ செய்தன.. ஒளிரும் அவள் முகத்தையே ஓர் வினாடி தீர்க்கமாகப் பார்த்தான்..

'எவ்வளவு நாள்களாகி விட்டது.. இவன் என்னை உரிமையுடன் 'டீ'.. என்று கூப்பிட்டு...' அவள் முகம் விகசிக்க அவனை ஆனந்தத்துடன் பார்த்தாள்..

அவளது பார்வை அவனைக் கட்டிப்போட்டது.. அந்தி மயங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில்.. அவன்

முகம் பார்த்து நின்று அவளது தோற்றம்.. அவனை 'வா'வென்று அழைத்தது..

அவன் பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்த அவளது பார்வையை யோசனையுடன் பார்த்தான்..

'எதற்காக இந்தப் பரவசம்...? நான் ஒரு வார்த்தை 'என்னடி' என்று கேட்டுவிட்டேன் என்பதற்காகவா...?'

ஹரிதாவின் மனம் பொங்கிக் கொண்டிருந்தது.. அவள் மனம் கடந்த காலத்தை நோக்கித் தாவியது.. உருண்டோடிவிட்ட காலத்தில் அவள் பின்னோக்கி நகர்ந்து வாழ ஆசைப்பட்டாள்..

'ஏன் அந்தக் காலம் முடிந்தது..? எனக்கென நீ இருந்தாயே.. என் பின்புலத்தைப் பற்றி யோசிக்காமல் அடைக்கலம் தந்தாயே.. உன் அடைக்கலம் எனக்கு நிரந்தரம் என்று நம்பியிருந்தேனே...'

ஹரிதா மனம் கசிந்தாள்.. தாய் பிரிந்தபோது.. தந்தை மறைந்த போது அடைந்த வேதனைகளை விட அதிகமான மனவேதனையை அடைந்தாள்..

14

ஹரிதாவின் கண்களில் நீர் பளபளத்தது.. பொங்கிய அவள் மனத்தை அறிந்தவனைப் போல கிருஷ்ணா அவளை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்தான்...

அவள் விழிகள் விரிந்தன.. நம்ப முடியாத பேரானந்தத்துடன் அவள் அவனைப் பார்த்தாள்.. அவளது விழிகள் காதலுடன் அவனை 'அருகில் வா..' என்று இறைஞ்சின..

கிருஷ்ணா அவளையே பார்த்தவண்ணம் அடுத்த அடியை அவளை நோக்கி எடுத்து வைத்து முன்னேறினான்.. ஹரிதாவின் பார்வை அவனை ஈர்த்தது..

அந்தப் பார்வையை அவளிடம் அதற்கு முன்னால் பலதடவை அவன் பார்த்திருக்கிறான்.. ஆகர்ஷிக்கும் அந்தப் பார்வைக்கு அடிமையாகிப் போன பொழுதுகளை நினைத்துப் பார்த்தவனின் நெஞ்சம் குழுங்கியது..

கிருஷ்ணா ஹரிதாவை நெருங்கிவிட்டான்.. அவள் பின்னால் நகரவில்லை.. முகத்தில் ஆட்சேபணையைக் காட்டவில்லை.. முகம் திருப்பிக் கொள்ளவில்லை.. அசையாமல் அவன் முகத்தைப் பார்த்த வண்ணம் நின்றாள்..

அவளது தோளில் அவன் கரம் படிந்தது.. அவளது மேனியில் சிலிர்ப்பு ஓட.. அவள் உடல் சிலிர்த்தாள்.. அதை உணர்ந்தவனின் உணர்ச்சி வெள்ளம் உடைந்து கொள்ள.. அவன் ஆவேசத்துடன் அவளை அருகில் இழுத்துத் தழுவிக் கொண்டான்..

ஹரிதா நம்ப முடியாத பிரமிப்புடன் அவனது தோளில் முகம் புதைத்து.. இறுக்கி தன்னை அவனுடன் பிணைத்துக் கொண்டாள்.. அவனது முதுகில் அவளது கரங்கள் படர்ந்து பரவி.. படிந்தன..

அவளது நெருக்கத்தை உணர்ந்து கொண்டவன் அதைவிட பன்மடங்கு அதிகமான நெருக்கத்துடன் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு.. அவளது இதழ் தேடிக் குனிந்தான்..

ஹரிதா முழு மனத்துடன் தன்னை அவனுக்கு ஒப்புக்கொடுத்தாள்.. நீண்ட நேரம் கழித்து.. அவளது இதழ்களை விடுவித்தவன் அவளது கழுத்தில் இதழ் பதித்து முகம் புதைத்தான்..

அவனறிந்த அவளது வாசனை அவனது நாசியில் நுழைந்தது.. அவனுக்கு பழக்கமான அந்த வாசனையில் மனம் கிளர்ந்தவன் தன்னை மறந்து புலம்பினான்..

"ஏண்டி அப்படிச் செய்தே...?"

"சுரேஷ்...?"

ஹரிதாவின் உரிமையுடன் கூடிய அந்த அழைப்பு அவனை மேலும் கிளர்ச்சியடையச் செய்தது..

"சுரேஷ் தாண்டி.. நான் உன் சுரேஷ்தான்.. ஊருக்கெல்லாம்.. ஏன்.. என் அம்மாவுக்குக் கூட நான் கிருஷ்ணா தான்.. உனக்கு மட்டும் சுரேஷ் தாண்டி.. அதுகூட உனக்கு மறந்துவிட்டதே.."

"இல்லை சுரேஷ்.. நான் மறக்கவில்லை.. நான் செத்தாலும் என் சாம்பல் கூட சுரேஷ்ன்னு உங்கள் பெயரைச் சொல்லும்..."

"அப்புறம் ஏண்டி.. அப்படி ஒரு காரியத்தை செய்யத் துணிந்தே...?"

"நான் விளக்கம் சொன்னேனே..."

"பொய் சொன்னாய்..."

"என்னிடம் பொய்யில்லை..."

"பொய்யில்லையா...?"

கிருஷ்ணா சட்டென்று அவளை விலக்கித் தள்ளினான்.. அவன் தள்ளிவிட்ட வேகத்தில்.. அவள் புல் தரையில் விழுந்தாள்.. அவளுக்கு அருகே மண்டியிட்டு அமர்ந்த கிருஷ்ணாவின் முகத்தில் மீண்டும் கோபம் குடிகொண்டிருந்தது...

"உன்னிடம் பொய்யில்லையா..? உன் பெயர் ஹரிதான்னு சொல்கிறாயே.. அது பொய்யில்லையா...?"

ஹரிதாவின் மனதில் வேதனை சூழ்ந்து.. எத்தனை தடவைதான் அவள் இந்தத் தண்டனைகளுக்கு ஆளாவது..? வாழ்நாள் பூராவும் இவை அவளைத் துரத்துமானால்.. தாங்கும் சக்தி அவளுக்கு இருக்குமா..? அவனது வெறுப்பிற்கு ஆளாகி வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று துக்கப்பட்டவள் ஹரிதா..

ஆனால் அதற்கு முன்னால் அவனுக்கு அவளது காதலை உணர்த்தி விட வேண்டும்.. அவளிடம் பொய்யில்லை..

அவளது காதல் பொய்யில்லை என்று அவன் உணர்ந்து விட வேண்டும்..

"இல்லை.. அது பொய்யில்லை.. என் பெயர் ஹரிதாதான்.."

"அப்போ என்னிடம் சொன்னது பொய்யா...?"

"இல்லை.. அதுவும் பொய்யில்லை..."

"ஏய்ய்..."

கிருஷ்ணா ரௌத்திரம் அதிகரித்தவனாக அவளது கூந்தலை வெறியுடன் இறுக்கிப் பிடித்தான்.. ஹரிதாவிற்கு அது வலிக்கவில்லை.. அவள் காதல் அதிகரித்தவளாய் அவனைப் பார்த்தாள்.. இப்படியே அவன் அவளைக் கொன்றுவிட்டால் கூடத் தேவலை என்று அவனுக்குத் தோன்றியது..

'நீ கொன்றால் கூடக் குத்தமில்ல.

நீ சொன்னால் சாகும் இந்தப் புள்ள...'

அவள் மனம் அந்த நிலையிலும் பாடியது.. அவளது விழிகளில் தெரிந்த அந்தக் காதலைக் கண்டு.. அவனது பிடி தளார்ந்தது..

"ஏண்டி என்னைக் கொலைக்காரன் ஆக்குகிற...?" அவன் தாள மாட்டாமல் பொருமினான்..

"என்னைக் கொன்றால் நீங்க கொலைகாரன் ஆகிவிட மாட்டிங்க சுரேஷ்.. உங்கள் கையில் செத்தால் நான் சந்தோசமாக.. நிம்மதியாக உயிரை விடுவேன்..."

"பாவி.. சண்டாளி.. என் சந்தோசத்தையும்.. நிம்மதியையும் சாகடித்துவிட்டு.. நீ மட்டும் போய் சேர்ந்து விடலாம்ன்னு பார்க்கிறியா..? நான் அதற்கு விட மாட்டேன்.. உன்னை அணு அணுவாய் சித்திரவதை பண்ணினால்தான் என் மனம் ஆறும்..."

"எனக்குச் சம்மதம்..."

"எதற்கு சம்மதம்..?"

"உங்கள் கையில் சித்தரவதைப் பட..."

அவள் முகத்தில் தென்பட்ட அமைதி அவனை தாக்கியது..

அவளை எந்த வகையில் தண்டிப்பது என்று புரியாமல் அவன் திகைத்தான்..

'அடிக்கிறாயா.. அடித்துக் கொள்.. என் ரத்தம் கொட்டுவதைக் காண உனக்கு விருப்பமா.. என்னை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் குத்திக் காயப்படுத்து.. என் உடலில் அந்த ரணங்களை ஏற்றுக் கொள்கிறேன்.. என் உடலின் கடைசி சொட்டு ரத்தத்தையும் உன் காலடியில் கொட்டுகிறேன்..' என்று விருப்பத்துடன் தண்டனைக்குத் தயாராக நிற்பவளை அவன் என்னதான் செய்வது...?

அவளை அடிக்க அவனால் முடியாது.. அவளுக்கு வலித்தால்.. அதைவிட பல மடங்கு அதிகமாக அவனுக்கு வலித்துத் தொலைக்கும்..

அவன் இயலாமையுடன் அவளது தலையிலிருந்து கையை எடுத்துக் கொண்டு எழுந்தான்.. நகர முற்பட்டவனால் நகர முடியவில்லை.. ஹரிதா அவனது கால்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு.. அதில் முகம் புதைத்து சப்தமில்லாமல் கதறிக் கொண்டிருந்தாள்..

"உண்மைதான் சுரேஷ்.. நான் உங்களிடம் என் பெயர் 'பூஜா'ன்னு சொன்னது உண்மைதான்.."

"உன்னை வெட்டிப் போட்டு விடுவேண்டி..."

"செய்யுங்க சுரேஷ்... தாராளமாக அதைச் செய்யுங்க.."

"ஏண்டி.. உன் பெயர் 'பூஜா'ன்னு அன்றைக்கு என்னிடம் சொன்னே.. அது பொய்யில்லைங்கிற.. இங்கே ஹரிதான்னு சொல்லிக்கிட்டு வந்து நிற்கிற.. இதுவும் பொய்யில்லைங்கிற.. உன்னிடம் எதுதான் நிஜம்டி..."

"இரண்டுமே நிஜம்தான் சுரேஷ்.. என் சர்ட்டிபிகேட் பெயர் ஹரிதா.. என்னை வீட்டில் கூப்பிடும் பெயர் பூஜா.."

"இது என்ன புதுக்கதை...?"

கிருஷ்ணாவின் புருவங்கள் முடிச்சிட்டன..

## 15

"கதையில்லை சுரேஷ்.. நிஜம்..."

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா...?"

'இதையே எத்தனை தரம்தான் சொல்வாய்..?' ஆற்றாமையுடன் விழி மூடிக்கொண்டாள் ஹரிதா...

குடைபோல் கவிழ்ந்த இமைகளுடன்.. அவள் நின்ற கோலம் அவனை ஈர்த்தது.. சற்று முன்னால் அவள் இதழில் முத்தமிட்ட நினைவு வர.. அவனது உடலின் உணர்வுகள் கிளர்ந்தன..

"நீ மோகினிடி..." அவன் பொறுமினான்..

"ஆளை அடிக்கும் மோகினிப் பேய்.. உன்னை விட்டு ஓடி வந்துவிட்டேனே.. இன்னும் ஏன் என்னை பின் தொடர்ந்து வந்து அலைக்கழிக்கிற...?"

"உங்களிடம் வராமல் நான் எங்கே போவேன்...?"

அவளது கேள்வியில் மனம் இளகியவனுக்கு சற்று முன் அவளை அருவிக் கரையில் குமரனுடன் பார்த்த நினைவு வர.. முறைத்தான்..

"உன்னைப் பார்த்தால் என்னைத் தேடி வந்தவளைப் போல் தெரியவில்லையே.."

"வேறு எப்படித் தெரிகிறது...?"

"வேறு ஆள் பிடிக்க வந்ததைப் போலத் தெரிகிறது.."

ஹரிதா மனதில் அடிவாங்கினாள். அவனைப் பார்த்த விழிகளில் அந்த வலியின் வேதனை தெரிய.. கிருஷ்ணாவின் பேச்சு நின்று விட்டது..

"என்னைக் கொன்றுவிடுங்கள்.." ஹரிதா குமுறினாள்..

"உங்கள் கைகளினால் என்னைக் கொன்று புதைத்துவிடுங்கள்.. இப்படிப் பேசிக் கொல்லாதீங்க.. இதைவிடச் சாவு மேல்..."

கிருஷ்ணா.. உதட்டைக் கடித்துக் கொண்டான்.. அவன் மனதில் வேதனை சூழ்ந்தது.. அவளை துன்புறுத்துவதில் அவனுக்கு மட்டும் சந்தோசம் கிடைத்து விடுகிறதா.. என்ன..?

"இவ்வளவு தூரம் பேசுகிறவள்.. அவனுடன் தனியே அருவிக்கரைக்கு போயிருக்கக்கூடாது..."

"அவருடன் நான் போகவில்லை.."

"பின்னே...?"

"நான் தனியாகத்தான் போயிருந்தேன்.. அங்கே அவர் வந்தார்..."

"அவனைப் பார்த்தவுடன் நீ வந்திருக்க வேண்டியது தானே..."

"எப்படி...? அது அவரை சங்கடப்படுத்தாதா..?"

"ஓஹோ.. அடுத்தவரின் சங்கடத்தைப் பற்றி இத்தனை தூரம் யோசிப்பவள்.. என்னைப் பற்றி ஏன் யோசிக்காமல் போனாய்..?"

சுற்றிச் சுற்றி அவன் ஒரே கேள்வியிலேயே வந்து நிற்க.. ஹரிதா அவனை நிமிர்ந்து.. ஊடுருவிப் பார்த்தாள்.. அவளது விழிகள் கதை பேசின..

"நான் உங்களைத் தவிர.. வேறு யாரைப் பற்றியும் யோசித்ததில்லை.. இதுதான் உண்மை.."

அவனது உதடுகள் துடித்தன.. கோபத்துடன் எதையோ பேசப் போனவன்.. வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து கொண்டிருந்த சகுந்தலாவைக் கண்டதும்.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்..

அவர்கள் இருவரையும் தோட்டத்தில் பார்த்து விட்ட சகுந்தலா ஆச்சரியப்பட்டாள்..

'இதுக இரண்டுக்கும் ஏழாம் பொருத்தமாச்சே.. இங்கே என்ன பண்ணுதுக..'

அவள் அவர்களை நோக்கி வர.. சட்டென்று திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்ட ஹரிதா.. நொடிப் பொழுதில் உணர்வுகள் துடைக்கப்பட்ட முகத்துடன் திரும்பினாள்..

அவளைப் போல கிருஷ்ணாவினால் உணர்வுகளை மறைக்க முடியவில்லை.. அதனால்.. அதே கோப முகத்துடன் நின்று கொண்டிருந்தான்..

அவர்களுக்கு அருகே வந்த சகுந்தலா...

"என்னடா கிருஷ்ணா.. எதற்கு ஹரிதாவை அதட்டிக் கொண்டிருக்கிற..?" என்று கேட்டாள்..

"நான் அவளை அதட்டினதை நீங்க பார்த்தீங்களா..?"

"பார்க்கவில்லைதான்..."

"அப்புறம் எதற்காக இப்படிச் சொல்கிறீங்கம்மா.."

"கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையாடா.. நீ கோபமாய் நிற்கிற.. ஹரிதா பாவம்.. சாதுவாய் பேசாமல் நிற்கிறாள்.. இங்கே என்ன நடந்திருக்கும்ன்னு என்னால் கண்டுபிடிக்க முடியாதா...?"

"இவளா சாது..?"

"இவள்தான் சாது..."

"ம்ஹூம்.. உங்களைத் திருத்தவே முடியாதும்மா.."

"தெரியுதில்ல.. வீண் முயற்சியை விட்டு விட்டு என் கேள்விக்கு பதில் சொல்லு.. ஏன் இந்த அப்பாவியைத் திட்டின..?"

"இவள் படுபாவிம்மா.."

"வேண்டாம் கிருஷ்ணா.. எனக்கு கோபம் வரும்.."

"வந்துவிட்டுப் போகட்டும்..."

"எதுக்குடா அவளைத் திட்டின...?"

"நம் வீட்டுத் தோட்டத்தில் மாறுதல் செய்ய இவள் யார்..? அதனால்தான் திட்டினேன்.."

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா...?"

"அது உங்கள் இஷ்டம்.."

கிருஷ்ணா எரிச்சலுடன் ஹரிதாவை முறைத்து விட்டு வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்..

'அவன் போகிறானே..' அவள் மனம் தவித்தாள்..

அவனது அருகாமை நிலைக்காத ஏக்கத்துடன் அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தவளின் தோளில் ஆதரவாகக் கையை வைத்தாள் சகுந்தலா..

"அவன் முசுடும்மா.. அவன் பேசுவதையெல்லாம் மனதில் வைத்தக் கொள்ளாதே.."

'நான் அவனையே மனதில் வைத்திருக்கிறேனே..'

"பாவம்.. நீயோ வாய் பேசாதவள்.."

'வாயிருந்தும் ஊமையாகி விட்டவள்ன்னு சொல்லுங்க..'

"உன்னைப் போய் அவன் இந்தப் பாடுபடுத்து கிறானே.."

'அதற்கு அவனிடம் நியாயம் இருக்கிறதே...'

"உன் முகத்தைப் பார்த்தால் திட்டத் தோன்றுமா..?"

'அவனுக்குத் தோன்றும்..'

"என்னவோம்மா.. அவன் உன்னிடம் மட்டும் தான் இப்படி நடந்து கொள்கிறான்.."

'இதை எனக்கு நீங்க சொல்கிறீங்களா.. எனக்கே இது தெரியுமே...'

"மற்றபடி அவன் தங்கக்கம்பிம்மா."

'இதுவும் எனக்குத் தெரியும்..'

"வாம்மா வீட்டுக்குள் போகலாம்.. குளிர் ஆரம்பித்து விட்டது..."

வீட்டுக்குள் போனதும்.. ஹரிதாவின் கண்கள் அவனைத் தேடின.. அவனைக் காணவில்லை.. அவள் ஏமாற்றத்துடன் சமையலறைக்குச் சென்றாள்..

"என்னாச்சு மல்லிகா..." என்று கேட்டாள்..

"நீங்க சொன்னபடி சப்பாத்தி செஞ்சு.. குருமா வைச்சுட்டேன்.. தயிர் சோறு தாளிச்சு வைச்சாச்சு.. தொட்டுக்க புளிக் கூட்டு.. போதுமா.. இன்னும் வேணுமா.." என்று பதிலுக்கு கேட்டாள்.. சமையல் வேலை செய்யும் மல்லிகா..

"என்னவோ.. இந்த நடை போதுமா.. இன்னும் கொஞ்சம் வேணுமான்னு கேட்கிறதைப் போல கேட்கிறயே.."

ஹரிதா சிரித்தபடி.. பாத்திரங்களை டைனிங் ஹாலுக்கு எடுத்துச் சென்று பரப்பி வைத்தாள்..

## 16

ஹரிதா பரிமாறிக் கொண்டிருப்பதை கனிவோடு பார்த்தாள் சகுந்தலா.. அமைதியான முகத்தடன் சுரேஷ் கிருஷ்ணாவின் தட்டைப் பார்த்து பரிமாறிக் கொண்டிருந்தாள் ஹரிதா.. அவளுடைய சலனமில்லாத முகத்தில் ஒரு ஞானியின் தெளிவு இருந்தது..

"நானொரு ராணி...

பெண்களில் ஞானி..."

டைனிங் ஹாலில் இருந்த எப்.எம் ரேடியோவில் இருந்து பாடல் ஒலித்தது.. அந்தப் பாடலைக் கவனிக்காமல் தன் வேலையில் கவனமாக இருந்தாள் ஹரிதா..

"கண்ணிலே என்ன உண்டு..

கண்கள்தான் அறியும்..

கல்லிலே ஈரம் உண்டு

கண்களா அறியும்...?

என் மனம் என்னவென்று

என்னையன்றி யாருக்குத் தெரியும்..?"

ஹரிதாவின் கரண்டி பிடித்த கை அப்படியே நின்றுவிட்டது.. பாடலின் வரிகள் அவன் மனதில் புகுந்து கொள்ள.. அவள் சகுந்தலா அறியாமல் சுரேஷ் கிருஷ்ணாவைப் பார்த்தாள்.. அவனும் அப்போது அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்..

"கொஞ்சம் தயிர் சாதம் போடு ஹரிதா..."

சகுந்தலாவின் குரலில் பார்வையை விலக்கிக் கொண்டவள் தயிர் சாதக் கிண்ணத்தை கையில் எடுத்துக் கொள்ள.. கிருஷ்ணா ஒரு பெருமூச்சுடன் எழுந்து கொண்டான்..

அவன் கை கழுவிக் கொண்டிருந்தபோது.. ஹரிதா சமையலறைக்குப் போனாள்.. அவள் அருகில் வரும் வரை காத்திருந்தவன் மெதுவான குரலில்

"உனக்கேற்ற பாட்டுத்தான்..." என்றான்..

"புரியலை.." அவள் புரிந்தும்.. புரியாதவளைப் போல பதில் சொன்னாள்..

"உனக்கா புரியாது...? நீ உலகத்தை விற்று விடுவாயே.."

"நான் வியாபாரியில்லை..."

"நான் வியாபாரின்னு சொல்கிறாயா..?"

"ப்ளீஸ்.. மேடம் பார்க்கப் போகிறாங்க.."

"உன் மனம் என்னன்னு உனக்குத்தானே தெரியும்.. அதைத்தான் நான் சொன்னேன்.."

"எனக்கு மட்டும் தெரிந்து என்ன பண்ண..? உங்களுக்கு அது தெரியவில்லையே.."

"வேணாம்மா.. அந்த ரிஸ்க்கே எனக்கு வேண்டாம்.. பொதுவாக பெண்களின் மனம் ஆழ்கடல்ன்னு சொல்லுவாங்க.. உன் மனமோ ஆழம் காண முடியாத பெருங்கடல்.. அதில் விழுந்து வைத்தால் என் கதி என்னாவது..?"

ஹரிதா அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.. அவனது முகத்தை.. அதில் தெரிந்த கம்பீரத்தை.. அலையலையாய் படிந்த கேசத்தை.. அவளையறியாமல் ரசித்தபடி கேட்டாள்..

"அப்போ.. இதுவரை நீங்க அதில் விழவேயில்லைன்னு சொல்கிறீங்களா..?"

பதிலை எதிர்பார்க்காமல் அவள் விருட்டென்று உள்ளே போய் விட.. அசையாமல் நின்றான் சுரேஷ் கிருஷ்ணன்..

'விழவில்லையா.. நான் அவளிடம் விழுந்து விட்டதுதானே நிஜம்.. அந்த தெனாவெட்டில்தானே அவள் அப்படியொரு காரியத்தை செய்யத் துணிந்தாள்.. என்னிடம் கேட்டிருந்தால்.. நான் சொத்தையே அவளுக்கு எழுதிக் கொடுத்திருப்பேனே.. அவள் கேட்கவில்லையே.. கேட்காமல் துரோகம் செய்யத் துணிந்தாளே..'

அவன் முகம் இறுகிப் போக.. மாடிப்படியில் ஏறிவிட்டான்..

"நீயும் சாப்பிடும்மா..." சகுந்தலா உத்தரவிட்டாள்..

"இருக்கட்டும் மேடம்.. நீங்க சாப்பிட்டு முடிங்க.."

"நான் சாப்பிட்டு முடித்துவிட்டால் உனக்கு யார் கம்பெனி கொடுப்பது..? உட்காரும்மா.. அது தான் கிருஷ்ணா தூங்கப் போய்விட்டானே.. அவன் இருந்திருந்தால்தான்.. தேள் போலக் கொட்டிக் கொண்டிருப்பான்.. நீ நிம்மதியாய் சாப்பிட முடியாது.. இப்போது என்னம்மா.. உட்காரு.."

'தேள் போலக் கொட்டினாலும் அவன்தான் எனக்கு வேண்டும்..' என்று சொல்லத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள் ஹரிதா..

'கொட்டும் தேள்' இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்று அலைபாய்ந்தது அவளது மனது..

தூங்கியிருப்பானா..? அவனால் மட்டும் எப்படி நிம்மதியாய் தூங்க முடிகிறது..? அவனை மறந்து அவளால் தூங்க முடியவில்லையே..

"என்னம்மா யோசனை...?"

"ஒன்றுமில்லை மேடம்.."

"அப்பாம்மாவை நினைத்துக் கொண்டாயா..?"

"இனி நினைத்து ஆகப் போவதென்ன...?"

விரக்தியுடன் ஹரிதா பேசுவதை சகுந்தலாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..

'இந்த இளம் வயதில் துணைக்கு யாருமில்லாமல்.. காக்க ஒரு சொந்தமில்லாமல் அநாதையாய் நிற்கிறாளே..'

சகுந்தலாவின் மனம் இரக்கப்பட்டது.. ஹரிதாவைப் பரிவுடன் பார்வையால் வருடினாள் அவள்..

"உனக்கு யாருமில்லைன்னு நினைக்காதேம்மா.. நானிருக்கிறேன் உனக்கு.. என்னை உன் அம்மாவாய் நினைத்துக் கொள்.."

சாப்பிட்டுக் கொண்டிருந்த ஹரிதா.. பிரமிப்புடன் சகுந்தலாவை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளால் தன் செவிகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை..

"மேடம்.." ஹரிதா அழுதுவிட்டாள்..

"அழாதேம்மா.. இந்த உலகத்தில் யாரும் தனியில்லை.. உன் கண்ணீரைக் கண்டால் கண்ணனே வந்து நிற்பான்.."

"கண்ணனா...?"

"ம்ம்.. கண்ணன்தான்.. இந்தப் பாட்டைக் கேட்டாயா..?"

எப் எம்மில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலை ஹரிதா கூர்ந்து கேட்டாள்..

"கண்ணன் வந்தான் - அங்கே

கண்ணன் வந்தான்

ஏழைக் கண்ணீரைக் கண்டதும்

கண்ணன் வந்தான்.."

என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது...

"கேட்டாயா ஹரிதா.. கண்ணன் ஏழைப் பங்காளன்.. உன் கண்ணீரைக் கண்டால் ஓடி உன்னிடம் வந்துவிடுவான்.."

'உண்மையா..?' ஹரிதா தனக்குள் கேட்டுக் கொண்டாள்.. 'எத்தனை முறை நான் ஏங்கிக் கண்ணீர் விட்டிருக்கிறேன்.. ஒரு தடவை கூட.. என் கண்ணன் எனக்காக மனம் இரங்கவில்லையே...'

அவள் ஏக்கத்துடன் கிருஷ்ணா போன திசையை பார்த்துக் கொண்டாள்..

சகுந்தலாவிற்கு தேவையான மருந்து.. மாத்திரைகளைக் கொடுத்து அவளைப் படுக்க வைத்து விட்டு.. மாடியேறிய ஹரிதாவின் நடை தளர்ந்திருந்தது..

வெகுநாள்களாக அவளறியாமல் இருந்த அவனின் ஸ்பரிசத்தை அறிந்த உணர்வு அவளை ஆட்டுவித்தது..

அவனுக்கேயுரிய அந்த ஆண்மை கலந்த வாசனையை நுகர அவளது மனம் விழைந்தது..

'அடித்தாலும்.. அணைத்தாலும்.. எனக்கு இரண்டும் ஒன்றுதான்...' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

அடிப்பதும்.. அணைப்பதும் அவனல்லவா..?

அன்று இரவு ஹரிதா தூங்க வெகு நேரமாகிவிட்டது.. விடியும் போதுதான் அவளது இமைகள் மூடின..

தோட்டத்தில் பூப்பறித்து பூக்குடலையில் போட்டுக் கொண்டிருந்தாள் ஹரிதா..

"குட்மார்னிங்க..." என்ற குரல் கேட்டதும்.. திரும்ப யோசித்தாள்...

அது குமரனின் குரல்.. அவனிடம் பேசினால் கிருஷ்ணா வறுத்தெடுத்து விடுவான்...

எனவே காது கேட்காததைப் போன்ற பாவனையுடன் அவள் உள்ளே நுழைந்து விட்டாள்..

'ஏன் இப்படி என்னைக் கண்டதும்.. பேயைக் கண்டதைப் போல ஓடுகிறாள்..?' குமரனின் புருவங்கள் முடிச்சிட்டன...

"ஹலோ.. எனக்கெல்லாம் குட்மார்னிங் சொல்ல மாட்டாயா..? பெண்களிடம் மட்டும்தான் சொல்லுவாயா..?"

கிருஷ்ணா.. ஜாகிங் டிரெஸ்ஸில் வந்தபடி கேட்டான்..

குமரன் பதில் சொல்லாமல் அவனையே இமைக்காமல் பார்த்தான்..

"த்சு.." என்று அலுத்துக் கொண்டான் கிருஷ்ணா..

"சரக்குன்னா இப்படி ஒரு பார்வையை பார்த்து விடு.. ஏண்டா.. என்னைப் பார்த்தால் உனக்கு சைட் அடிக்கத் தோணுதா.."

"உனக்கு என்னிடம் வம்பிழுக்க ஏதாவது ஒரு காரணம் வேணும்.. அதுதானே.. ஓட்டு ராஜா ஓட்டு..."

"அது சரி.. நான் கேட்டதைச் சொல்லவில்லையே.."

"என்னடா கேட்ட...?"

"ஒரு குட்மார்னிங்.."

"அதைக் கேட்டுத்தான் நீ வாங்கணுமா...?"

"என்ன செய்வது..? உனக்குத்தான் என்னைக் கண்ணுக்கு தெரிய மாட்டேங்குதே.. அதுவே ஒரு பெண்ணாக

இருந்தால் கண்ணுக்கு தெரியுது.. எதுக்கும் நீ ஒரு நல்ல கண் டாக்டரிடம் உன் கண்களைக் காட்டு.."

"பார்க்கலாம்..."

"எதைப் பார்க்கலாம்கிற.. நீ பார்க்கிறதையெல்லாம் நான் பார்க்க மாட்டேனே.. உன் பார்வை வேறு.. என் பார்வை வேறு குமரா..."

குமரன் அயராமல் கிருஷ்ணாவின் அருகே வந்தான்.. அவன் தோளில் இரு கைகளையும் போட்டு..

அவனது விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தான்.. பின்பு கேட்டான்..

"என்ன விசயம் கிருஷ்ணா.. நீ ஹரிதாவைக் காதலிக்கிறாயா...?"

நேரடியான கேள்வி.. எதையும் எதிர்கொள்ளும் வீரம் கொண்ட கிருஷ்ணாவினால் இந்தக் கேள்வியை எதிர்கொள்ள முடியவில்லை..

"எரிச்சலைக் கிளப்பாதே.." என்று முகம் சுளித்தான்..

"இந்த ஆனைமலையில்.. விடியற்காலையில்.. முகம் சுளித்து எரிச்சல்படும் முதல் ஆள் நீதான்.." குமரன் நிதானமாகக் கூறினான்..

"இப்படி அபத்தமாய் கேட்டால் என்ன செய்வது...?"

"ஊஹூம்.. நீ காரணமில்லாமல் எதையும் செய்ய மாட்ட.. பேச மாட்ட.. நேற்று என்னையும்.. ஹரிதாவையும் அருவிக் கரையில் பார்த்ததிலிருந்து நீ ஒரு மார்க்கமாகவே பேசுகிற.. அதற்கு என்ன காரணம்ன்னு எனக்குத் தெரிய வேண்டும்.."

"ஒரு மண்ணாங்கட்டிக் காரணமும் இல்லை..."

"அதை என் கண்ணைப் பார்த்துச் சொல்லு..."

கிருஷ்ணா குமரனின் கண்களைப் பார்க்கவில்லை.. முகம் திருப்பிக் கொண்டான்.. அவன் முகத்தை பிடிவாதமாக தன்

பக்கம் திருப்பினான் குமரன்..

"சொல்லுடா.. நீ என் பிரண்ட்.. என்னிடம் ஏன் மறைக்கிறாய்..? அவளை நீ காதலிக்க நினைக்கிறாயா..?"

அவனின் இந்தக் கேள்வியைக் கேட்டதும்..

"இனி புதிதாகத்தான் காதலிக்கணுமா..?" என்று சொல்லிவிட்டான் கிருஷ்ணா..

'பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது...'

குமரன் நண்பனை இழுத்துக் கொண்டு.. தோட்டத்து மர பெஞ்சிற்கு போனான்.. அவன் தோளைப் பிடித்து அதில் அமர வைத்து.. அருகே தானும் அமர்ந்து கொண்டான்..

"இப்போச் சொல்லு.. ஹரிதாவை உனக்கு எப்படித் தெரியும்..? எப்போதிருந்து தெரியும்...?"

"அவள் பெயர் ஹரிதா இல்லை..."

"அவளுடைய சர்டிபிகேட்டில் ஹரிதான்னுதான் போட்டிருந்தது.. அம்மாவும்.. நானும் பார்த்தோம்..."

"என்னிடம் பூஜான்னு சொன்னாள்.."

"ஓ.. அப்புறம்...?"

"என்னிடம் வேலைக்கு சேர்ந்தாள்.."

"என்ன வேலை...?"

"டெக்னீஷியன்.."

"எம்.எஸ்ஸி பயோ கெமிஸ்ட்ரி.. படித்தவள்.. உன் பயோ டெக்னாலிஜி கம்பெனியில் வேலைக்கு சேர்ந்ததில் ஆச்சரியமில்லை.. ஆனால் நீ அவளுடைய சர்டிபிகேட்டை வெரிஃபை பண்ணாததுதான் ஆச்சரியமாக இருக்கிறது.."

"த்சு.. நான் அவளைக் காதலித்து தொலைத்து விட்டேன்டா.. அதனால் சர்டிபிகேட்களை வெரிஃபை பண்ணாமல்.. அக்கவுண்ட்ஸில் கொடுத்து விட்டேன்.."

"அங்கே சம்பளம் போடும்போது என்ன பெயரில் போட்டார்கள்.,"

"பூஜா..." கிருஷ்ணாவின் முகம் இறுகியது..

"அது எப்படிடா...?"

"அதுதான் எனக்கும் புரியவில்லைடா.. ஒன்று அங்கே கொடுத்த சர்டிபிகேட்கள் போலியாக இருக்கணும்.. இல்லைன்னா.. இங்கே கொடுத்த சர்டிபிகேட்கள் போலியாக இருக்கணும்.."

"உனக்கு வேறு ஏதும் ஐடியா இருக்கிறதா...?"

"இருக்கிறது..."

"என்ன ஐடியா...?"

"என்னகென்னவோ.. இவள் இரண்டு இடத்திலுமே போலி சர்டிபிகேட்களைத்தான் கொடுத்திருக்கிறாள் என்று தோன்றுகிறது.. இவளுடைய உண்மையான முகமும்.. முகவரியும் வேறு.."

குமரனுக்கு தூக்கி வாரிப் போட்டது.. ஹரிதாவை அவனால் அப்படி நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.. ஏதோ.. ஊர்.. ஊராய் போய் கொள்ளை அடிப்பவளைப் பற்றி பேசுவதைப் போல கிருஷ்ணா பேசியதைக் கேட்டதும் அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை..

"அவளிடம் இதைப் பற்றிக் கேட்டாயா...?"

"கேட்டேன்.."

"என்ன சொல்கிறாள்..?"

"இப்போதைய பெயரும் முகவரியும்தான் உண்மையாம்.."

"அப்புறம் எதற்குடா அப்போது பொய் சொன்னாள்..?"

"அதுவும் பொய்யில்லையாம்..."

"என்னது...?"

குமரனுக்கு மீண்டும் தூக்கிவாரிப் போட்டது...

"ஆமாம்டா.. அவளுக்கு இரண்டு பெயராம்... வீட்டில் பூஜாவாம்.. வெளியில் ஹரிதாவாம்.. கதை சொல்கிறாள்.."

இப்போது கிருஷ்ணா சொல்வதை குமரன் மறுத்துப் பேசவில்லை..

"கதைதாண்டா.. என்னடா கிருஷ்ணா.. முகத்தைப் பார்த்தால் நல்லவள் போலத் தெரிகிறதே..."

"நானும் அப்படித்தான் ஏமாந்தேன்.."

"நீ அவளைக் காதலித்தாயா...?"

"அவளும் என்னைக் காதலித்தாள்.. இல்லை யில்லை.. காதலிப்பதைப் போல நடித்தாள்.."

"எதற்காக கிருஷ்ணா.. உன்னை ஏமாற்றி கல்யாணம் செய்து கொள்வதற்காகவா..?"

"அப்படியிருந்தாலும் பரவாயில்லையேடா..."

"இதைச் சொல்வது சுரேஷ் கிருஷ்ணாவா.. என்ற ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான் குமரன்.."

## 18

எதற்கும் அஞ்சாதவன்.. தாய்.. தகப்பன் தேடி வைத்திருந்த சொத்துக்களில் உட்கார்ந்து அமர்ந்து ஆண்டு அனுபவிக்காமல் தனக்கென ஒரு அடையாளத்தை தேடி.. அந்த ஆனைமலையை விட்டுச் சென்றவன்.. உலகம் பூராவும் பரந்திருக்கும் மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை உருவாக்கியவன்..

பார்க்கும் பார்வையிலேயே ஒரு மனிதரின் குணாதி சயங்களை எடை போட்டு விடும் ஆற்றல் படைத்தவன்.. மன்னிக்கத் தெரியாதவன்..

அவன் சொல்கிறான்.. 'அவள் என்னை கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காக ஏமாற்றியிருந்தால் பரவா

யில்லையே..' என்று..

குமரனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.. இதைச் சொல்வது கிருஷ்ணாதானா என்று வியப்புடன் நண்பனைப் பார்த்தான்..

ஹரிதா அவனை ஏமாற்றியதை மன்னித்து மறந்து விட அவன் தயாராக இருக்கிறான்.. ஆனால்.. அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காக ஏமாற்றாமல்.. வேறு எதற்காகவோ அவள் ஏமாற்றியதைத்தான் அவனால் மன்னித்து மறக்க முடியவில்லை.. என்றால்.. இதை என்னவென்று சொல்வது...?

கிருஷ்ணா ஹரிதாவை அந்த அளவுக்கு நேசித்திருக்கிறான் என்பது புரிய வந்ததும்.. குமரனுக்கு ஹரிதாவின் மேலிருந்த நல்ல அபிப்ராயமே போய் விட்டது.

"என்னடா இப்படிச் சொல்கிற..? நீ கோடீஸ்வரன் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் அவளது வாழ்க்கைத்தரமே மாறிப் போய் விடுமே.. அதற்காகத்தானே அவள் உன்னைக் காதலித்ததைப் போல நடித்திருக்க வேண்டும்.."

"இல்லை குமரா.. அவள் ஏமாற்றுக்காரிதான்... ஆனால் ஒரு விசயத்தை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.."

"என்ன விசயம்டா..."

"அவள் என்னை நம்ப வைத்து ஏமாற்றினாள்.. ஆனால் அதற்குக் காரணம் வேறு.. அவள் என்னை காதலிப்பதாய்ச் சொல்லியதில் நடிப்பில்லை.. அவள் என்னைக் காதலித்ததிலும் நடிப்பில்லை.. அந்த ஒரு விசயத்தில் அவள் உண்மையாகத்தான் இருந்தாள்..." கிருஷ்ணாவின் குரலில் உறுதி தெரிந்தது..

அதை குமரனும் உணர்ந்திருந்தான்.. கிருஷ்ணாவை எதிர்பார்த்து ஹரிதா தவித்த தவிப்பை.. முதல் முதலாய் பார்த்த நினைவு அவனுக்குள் வந்தது..

"அவள் உன்னைக் காதலிப்பதாய் சொன்னாளா..?"

"இல்லை.. நான்தான் அவளைக் காதலித்தேன்.. முதலில் அவளிடம் என் காதலைச் சொன்னேன்.."

"அவள் உடனே 'ஐ லவ் யு டூ'ன்னு சொல்லி விட்டாளாக்கும்..."

"அதுதான் இல்லை.. அவள் முகம் மாறிவிட்டாள்.. என் காதலை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள்.."

"ஈஸிட்...?"

குமரன் ஆச்சரியத்துடன் நண்பனை நோக்கினான்.. கிருஷ்ணாவின் வசீகரம் கலந்த கவர்ச்சியான தோற்றத்தின் மீது குமரனுக்கு பொறாமை உண்டு..

அப்பேர்பட்ட ஆணழகன்.. மிகப் பெரிய கோடீஸ்வரன்.. தன் காதலை ஒரு சாமானியப் பெண்ணிடம் சொல்லியிருக்கிறான்.. ஆனால்.. அவள் அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்திருக்கிறாள்..

இதை அவனால் நம்பவே முடியவில்லை..

"ஏண்டா.. அவளுக்குத் தேவை பணம்தானேடா.."

கிருஷ்ணா அடிபட்ட பார்வையுடன் நண்பனைப் பார்த்தான்.. தன்னுடையவளைப் பற்றிய மோசமான விமர்சனத்தைக் கேட்டு விட்ட மன வலி அவனது விழிகளில் தெரிந்தது..

அதை உணர்ந்து கொண்டவனாய்.. குமரன் உதட்டைக் கடித்துக் கொண்டு

"ஐ ஆம் ஸாரிடா..." என்றான்..

பதிலுக்கு 'பரவாயில்லை...' என்று கிருஷ்ணா சொல்லவில்லை.

"அவள் அப்படிப்பட்ட பெண்ணில்லைடா.." என்றுதான் சொன்னான்..

"அவள் மேல் இப்படிப்பட்ட அபிப்ராயத்தை வைத்திருப்பவன் எதற்காக நேற்று அருவிக்கரையில்

அவளை அப்படிப் பேசினாய்..?" குமரனின் வார்த்தைகளில் குற்றச்சாட்டு இருந்தது..

"வெறி.. அவளை எப்படியாவது காயப்படுத்தி விடணும்கிற வெறி.. இதைத் தவிர வேறு என்ன சொல்வது குமரா.. அவள் மேல் எனக்கிருந்த காதல் நிஜமானது..."

"இப்போதும் அந்தக் காதல் இருக்கிறது.."

"தெரியவில்லை..."

"அதை விடு.. அவளிடம் அதேகாதல் இன்னும் இருக்கிறதா...?"

இதைக் கேட்டதும் கிருஷ்ணாவின் முகம் கனிந்து மென்மையாகி விட்டதை மீண்டும் வியப்புடன் கவனித்தான் குமரன்..

இன்றைய பொழுது.. வியப்புகளுடன் விடிந்திருக்கிறது என்று அவனுக்குத் தோன்றியது..

"என் மேல் அவளுக்கிருக்கும் காதல் அழியாதது.. அவளே சொல்வதைப் போல.. அவள் செத்தாலும் அந்தக் காதல் சாகாது.. நிரந்தரமாய் உயிர்ப்புடன் இருக்கும்..."

இதைச் சொல்லியவனின் முகத்தில் தெரிந்த கர்வத்தைக் கண்டு குமரனுக்கு பொறாமை ஏற்பட்டது..

காதலிப்பதை விட.. காதலிக்கப்படுவது சுகமான ஒன்று.. அதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்..

'கிருஷ்ணா கொடுத்து வைத்தவன்..' என்ற நினைவில் குமரன் மௌனமானான்..

"அவள் என் காதலை ஏற்கவில்லை.. விலகி.. விலகிப் போனாள்.. நான் விடாமல் துரத்தித் துரத்தி அவளைக் காதலித்தேன்.. என் கூடவே இருக்கிறதைப் போல அவளுக்கு 'பெர்ஸனல் மேனேஜர்' போஸ்டைக் கொடுத்தேன்.. நான் போகுமிடத்திற்கெல்லாம்.. அவளையும் அழைத்துச் சென்றேன்.."

கிருஷ்ணாவின் கண்களில் கடந்த காலத்தின் காதல் தெரிந்தது.. குமரன் அவனைப் பேசவிட்டு கேட்டுக் கொண்டிருந்தான்..

"உனக்குத் தெரியுமா குமரா.. அவள் எங்கே.. தன் காதலை ஒப்புக்கொண்டாள் என்று.."

குமரன் 'தெரியாது' என்ற பாவனையில் தலையை அசைத்தான்..

"நாங்க டில்லி பிரான்ச்சிற்கு போயிருந்த போது.. ஆக்ராவைச் சுற்றிப் பார்க்க அவளை அழைத்துச் சென்றேன்.. தாஜ்மஹாலின் முன்னால் வைத்து.. அவள் என்னைக் காதலிக்கவில்லையா என்று கேட்டேன்.. அவள் அழுது விட்டாள்.. அந்த இடத்தில் அவளால் பொய் சொல்ல முடியவில்லை.. அவளுடைய காதலை ஒப்புக் கொண்டு விட்டாள்..."

அது எப்பேர்பட்ட நொடி என்று.. கிருஷ்ணாவின் கண்களில் இருந்து தெரிந்து கொண்டாள் குமரன்..அதை தன் வார்த்தைகளால் மெய்ப்பித்தான் கிருஷ்ணா..

"அது அருமையான தருணம் குமரா.. என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு நடந்த தருணம்.. அவள் கண்களில் நான் காதலைப் பார்த்திருக்றேன்டா.. ஆனால் அவள் அதை ஒப்புக் கொள்ள பிடிவாதமாக மறுத்தாள்.. தாஜ்மஹாலின் முன்னால் அவளால் பொய் சொல்ல முடியவில்லை.. உண்மையை ஒப்புக் கொண்டாள்..."

இந்தக் காதல்தான் எப்பேர்பட்டது என்று நினைத்துக் கொண்டான் குமரன்..

எங்கோ பிறந்து வளர்ந்து இருவரையும் கட்டிப் போடும் கடினம் கொண்டது.. ஒருவருக்காக ஒருவர் உயிரைவிடும் அளவிற்கு ஆழமான அன்பையும்.. நேசத்தையும்.. சொந்தத்தையும் தருவது..

குமரனும்.. கிருஷ்ணாவும்.. அந்த நிமிடத்தை ஆராதனை செய்கிறவர்களாய் மௌனமாக அமர்ந் திருந்தனர்.. வார்த்தைகளற்ற அற்புதமான மௌனம் அவர்களைச் சூழ்ந்திருந்தது.. அவர்களைச் சுற்றி விழுந்த மலர்கள் கூட அந்த மௌனத்தை மதித்து மிக மிக மெதுவாக தரையில் விழுந்தன..

கலைக்க விருப்பமில்லாமல் அந்த மௌனத்தை முதலில் கலைத்தான் குமரன்..

"உன்னைக் காதலித்தவள் ஏன் காதலை ஒப்புக் கொள்ள மறுத்தாளாம், கிருஷ்ணா..?"

"பணம்.. எனக்கும் அவளுக்கும் இடையில் இருந்த மலைக்கு மடுவுக்கும் இடையில் உள்ளது போன்ற அந்தஸ்து வித்தியாசம்.. இதைத் தவிர.. இன்னொன்றும் இருந்திருக்கிறது.. அது எனக்கு பிரிவின்போதுதான் தெரிய வந்தது.."

"ஓ..!"

"உங்களை.. உங்களுக்காகவே காதலிக்கிறேன்னு சொன்னாள்டா.. அவளே பொய்த்துப் போன பின்னாலும்.. அவளது இந்த வார்த்தைகளில் பொய்யிருப்பதாக நான் நினைக்கவில்லை.."

"எதனால் அப்படிச் சொல்கிறாய்..?"

"அவளது காதலில் பொய்யில்லை.. உண்மை யிருந்தது.. அவளது கண்களில், செய்கைகளில்.. துடிப்பில்.. அந்தக் காதலை நான் உணர்ந்திருக்கிறேன்.. அனுபவித்திருக்கிறேன்.."

"அப்புறமும் ஏண்டா அவளைப் பிரிந்தாய்..?"

"வேறு என்ன செய்வது..? எல்லாமும் நானாக இருந்தவள்.. எனக்கு எல்லாமுமாக இருந்தவள்.. என் எதிரியின் கைக்கூலி.. வேவு பார்க்க என் கம்பெனிக்குள் நுழைந்தவள் என்று தெரிய வந்த பின்னால்.. அவளை வெறுக்காமல் என்னால் எப்படி இருக்க முடியும்..? அவளைப் பிரியாமல்

வேறு என்ன செய்ய முடியும்..?" கிருஷ்ணா அனலைக் கக்கினான்..

"கிருஷ்ணா.." குமரன் அதிர்ந்து நோக்கினான்..

"அதிர்ச்சியாக இருக்கிறதாடா..? கேட்ட உனக்கே இவ்வளவு அதிர்ச்சியாக இருக்கிறதே.. அந்த துரோகத்தை சந்தித்த எனக்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருந்திருக்கும்..?"

கிருஷ்ணா தலையைப் பிடித்துக் கொண்டான்.. குமரனால் இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியவில்லை..

அவளா..? ஹரிதாவா..? இப்படி ஒரு செயலைச் செய்யவும் அவளால் முடியுமா..? காதல் என்ற பெயரால் ஒருவனை மயக்கி அவனது ரகசியங்களை உளவு

பார்க்கும் செயல்களை ஜேம்ஸ் பான்ட் போன்ற ஆங்கிலப் படங்களில்தான் குமரன் பார்த்திருக்கிறான்.. நிஜத்தில்.. அவனது நண்பனின் வாழ்வில் அதுபோல

ஒரு சம்பவம் நடந்திருக்கிறதா..? அதைச் செய்தவள்.. குமரனின் மனதில் தேவதையைப் போன்ற பெண் என்று நினைத்தவளா..?

"எப்படிடா..?" தாங்க முடியாமல் கேட்டான் குமரன்..

"இதை எப்படிடா ஹரிதா செய்தாள்..? அவள் முகத்தைப் பார்த்தால் கள்ளமில்லையே.. அவளா இப்படியொரு காரியத்தைச் செய்தாள்..? நீ நன்றாக விசாரித்துப் பார்த்தாயா..?"

குமரன் கேள்விக் கணைகளைத் தொடுக்க.. கிருஷ்ணா விரக்தியுடன் சிரித்தான்..

"எனக்கு மட்டும் அவள் மேல் பழிபோட ஆசையாடா..?"

"உனக்கு எப்படி இந்த விவரம் தெரிய வந்தது..?"

"ஒரு பார்ட்டியில் நான் பக்கத்திலிருப்பதைப் பார்க்காமல் என் தொழில் எதிரி இவளிடம் பேசி விட்டான்.. இவள் மலங்க.. மலங்க விழிக்கிறாள்.. நான் அவனைத் தனியாக

தள்ளிக் கொண்டு போய் நாலு போடு போட்ட போது அவன் உண்மையை கக்கிவிட்டான்.."

"ஒருவேளை அவன் வேண்டுமென்றே பேசி யிருந்தால்..? நீ அவளைச் சந்தேகிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் அவள் மேல் பழி போட்டிருந்தால்..?"

"எனக்கும் அந்த நப்பாசை இருந்தது.. ஏதேனும் ஒரு சிறு வழி கிடைத்துவிடாதா.. அதன் மூலம் அவள் பொய்யற்றவள் என்று நிரூபணம் ஆகிவிடாதா என்றுதான் நானும் துடித்தேன்.. ஆனால் குமரா.. அவள் அவன் சொன்னதுதான் உண்மையென்று சொல்லி.. பழியை ஏற்றுக்கொண்டு விட்டாள்.."

"என்னடா சொல்கிறாய்..?"

"ஆமாம்டா.. அவளே வலிய வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டாள்.. அவளை விசாரிக்க மன மில்லாமல்.. நான் ஒதுங்கிப் போனபோது.. என் முன் ராஜினாமா கடிதத்துடன் வந்து நின்றாள்.. என் தொழில் எதிரி சொன்னது அத்தனையும் உண்மை

யென்று சொன்னாள்.. உளவு பார்க்கத்தான் என்னிடம் வேலைக்கு சேர்ந்ததாக அவள் வாயால் சொல்லி விட்டாள் குமரா.."

"கடவுளே.."

"அதனால்தான் என் காதலை ஏற்றுக்கொள்ள மறுத்தாளாம்.. அவளுடைய காதலை ஒப்புக்கொள்ளாமல் மறைத்தாளாம்.."

"நீ என்ன செய்தாய் கிருஷ்ணா..?"

"அதற்கு மேல் என்னால் என்ன செய்ய முடியும்டா.. வெளியே அனுப்பி விட்டேன்.. அவளை மறக்க முடியாமல் வெளிநாட்டிற்கு போய்விட்டேன்.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டதுன்னு நீ தகவல் கொடுத்தாய்.. ஆனை மலைக்கு வந்தேன்.. வந்த இடத்தில் வேறு பெயர்..

வேறு முகவரியோடு இவள் வந்து நிற்கிறாள்.. நான் எப்படி பேசாமலிருக்க முடியும்..? நீயே நியாயத்தைச் சொல்லுடா.."

முடியாதுதான்.. உயிருக்குயிராய் காதலித்தவள் 'துரோகி' என்று தெரிந்த பின்னால்.. அவளை தன் தாயருகே பார்க்க முடியாதுதான்.. சகுந்தலாவின் தேர்வை ஒப்புக்கொள்ள கிருஷ்ணா மறுத்து வாதாடியதில் நியாயம் இருக்கிறது என்றே குமரன் நினைத்தான்..

சகுந்தலா வயதானவள்.. தனிமையில் இருக்கும் கோடீஸ்வரி.. அவளின் அருகே இருக்கும் பெண்.. தொழில் எதிரியின் கையாள் என்றால்.. கிருஷ்ணாவினால் அதை எப்படி அனுமதிக்க முடியும்..?

காதல் என்ற பெயரில் கிருஷ்ணாவை ஏமாற்றியவள்.. பாசம் என்ற பெயரில் சகுந்தலாவை ஏமாற்ற எவ்வளவு நேரம் ஆகும்..?

"என்னடா கிருஷ்ணா இது.. இவளைப் பற்றித் தெரியாமல் வீட்டுக்குள் சேர்த்து விட்டோமே.." குமரன் கையைப் பிசைந்தான்..

"இப்போது சொல்லு, நான் சொல்லும்போது மட்டும் என்னை வில்லனைப் போலப் பார்த்தாயே.."

"எனக்கு என்னடா தெரியும்..?"

"ம்ச்.. இது அம்மாவுக்கு தெரிய மாட்டேன்கிறதே.."

"சொல்லிவிடலாமா..?"

"வேண்டாம்.."

"ஏண்டா..?"

"என் வாழ்வில் நடந்த காதல் தோல்விக்கு வருத்தப் படுவாங்க.. இதுவரை பிஸினெஸ்ஸை காரணம் காட்டித்தான் நான் கல்யாணத்தை தள்ளிப் போடுகிறேன்னு நினைத்துக்கிட்டு இருப்பாங்க உண்மை தெரிந்தால்.. மனம் உடைந்து போவாங்க.. வேண்டாம்

குமரா.. என் துக்கம் என்னோடு.. இது அவங்களுக்கு தெரிய வேண்டாம்.."

குமரனுக்கு வேதனையாக இருந்தது.. அவன் அறிந்த கிருஷ்ணா உல்லாசி.. சிரித்துக் கொண்டே.. வானத்தைக் கூட வில்லாக வளைத்து விடும் திறமைசாலி.. அவனுக்குள் இப்படியொரு மனச் சுமையா..?

குமரன் தன் நண்பனையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனது முகச் சுளிப்பிலிருந்து அவனுக்கு விடுதலை கொடுக்க முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது..

## 20

"கிருஷ்ணா..." குமரன் ஆழ்ந்த குரலில் அழைத்தான்..

"என்னடா..?"

"நீயேன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது.."

"தச்சு.. வேறு பேசு.."

"நிஜமாகத்தான் கேட்கிறேண்டா.."

"குமரா.. ப்ளீஸ்.. இந்தப் பேச்சு வேண்டாம்.."

"ஏண்டா..?"

"வேண்டாமென்றால் வேண்டாம்.."

"அதுதான் ஏன்னு நானும் கேட்கிறேன்.."

கிருஷ்ணா உதடுகள் துடிக்க முகத்தை திருப்பிக் கொண்டான்..

"ஏனா..? நீ காதலித்துப் பார்.. அந்த மன வலி என்னன்னு உனக்கு அப்போது புரியும்.. அவளை நினைத்த மனது வேறு ஒருத்தியை நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறதே..

அவளைத் தொட்ட விரலால் இன்னொருத்தியை தொட என்னால் முடியவில்லையே.."

சட்டென்று எழுந்து போய் விட்டான் கிருஷ்ணா.. அவன் பின்னாலேயே போகாமல் அப்படியே உட்கார்ந்து விட்டான் குமரன்..

அவனால் இதை நம்ப முடியவில்லை.. அந்த சுற்று வட்டாரத்திலேயே கிருஷ்ணா கம்பீரமான.. கவர்ச்சியான.. அழகன்.. அவர்களது வட்டாரத்தில் நடக்கும் பார்ட்டிகளிலும்.. விழாக்களிலும்.. கிருஷ்ணாவிடம் பேசிப் பழக.. அழகான பெண்களின் கூட்டம் முட்டி மோதும்.. அவனது ஒரு சிறு பார்வைக்காக.. ஏங்கும் பெண்கள் பலரை குமரன் அறிவான்..

அப்படிப்பட்டவன்.. திருமணத்தையும்.. பெண் களையும் தவிர்க்கிறான்.. யாருக்காக..? காதல் என்ற பெயரால் உளவு பார்க்க வந்த ஒரு துரோகிக்காக..

இந்தக் காதல் என்ற உணர்வுதான் ஒரு மனிதனை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்று மனம் வியந்தான் குமரன்..

அவனுடைய நண்பன் காதலித்த பெண் ஒரு துரோகி.. அதையறிந்தும் அவனால் அவளை மறக்க முடியவில்லை.. வேறொருத்தியை நினைக்க முடிய வில்லையென்றால்.. அந்தக் காதல் எப்படிப்பட்டதாக இருக்கிறது..?

குமரனுக்கு ஒரு திரைப்பட பாடல் நினைவுக்கு வந்தது..

'ஓராயிரம் பார்வையிலே..

உன் பார்வையை நானறிவேன்..

உன் காலடி யோசையிலே..

நம் காதலை நானறிவேன்..'

சூழ்ந்திருக்கும் ஆயிரம் பார்வைகளிலே அவனுடைய காதலியின் பார்வையை மட்டும் அவன் கண்டுபிடித்து

விடுகிறானென்றால்.. அவனுடைய காதல் எப்படிப்பட்ட நுட்பமான தன்மை கொண்டதாக இருந்திருக்க வேண்டும்..?

பலரின் காலடி யோசைகளிலே.. அவனுடைய காதலியின் காலடியோசையை மட்டும் அவன் இனம் பிரித்து கண்டு பிடித்து விடுகிறானென்றால்.. அவனுடைய காதல் எவ்வளவு ஆழமானதாக இருக்க வேண்டும்..?

'இந்த மானிடர் காதலெல்லாம்..

ஒரு மரணத்தில் மாறிவிடும்..

அந்த மலர்களின் வாசமெல்லாம்

ஒரு மாலைக்குள் வாடிவிடும்..

நம் காதலின் தீபம் மட்டும்

எந்த நாளிலும் கூட வரும்..'

மரணத்தால் கூட மாறாத காதல் ஷாஜகானுடையது மட்டுமல்ல என்று நினைத்துக் கொண்டான் குமரன்..

உயிருக்குயிராய் காதலித்த பெண் நேர்மையற்றவள் என்று அறிந்த அந்தக் கணமே அவனுக்குள் அவள் மரித்து விடுகிறாள். அதன் பின்னாலும் அவளையே நினைத்து அவன் உருகுகிறான் என்றால்.. அவனுடைய காதலின் வலிமையை என்னவென்று சொல்வது..?

அதைச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை என்ற நினைவுடன் எழுந்து கொண்டான் குமரன்..

வீட்டுக்குள் போனால் ஹரிதாவை பார்க்க வேண்டி நேரிடும் என்பதால்.. அதைத் தவிர்க்க விரும்பியவனாய்.. வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தான் அவன்..

"குமரா.." சகுந்தலாவின் அழைப்பு அவனை தடுத்தது..

"என்னங்கம்மா.." நின்று.. திரும்பிக் கேட்டான்..

"என்னடா இது புதுப் பழக்கம்..?"

"எதைச் சொல்கிறீங்கம்மா..?"

"வழக்கமில்லாத வழக்கமாய்.. வாசலோடு போகிறாயே அதைச் சொல்கிறேன்.."

"ஒரு அவசர வேலைம்மா.."

"அதென்ன.. என்னைவிடப் பெரிதாக.. வெட்டி முறிக்கிற வேலை.. உனக்கிருக்கு..? வீட்டுக்குள் வாடா.."

வேறு வழியின்றி சகுந்தலாவைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் சென்றான் குமரன்..

"உட்காருடா.." சகுந்தலா அதட்டினாள்..

குமரன் அமர்ந்ததும்.. எதிரே அமர்ந்தவள்.. உள் பக்கமாகத் திரும்பிக் குரல் கொடுத்தாள்..

"ஹரிதா.. காபி கொண்டு வாம்மா.. குமரன் வந்திருக்கிறான்.."

எவள் முகத்தைப் பார்க்க விரும்பாமல் குமரன் வாசலோடு திரும்ப நினைத்தானோ.. அவளே காபிக் கோப்பையோடு அங்கே பிரசன்னமானாள்..

குமரனிடம் காபிக் கோப்பையையும் நீட்டினாள்..

அவள் முகம் பார்க்காமல் காபியை உறிஞ்ச ஆரம்பித்த குமரனைக் கண்டு.. அவளது புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது..

யோசனையுடன் அவன் நீட்டிய காபிக் கோப்பையை வாங்கிக் கொண்டு உள்ளே போய்விட்டாள் ஹரிதா..

சகுந்தலாவிடம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்த குமரன்..

"அம்மா.. நான் ஒன்று சொன்னால் கேட்பீங்களா..?" என்று கேட்டான்..

"ஏண்டா.. ஒன்று.. இரண்டுன்னு சொல்ல.. நீ யென்ன இன்னும் சிறுபிள்ளையா..?" சகுந்தலா சிரித்தாள்..

'ம்ஹும்.. உங்க மகன் செய்து வைத்திருக்கும் வேலையைப் பற்றித் தெரியாமல்.. நேரம்.. காலம் பார்க்காமல்..

ஜோக்கடித்து வைக்கறீங்க.. இதுக்கு நான் சிரிக்க வேற செய்யணுமா..?'

குமரன் முகம் மாறாமல் அமர்ந்திருந்தான்..

"இன்னைக்கு உனக்கு என்னடா ஆச்சு.." வியப்புடன் கேட்டாள் சகுந்தலா..

"ஏம்மா.. இப்படிக் கேட்கறீங்க..?"

"பொதுவாக நீதான் ஜோக்கடிப்ப... நாங்க எல்லோரும் சிரிப்போம்.. இப்போது என்னடான்னா.. நான் ஜோக்கடித்தும்.. நீ உம்முன்னு இருக்கிற.. ஊஹீம்.. என்னவோ நடந்திருக்கு.. என்னடா அது..?"

சகுந்தலாவின் கேள்வியைக் கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்த ஹரிதா.. குமரனை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு.. அவர்களைக் கடந்து வாசலுக்குச் சென்றாள்..

ஹரிதாவின் முதுகையே முறைத்துப் பார்த்த குமரனுக்கு எரிச்சல் வந்தது.. அவளைப் பற்றி கேள்விப் பட்ட தனக்கே இப்படி எரிச்சல் வந்தால்.. கிருஷ்ணாவிற்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டான் அவன்..

21

"நீங்க ஏன் கிருஷ்ணாவோடு போய் இருக்கக் கூடாது..?"

இப்படிக் கேட்ட குமரனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் சகுந்தலா.. இதுவரை அவன் இப்படிப் பட்ட வார்த்தைகளைப் பேசியதில்லை.. திடீரென்று அவன் வாயிலிருந்து உதிர்ந்த இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை..

"என்னம்மா.. பேசமாட்டேன்கறீங்க.."

"நீயென்னடா.. புதிதாய் இப்படிப் பேசி வைக்கிற..?"

"ஏதோ.. என் மனசுக்குத் தோன்றியது.. சொன்னேன்.. நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்கம்மா.."

"அதுதான் ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதிலைச் சொல்லிவிட்டேனே.."

"நான் இப்போதுதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.."

"உனக்கு முன்னால் கிருஷ்ணா பல தடவை இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கிறானேடா.. அப்போதெல்லாம் அவனுக்கு நான் என்ன பதிலைச் சொல்வேன்னு உனக்குத் தெரியாதா..? மறந்து விட்டாய்ன்னு சொன்னாய்.. உனக்கும் அதே பதிலைச் சொல்கிறேன்.. தாராளமாய் கேட்டுக்க... இது கிருஷ்ணாவின் அப்பா வாழ்ந்த வீடு.. இந்த எஸ்டேட் அவர் உருவாக்கிய எஸ்டேட்.. இதை விட்டுவிட்டு நான் வர மாட்டேன்.."

"நான் இதைப் பார்த்துக் கொள்கிறேன்ம்மா.."

"அது என்ன தேவைக்கு..?"

"எனக்காக.. நான் சொல்வதை கேட்க மாட்டீங் களாம்மா..?"

"இது என்னடா.. உன்னோடு வம்பாகப் போய் விட்டது.. சொன்னதையே சொல்கிற கிளிப்பிள்ளை போல.. பேசியதையே பேசிக்கிட்டு உட்கார்ந்திருக்கியே.."

"எனக்கும்.. கிருஷ்ணாவிற்கும்.. உங்க பாதுகாப்பை நினைத்து கவலையாய் இருக்கும்மா.."

"இத்தனை நாள் கவலைப்பட்டால் அதில் ஓர் அர்த்தமிருக்கு.. இப்போதும் கவலைப்பட்டால் நான் என்ன சொல்வது..?"

"இப்போது மட்டும் என்னவாம்..?"

"என்னடா தம்பி இப்படிக் கேட்டு வைக்கிற..? இப்போது தான் எனக்குத் துணையாகவும்.. பாதுகாப்பாகவும் ஹரிதா வந்துவிட்டாளே.."

'கிழிஞ்சது போங்க.. அவளால் உங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோன்னு தான் நானும் கிருஷ்ணாவும்

பயப்படுகிறோம்..' என்று சொல்லத் தோன்றினாலும்.. குமரன் மௌனம் சாதித்தான்..

இதைச் சொன்னால்.. கிருஷ்ணாவின் காதலைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும்.. அந்தக் காதலைத் தொடர்ந்து அதன் தோல்வியையும் சொல்ல வேண்டி வரும்.. அதை சகுந்தலா தாங்கிக் கொள்வாளா..?

மாட்டாள் என்பதால் குமரன் எழுந்து கொண்டான்..

"என்னடா எழுந்துட்ட..?"

"வேற என்னம்மா செய்வது.. எப்படியும் நான் பேசுவதை நீங்க கேட்கப் போகிறதில்லைன்னு தெரிந்த பின்னாலும் என் தொண்டைத் தண்ணீரை வற்ற வைத்துக் கொண்டு நான் ஏன் பேச வேண்டும்..?"

"நான் பெற்ற மகன்தான் கோபக்காரன்னு பார்த்தால்.. நான் வளர்த்த மகனும் அவனை மிஞ்சி கோபக்காரனா ஆகிட்டானே.. உட்காருடா சொல்கிறேன்.."

"நீங்க சொல்வதைக் கேட்கத்தான் உங்களுக்குன்னு ஒருத்தி வந்துவிட்டாளில்ல.."

"என்மேல் ஏண்டா இதுக்காகப் பொறாமைப் படறீங்க.. நீயும் கிருஷ்ணாவும் உங்களுக்குன்னு ஒருத்தியைக் கொண்டு வந்தால் நானென்ன வேண்டாம்ன்னா சொல்லப் போகிறேன்.."

'எனக்குன்னு ஒருத்தியை நாளைக்கே கூட கொண்டு வந்து நிறுத்திவிடுவேன்.. ஆனால் கிருஷ்ணா..?'

குமரன் நண்பனை நினைத்து வருத்தப்பட்டான்..

"என்னடா தம்பி.. மனசுக்குள்ள கதை படிக்கிற.."

"நீங்க என்ன.. என் மனதுக்குள்ள புகுந்து பார்த்தீங்களா..?"

"நான் அதுவும் செய்வேன்.."

"ஓவர் கான்பிடென்ஸ் வேண்டாம்மா.. உங்களால் எல்லோரின் மனதிலும் புகுந்து வெளிவர முடியாது.."

குமரனின் வார்த்தைகளில் தொனித்த மறை பொருளை உணர்ந்து கொள்ளாமல் வெள்ளையாய் சிரித்தாள் சகுந்தலா..

"போடா போக்கிரி.. நான் உன்னைப் பெற்றவளுக்கு பிரண்டுடா.. என்னால் முடியாததுன்னு எதுவும் இல்லை.."

குமரன் பதில் சொல்லாமல் சகுந்தலாவையே பார்த்துக கொண்டு நின்றான்.. பின்னர் ஒரு பெரு மூச்சுடன்..

"கிளம்புகிறேன்ம்மா.." என்று விடை பெற்றுக் கொண்டான்..

"போயிட்டு வா.. இதுக்கு மேலேயும் இங்கேயே உட்கார்ந்திருந்தால்.. நீயும் குழம்பி.. என்னையும் குழப்பி விடுவாய்.."

சகுந்தலா சிரித்தபடி விடை கொடுத்தாள்.. குமரன் முன்பக்க போர்டிகோவில் இறங்கி.. காம்பவுண்டை நோக்கிப் போன நீண்ட பாதையில் நடக்க ஆரம்பித்தான்..

"ஒரு நிமிசம்.." தோட்டத்தின் மறைவிலிருந்து ஹரிதா வெளிப்பட்டாள்..

குமரன் அதை எதிர்பார்த்திருக்கவில்லை.. அவனது முகம் சுளித்தது.. இதற்கு முன் ஹரிதாவைப் பார்த்ததும் ஏற்படும் இதமான உணர்வு அவனுக்குள் இப்போது ஏற்படவில்லை..

"என்ன..?" என்று கடுமையாகக் கேட்டான்..

அவனது கடுமையை உணர்ந்த ஹரிதா அதனால் துளிக்கூட பாதிக்கப்படாதவளாக..

"நான் உங்களிடம் பேச வேண்டும்.." என்று சொன்னாள்..

'அடுத்து ஆள் பிடிக்கிறாயா..?' என்ற கிருஷ்ணாவின் கேள்வி மனதில் தோன்ற எரிச்சலுடன் அவளைப் பார்த்தான் குமரன்..

"என்னிடம் நீங்க பேச.. என்ன இருக்கிறது..?" எகத்தாளமாக வினவினான் குமரன்..

"நிறைய இருக்கிறது.. ஃபார் எக்ஸாம்பிள்.. நீங்களும் உங்களுடைய நண்பரும் பேசிக் கொண்டதைப் பற்றிக் கூட பேசலாம்.." அவனது எகத்தாளத்தினால் முகம் மாறாமல் பேசினாள் ஹரிதா..

'எவ்வளவு தைரியம்..' குமரனின் மனம் கொந்தளித்தது..

"நானும் அவனும் பேசிக் கொண்டது எதுவென்று உங்களுக்குத் தெரியுமா..? எங்களுக்குள் பேசிக்கொள்ள ஆயிரம் விசயங்கள் இருக்கும்.."

"ஷ்யூர்.. ஆனால் அந்த ஆயிரத்தில் ஒரு விசயத்தைக் கூட இன்றைக்கு நீங்கள் பேசிக் கொள்ள வில்லைன்னு எனக்கு உறுதியாகத் தெரியும்.. ஆயிரத்து ஓராவது விசயமாக என்னைப் பற்றித்தான் நீங்க பேசினீங்கன்னு எனக்குத் தெரியும்.."

'இவளுக்கே இவ்வளவு தைரியமும்.. தெனா வெட்டும் இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்க வேண்டும்..? இவளிடம் பேச நான் ஏன் பயப்பட வேண்டும்..?' என்று குமரனுக்கு தோன்றிவிட்டது..

"ஹலோ.. உங்களைப் போன்ற ஆள்களே தைரியமாக வாயைத் திறந்து பேச வரும்போது.. எனக்கென்ன வந்தது.."

ஹரிதா அவன் பேசியதைக் கேட்டதும் சுற்று முற்றும் பார்த்தாள்.. அவளது பார்வையைக் கண்டு குமரனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"எதுக்கும்மா இந்தப் பார்வை பார்க்கறீங்க.." என்று அவன் கேட்டே விட்டான்..

"இல்லை.. நீங்க ஹலோன்னு சொன்னீங்களே.. யாரைச் சொன்னீங்க.. அதுதான் வேறு யாரும் இங்கே இருக்கிறாங்களான்னு பார்த்தேன்.."

அவளது இடக்குப் புரிய.. குமரன் அவளை எரித்து விடுவதைப் போலப் பார்த்தான்..

"இந்த மாதிரியான பேச்சுக்களை நீங்க கிருஷ்ணாவோடு பேசிக்குங்க.. என்னிடம் பேசி வைக்காதீங்க.." உதாசீனமான குரலில் குமரன் கூறினான்..

அவ்வளவு உதாசீனமாய் பேசக்கூட குமரனால் முடியும் என்பதை அப்போதுதான் அறிந்து கொண்ட ஹரிதா மனம் வாடினாள்.. ஆனால் அதை மறைத்துக் கொண்டு இயல்பாகவே பேச்சைத் தொடர்ந்தாள்..

"இது என்ன சார்.. புதிதாய் சொல்கிறீங்க.."

"புதிதாகச் சொல்கிறேனா.."

"ஆமாம்.. இதுவரை நான் இது போல விளையாட்டாய் உங்களிடம் பேசி நீங்க கேட்டுக் கொண்டதில்லையா..? இல்லை.. நீங்க பேசி.. நான் கேட்டுக் கொண்டதில்லையா..?"

"அது அப்போ.."

"இப்போ புதிதாக என்ன வந்துவிட்டது..?"

"புதையுண்டு கிடந்த பல விசயங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டன.."

"ஓஹோ.. அப்படியா.. அந்த விசயங்களில் என் தரப்பு நியாயம் என்னன்னு நீங்க தெரிஞ்சுக்க வேண்டாமா..?"

"உங்களுக்கு கூட நியாயம் இருக்கிறதா..?"

"ஏன் இருக்கக்கூடாது...? மானைத் துரத்துகிற புலியின் ஓட்டத்திலேயும் ஒரு நியாயம் இருக்கும்.. அதனிடமிருந்து தப்பியோடுகிற மானின் ஓட்டத்திலேயும் ஒரு நியாயம் இருக்கும்.. அவரவர் நியாயம் அவரவர்க்கு.. இதில் யாரை குற்றம் சொல்ல முடியும்..? நாணயத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு சார்.. அதே போல ஒவ்வொரு மனிதருக்கும் மறுபக்கம்ன்னு ஒன்று நிச்சயம் உண்டு.."

இவ்வளவு தெளிவாகப் பேசுகிறவள் ஒரு துரோகியென்று நினைக்கையில் குமரனின் நெஞ்சம் வலித்தது..

"நாணயத்திற்கும்.. மனிதருக்கும்.. மறுபக்கம் இருக்கலாம் ஹரிதா.. நியாயத்திற்கு மறுபக்கம் கிடையாது."

"நீங்க ஒரு பாட்டைக் கேட்டிருக்கீங்களா..?"

"என்ன பாட்டு..?"

"நான் பாடுகிறேன்.. கேளுங்க.."

ஹரிதா மெல்லிய குரலில் பாடிக் காட்டினாள்..

"இது நீரோடு செல்கின்ற ஓடம்..

இதில் நியாயங்கள் யார் சொல்லக் கூடும்..?

எந்த தர்மங்கள் எதனாலே மாறும்..?

எந்தக் குற்றங்கள் எதனாலே தீரும்..?"

அவள் பாடிய வரிகளையும்.. அதை அவள் உணர்ந்து பாடிய விதத்திலும் குமரன் ஸ்தம்பித்து விட்டான்..

ஹரிதாவின் இந்த புதிய பரிணாமம் அவனை அயர வைத்தது..

'அவளே குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டாள்டா..'

கிருஷ்ணாவின் குரல் அவன் காதுகளில் ஒலித்தது..

ஏன் ஒப்புக்கொண்டாள்..? இல்லையென்று அவள் மறுத்திருந்தால் கிருஷ்ணா சந்தோசப்பட்டிருப்பானே.. ஒருபோதும் அவளுடைய வார்த்தைகளை சந்தேகித்திருக்க மாட்டானே.. அப்படியிருக்கும்போது வலிய ஏன் அவள் உண்மையை ஒப்புக் கொண்டாள்..

ஹரிதாவின் அந்த நேர்மை இப்போதுதான் குமரனுக்கு புலப்பட்டது..

அவள் கிருஷ்ணாவைக் காதலித்திருக்கிறாள்.. அவனால் காதலிக்கப் பட்டிருக்கிறாள்.. அவனுடைய பணத்தையோ.. செல்வத்தையோ.. தொழில்களையோ.. அவள் நினைத்துப்

பார்த்திருக்காவிட்டாலும்.. அவை அனைத்திலும் பெரிதான அவர்களுக்கு இடையே இருந்த காதலை நிச்சயம் நினைத்துப் பார்த்திருப்பாள்.. அவள் உண்மையை ஒப்புக்கொள்வதால் அந்தக் காதலை இழக்க நேரிடும் என்பதை அறிந்தும்.. அவள் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறாள் என்றால்.. அவளது மன உறுதியையும்.. நேர்மையையும்.. வாக்குத் தெளிவையும் பாராட்டித்தானே தீர வேண்டும்..?

ஏனோ.. பாரதியின் கவிதை வரிகள் குமரனின் மனதில் அந்த நொடியில் தோன்றின..

'மனதில் உறுதி வேண்டும்..

வாக்கினிலே தெளிவு வேண்டும்..'

இவளும் பாரதி கண்ட புதுமைப் பெண்தான் என்று அவன் நினைத்துக் கொண்டான்.. இவளே சொல்வதைப் போல.. இவள் தரப்பிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யும்.. அது இல்லாமல் போகாது என்று அவனுக்கு அந்த நிமிடத்தில் தோன்றியது..

"சொல்லுங்க.. எங்கே.. எப்போது பேசலாம்..?" குமரன் வினவினான்..

"தேங்க்ஸ்.." ஹரிதாவின் குரல் கம்மியிருந்தது..

"எதுக்கு..?"

"என் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கு.."

"அதனால் நீங்க செய்த துரோகத்தை நான் மன்னித்து மறந்துவிட்டேன் என்று அர்த்தமாகாது.."

"நானும் அதை நியாயப்படுத்தப் போவதில்லை.. என் சூழ்நிலையின் நிர்ப்பந்தம் அதை நியாயப்படுத்தியதை சொல்லப் போகிறேன்.."

"கிருஷ்ணா என் உயிர் நண்பன்.. அவனுக்கு எதிரி எனக்கும் எதிரிதான்.."

"கிருஷ்ணா என் உயிர்.. அவருக்கு எதிரியாகி விட்ட நான்.. எனக்கும் எதிரிதான்.. எப்போதோ அவருக்குத் துரோகம் செய்யத் துணிந்த என்னை மாய்த்துக் கொண்டிருப்பேன்.. ஆனால்.. ஏன் அப்படிச் செய்தே னென்று அவரிடம் சொல்லாமல் போக மனம் வரவில்லை.. இன்னும் சொல்லப் போனால்.. என் துரோகத்திற்கு பிராயச்சித்தம் செய்யாமல் போகவும் என்னால் முடிய வில்லை.."

"அவனிடம் அதற்கான விளக்கத்தை நீங்க சொல்ல வில்லையா..?"

"அவர் கேட்கவில்லை.."

"ஏன்..?"

"எப்போது என் வாயால் என் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டேனோ.. அப்போதே அவர் என்னை வெறுத்துவிட்டார்.. அதற்கு மேல் ஒருவார்த்தை கூட என்னைப் பேசவிடவில்லை.."

"ஓ.."

அவனிடம் பேச முடியாததை.. குமரனிடம் அவள் பேச விழைவதை.. குமரன் புரிந்து கொண்டான்..

"தேங்க்ஸ் எகெய்ன்.."

குமரன் பதில் சொல்லாமல் நடக்க ஆரம்பித்து விட்டான்.. அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ஹரிதா.. தளர்ந்த நடையுடன் வீட்டுக்குள் திரும்பினாள்..

"என்ன.. அவனை அந்தப் பார்வை பார்க்கிற..?" எதிர்ப்பட்ட கிருஷ்ணாவின் வார்த்தைகளில் அனல் பறந்தது..

"உங்களைப் பார்த்த.. பார்க்கிற.. பார்வையை வேறு ஒருவரிடம் பார்க்க மாட்டேன்.. இது உங்களுக்கே தெரியும்.." ஹரிதா மடமடவென்று வீட்டுக்குள் போய் விட்டாள்..

கிருஷ்ணாவிற்கு அது தெரியும்தான்.. மிக நன்றாகவே தெரியும்தான்.. அவன் உதட்டைக் கடித்துக கொண்டான்..

தூரத்தில்.. அருவிக் கரையில்.. வழக்கமாய் அமரும் பாறையின் மேல் குமரன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.. ஹரிதா நடையை எட்டிப் போட்டாள்.. அருவியை சமீபித்ததும் குமரனின் எதிரில் இருந்த பாறையில் அமர்ந்தாள்..

மௌனமாக அவளை ஏறிட்டுப் பார்த்தான் குமரன்.. அவனது இயல்பற்ற அந்தச் செய்கையினால் மனம் நொந்தாள் ஹரிதா.. எவ்வளவு நல்ல மனிதன் இவன்..? இவன் வெறுக்கும் நிலைக்கு ஆளாகி விட்டோமே என்று அவள் மனம் துடித்தது..

"வந்து ரொம்ப நேரமாச்சா..?" ஹரிதா பேச்சை ஆரம்பித்தாள்..

"இந்த பார்மாலிட்டீஸை விட்டுவிட்டு பேச வந்ததை நீங்கள் பேசினால் தேவலை.." குமரன் வெடுக்கென்று பதில் சொன்னான்..

"நிச்சயமாய்ப் பேசுகிறேன்.. அதற்குத்தான் வந்திருக்கிறேன்.. குமரன்.. உங்க, அப்பா அம்மா எப்படியிருக்கிறாங்க..?"

இந்த நேரத்தில் அவளது நலவிசாரிப்பு அபத்தமாகக் குமரனுக்கு பட்டது.. அவன் விசித்திரமாக அவளைப் பார்த்தான்..

"என்னடா.. இது சம்பந்தா.. சம்பந்தமில்லாம பேசுகிறாளேன்னு நினைக்கறீங்களா குமரன்..?"

"நான் இல்லையென்று சொல்லப் போவதில்லை.. ஆனாலும் நீங்க கேட்டதற்கு பதில் சொல்கிறேன்.. என் அப்பாம்மா நல்லா இருக்காங்க.."

"கிருஷ்ணாவின் அப்பா எப்போது இறந்தார் குமரன்..?"

"இரண்டு வருடங்களாகிறது.."

"உடம்பு சரியில்லையா..?"

"ஒரு வகையில் அப்படித்தான்.. தூக்கத்திலேயே உயிர் போய்விட்டது.. ஹார்ட் அட்டாக்குன்னு பேசிக் கிட்டாங்க.."

"அதற்கு முன்னால் அந்த நோயின் அறிகுறி ஏதாவது அவரிடம் தெரிந்ததா..?"

"இல்லையே.. அதுதானே ஆச்சரியம்.. ஆள் நல்லா திடகாத்திரமாகத்தானே இருந்தார்.."

"இப்போது கிருஷ்ணாவின் அம்மாவுக்கு.. உடல் ஆரோக்கியம் நன்றாகத்தான் இருக்கிறது.. பாவம்.. அவங்களை கிருஷ்ணாவின் அப்பாவின் நினைவும்.. மகனின் கூட இருக்க முடியாத நிலைமையும்தான் தாக்கிக் கொண்டிருக்கிறது.."

"உண்மைதான்.. கிருஷ்ணா அம்மா கூடவே இருந்தால் அவங்க தெளிவாய் இருப்பாங்க.."

"நீங்களும்.. கிருஷ்ணாவும்.. பிறக்கும்போதே தங்க ஸ்பூனுடன் பிறந்தவர்கள்.. ஐ மீன்.. கோடீஸ்வரர்களாக பிறந்தவர்கள்.. இல்லையா..?"

'இப்போது எதற்காக இவள் இதையெல்லாம் பேசுகிறாள்..' என்ற நினைவுடன் குமரன்..

"ஆமாம்.." என்றான்..

"ஆனால்.. நான் அப்படியில்லை குமரன்.. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள்.. தாயின் முகத்தை அறியும் முன்னாலேயே.. தாயை இழந்தவள்.." ஹரிதா துக்கத்துடன் கூறினாள்..

அப்போதுதான் அவள் பேசியதற்கான காரணம் அவனுக்குப் புரிந்தது.. அவன் அனுதாபத்துடன் அவளைப் பார்த்தான்..

"அப்பா தொழில் ஆரம்பித்தார்.. தொழிலென்றால்.. உங்களுடையதைப் போல தொழிற்சாலையோ.. கம்பெனியோ இல்லை.. சின்ன பெட்டிக் கடை.. அம்மா

போனபின்னால்.. அம்மாவின் நகைகளை விற்று அப்பா ஆரம்பித்த பெட்டிக் கடை அது.. வருமானம் கொட்டா விட்டாலும்.. எங்கள் இருவரின் வயிற்றுப்பாட்டுக்கும் வழிசெய்தது.."

'கொடியது.. கொடியது.. இளமையில் வறுமை..'

ஔவையாரின் ஆத்திச்சூடி.. குமரனின் மனதில் ஒலித்தது.. அவன் முன்னால் அமர்ந்திருந்த அந்த அழகிய இளம் பெண் தாயின் அரவணைப்பு கிடைக்காதவள்.. வறுமையுடன் போராடியவள் என்று நினைக்கும்போது அவள்மீது அவனுக்கு இரக்கம் ஏற்பட்டது..

"நான் வளர ஆரம்பித்தேன்.. ஆனால் வருமானம் வளராமல் அப்படியே இருந்தது.. நான் ஸ்கூல் போக வேண்டும்.. நல்லதுணி மணிகள் உடுத்த வேண்டும்..

இந்த செலவுகளுக்கு அப்பா என்ன செய்வார்..? வேறு வழியில்லாமல் அவர் வீட்டின்மேல் கடன் வாங்க ஆரம்பித்தார்.."

அருகிலிருந்த அருவி தன் போக்கில் கொட்டிக் கொண்டிருந்ததைப் போல.. ஹரிதாவும்.. மனதிலிருந்ததைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.. குமரன் குறுக்கிடவில்லை.. அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான்..

"எனக்கு நன்றாக அந்த நாள் நினைவிலிருக்கிறது குமரன்.. வாங்கிய கடனுக்காக எங்கள் வீடு ஏலத்திற்கு வந்தது.. அந்த வீட்டின் முன் பகுதியில் தான் அப்பா

கடை போட்டிருந்தார்.. சின்ன வீடு தான்.. ஓட்டு வீடுதான்.. ஆனால்.. அது எங்கள் வீடு.. நாங்கள் இருப்பதற்கு மேலே கூரையும்.. கீழே தரையும் தந்து.. சுற்றிலும் சுவர்களுடன் பாதுகாப்பைத் தந்த வீடு.."

குமரன் உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டான்.. இது போன்ற கதைகள் அவனுக்குப் புதிது.. அவனது பழகும் வட்டாரமும்.. உறவினர் வட்டாரமும் வேறு.. அதில் துக்கம் இருந்ததில்லை.. துன்பம் இருந்ததில்லை..

"அப்போதுதான்.. எங்களுக்கு எதிர்பாராத இடத்தி லிருந்து உதவி வந்தது.."

ஹரிதா கூறியதும்.. ஆர்வத்துடன் குமரன்..

"யார் உதவி செய்தது..?" என்று கேட்டு விட்டான்..

"என் அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பி.."

"அதாவது உங்களுக்கு மாமா.."

"அப்படியும் சொல்லலாம்.."

"அவர் வீட்டை மீட்டாரா..?"

"ஆமாம்.. அத்தோடு நிற்காமல்.. அப்பாவுக்கு வேலை போட்டுக் கொடுத்தார்.. எங்களின் வாழ்க்கையே மாறிப் போனது.."

"முதலிலேயே உங்கள் அப்பா அவரிடம் உதவி கேட்டிருக்கலாமே.."

"அப்போது அவர் இந்தியாவிலேயே இல்லையே.."

"வேறு எங்கே இருந்தார்..?"

"மலேசியாவில் இருந்தாராம்.. பெரிய பணக்காரராக திரும்பி வந்திருந்தார்.. எங்கள் ஊரில் பெரிய தொழிற் சாலையைக் கட்டி எல்லோருக்கும் வேலை கொடுத்தார்.. அப்பாவை அந்தக் கம்பெனிக்கு மேனேஜர் ஆக்கினார்.."

"பரவாயில்லையே.. ரொம்ப நல்லவர்தான் போல..."

"நல்லவர்தான்.. அதில் சந்தேகமில்லை.. அவர் எங்கள் குடும்பத்திற்கு எதையும் எதிர்பார்த்து உதவி செய்யவில்லை.. ஆனால்.. அவரிடம் நாங்கள் நன்றிக் கடன் பட்டுவிட்டோம்.."

குமரனுக்கு எதுவோ பிடிபடுவதைப் போல இருந்தது..

"உங்களுக்கு ஒன்றுவிட்ட மாமான்னா.. உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் வயதில் இருந்தாரா..?"

"இல்லை.. அவர் மனதில் அந்த எண்ணம் இருந்ததில்லை.. அவரை நான் முதன் முதலில் பார்த்தபோது என்வயது பதினொன்று.. ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.. அப்போது மாமாவுக்கு கல்யாணம் ஆகியிருக்கவில்லை.. தொழில் ஆரம்பித்து.. நான்கு வருடங்கள் கழிந்து.. அதில் அவர் வெற்றியும்

பெற்ற பின்னால்.. அவர் கல்யாணம் செய்து கொண்டார்.. இப்போது அவருக்கு.. ஐந்து வயதில் மகளும்.. மூன்று வயதில் மகனும் இருக்கிறார்கள்.."

அந்தமட்டிலும் நன்றிக்கடன் என்று ஹரிதாவைக் குறிவைக்கவில்லையே என்றிருந்தது குமரனுக்கு..

"உங்க மாமாவின் மனைவி எப்படிப்பட்டவங்க..?"

"அவங்களிடம் அதிகமாக பேசிப் பழகிய தில்லை.. அளவாய்ப் பேசுவாங்க.. ஆனால் மாமா எங்க குடும்பத்திற்கு உதவி செய்வதைத் தடுக்க மாட்டாங்க.. மாமாவின் சொந்தம் என்கிற மரியாதையை எங்களுக்கு கொடுப்பாங்க.."

ஹரிதாவின் வார்த்தைகளில் ஆழமான பாசம் கலந்த நன்றியுணர்வு தொனித்ததை குமரன் கவனித்தான்..

அவனால் அவளைப் புரிந்து கொள்ள முடிந்தது.. தந்தையைத் தவிர வேறு சொந்தமில்லாதவள்.. துன்பத்திலே தோள் கொடுத்து கரை சேர்த்து.. கூடவே சொந்தத்தையும் கொடுத்து விட்ட தாய்மாமனின் உறவில் நெகிழ்ச்சியடையாமல் வேறு என்ன செய்வாள்..?

24

"கிடைத்த வாய்ப்பைப் பற்றிக் கொண்ட அப்பா கடுமையாக உழைத்தார்.. மாமாவின் தொழில் முன்னேற அப்பாவின் உழைப்பும் ஒருவகையில் காரணம்.. முழு

நம்பிக்கையையும்.. விசுவாசத்தையும் என் மாமாவின் மேல் வைத்தார் அப்பா.."

"உங்க மாமா அதைப் புரிந்து கொண்டாரா..?"

"ஆமாம்.. என் அப்பாவிடம் முக்கிய பொறுப்புக்களை ஒப்படைக்க ஆரம்பித்தார் மாமா.. நான் காலேஜில் காலடி வைத்தேன்.. வறுமையில்லாத வாழ்வு.. கேட்டதைச் செய்யும் அப்பா.. நான் படிப்பில் மூழ்கிப் போனேன்.. டிகிரி முடித்தவுடன்.. மேலே எம்.எஸ்ஸியையும் படிக்கச் சென்னார் அப்பா.."

"உங்களை முன்னேற வைக்கணும்னு நினைத் திருப்பார்.."

"ஆமாம்.. அப்பாவும் அதைத்தான் சொல்வார்.. வள்ளுவரின் குறளை ஒப்பிப்பார்.."

"என்ன குறள் அது..?"

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி யிருப்பச் செயல்.."

"வாவ்.."

"அப்பாவும் அதைத்தான் செய்தார்.. என்னை முந்தியிருக்கச் செய்தார்.. நான் எம்.எஸ்ஸி முதல் வருடம் படித்துக் கொண்டிருந்த போதுதான் எனக்கு இரண்டாவது இடி வந்து இறங்கியது.."

"என்னாச்சும்மா..?"

ஹரிதாவின் வாழ்க்கைக் கதையில் தன்னையும் அறியாமல் பிணைபட்டிருந்த குமரன் வினவினான்..

"அப்பாவுக்கு கேன்சர் வந்துவிட்டது.."

ஹரிதாவின் கண்களில் நீர் சுரந்தது.. குமரன் திகைத்து விட்டான்..

"என் கண் முன்னாலேயே அப்பா துடியாய் துடித்தார் குமரன்.. இப்போதும் மாமாதான் உதவிக்கு ஓடி வந்தார்.. அப்பாவை பெரிய ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணினார்..

அப்பாவுக்கு வலி தெரியாமல் இருக்க.. பணத்தை.. பணமென்று பார்க்காமல் தண்ணீராய் இறைத்தார்.."

கேட்டுக் கொண்டிருந்த குமரனுக்கே தாங்க முடியவில்லை எனும்போது.. அதை நேரில் கண்ட ஹரிதாவிற்கு எப்படியிருந்திருக்கும் என்று குமரனால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"அப்பாவைக் காப்பாற்ற மாமாவின் தயவு எனக்கு தேவைப்பட்டது குமரன்... அவரின் சொத்தோ... சொந்தமோ.. எனக்கு தேவையாக இருக்கவில்லை.. யாருமில்லாதவர்களைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்வார்கள்.. அடித்தால் ஏன்னு கேட்க யாருமில்லாத அநாதை.. என்று.. அந்த வார்த்தையை என்னைக் கேட்கவிடாமல் கைகொடுத்து காப்பாற்றினார் மாமா.."

"ரியலி ஹி இஸ் ஸோ கிரேட் ஹரிதா.."

"எல்லோரும் நல்லவர்கள்தான்.. சந்தர்ப்ப சூழ்நிலைதான் அவர்களை வில்லன்களாக ஆக்கி விடுகிறது.. என் மாமாவும் அப்படித்தான்.."

"அவர் வில்லன் ஆகிவிட்டாரா..?"

"இதற்கு பதிலைச் சொல்லத் தெரியவில்லை.. ஆனால்.. அவரிடம் நான் பட்ட நன்றிக்கடன் அதிகமாகிக் கொண்டே இருந்தது.."

"புரிகிறது ஹரிதா.."

"முதன் முதலில் அவர் எங்களைக் காப்பாற்றிய போதும் நாங்கள் வாழ்வா.. சாவா... என்ற நிலையில் தான் இருந்தோம்.. இரண்டாம் முறை அவர் எங்களைக் காப்பாற்றிய போதும்.. அதே நிலையில் தான் இருந்தோம்.. இரண்டு முறை கை கொடுத்த போதும் அவர் முகம் சுணங்கவில்லை.. அதைவிட முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும் குமரன்.."

"என்னதும்மா..?"

"முதல் முறையாக அவர் எங்களுக்கு உதவி செய்த போது அவர் தனிமனிதர்.. இரண்டாம் முறை உதவிசெய்த போது அவர் குடும்பஸ்தர்.. ஆனால்.. அவரின் மனைவி.. அவர் உதவி செய்வதை தடுக்கவில்லை.. ஆட்சே பிக்கவுமில்லை.."

"பரவாயில்லையே.."

"அப்போதுதான்.. மாமாவின் தொழிலில் பெரிய சரிவு வந்தது.. தொழில் போட்டிதான் காரணமென்று மாமா சொன்னார்.."

வரவேண்டிய இடத்திற்கு ஹரிதா வந்து விட்டதை உணர்ந்து கொண்டான் குமரன்..

"ஹைதராபாத்தில் மாமா நடத்தி வந்த கெமிகல் கம்பெனிக்கு போட்டியாக கிருஷ்ணாவின் கம்பெனி முளைத்து.. வேர்விட்டது.. ஆரம்பித்த முதல் வருடத் திலேயே கிருஷ்ணா முன்னேற.. மாமா கீழே இறங்க ஆரம்பித்தார்.."

"ம்ம்ம்.."

"அப்போதுதான் ஒருநாள்.. மாமாவின் வீட்டில் பார்ட்டி ஒன்று நடந்தது... அந்தப் பார்ட்டிக்கு கிருஷ்ணாவும் வந்திருந்தார்.."

"நீங்க அந்த பார்ட்டியில் இருந்தீங்களா... இல்லையா..?"

ஒன்றும்.. ஒன்றும் இரண்டு என்ற கணக்கில் குமரன் வினவினான்..

"இல்லை.. நான் பார்ட்டிகளில் கலந்து கொண்ட தில்லை.. ஏன்.. என் மாமாவின் வீட்டிற்கே அதிகமாகப் போனதில்லை.."

"அப்புறம் எப்படி.. கிருஷ்ணாவும் அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்தான்னு சொன்னீங்க..?"

"அப்பாவுக்கு உடம்புக்கு ரொம்பவும் மோசமாகி விட்டது.. லேஸர் டீரீட்மெண்ட் ஆரம்பிக்கணும்னு ஹாஸ்பிடலில் சொன்னாங்க.. அதற்காகவும்.. ஹாஸ்பிடல் செலவுக்கு

பணம் வாங்குவதற்காகவும் மாமாவைத் தேடி.. அவர் வீட்டுக்குப் போனேன்.. ஆக்சுவலாய் அங்கே பார்ட்டி நடந்து கொண்டிருந்தது எனக்குத் தெரியாது.."

"ஓ.."

ஹரிதாவின் கண்கள்.. கடந்த காலத்தில் நிலை கொண்டன.. அவளது வாய் அவளுக்கும் கிருஷ்ணா விற்குமான முதல் சந்திப்பை சொல்ல ஆரம்பிக்க..

மனம்.. அதைவிட்டு வெளியே வராமல் அங்கேயே சிக்குண்டது..

ஹரிதா அவளுடைய மாமா வேதாந்தத்தின் வீட்டுக் காம்பவுண்டை நெருங்கிய போதுதான்.. தோட்டத்துச் செடிகளில் மின்னிய பட்டு ரோஸ் கலர் சீரியல் விளக்குகளைப் பார்த்தாள்.. ஒவ்வொரு செடியிலும்.. மலர்களைப் போல கண் சிமிட்டிய சீரியல் பல்புகள் அந்த இரவு நேரத்தில் நட்சத்திர குவியல்களாய் ஜொலிக்க.. வேதாந்தத்தின் வீட்டின் முன்னால் கார்களில் அணிவகுப்பு நின்றிருந்தது..

தோட்டத்தில் ஆள்களின் பேச்சுச் சத்தமும்.. சிரிப்புச் சத்தமும் கேட்டது.. ஹரிதா காம்பவுண்டை நெருங்காமல் தயங்கி நின்றாள்..

'உள்ளே போவதா.. வேண்டாமா..' அவள் மனம் போராடியது..

மருத்துவ மனையில் அவளது வரவிற்காக காத்திருக்கும் தந்தையின் நிலைமை அவளை உள்ளே போகச் சொன்னது..

தோட்டத்திலிருந்த விருந்தினர்களின் கும்பல்.. அவளை 'வராதே' யென்று தடுத்தது..

அந்த மனப்போராட்டத்தில் பின்னால் கேட்ட காரின் ஹாரன் சத்தத்தை அவள் கவனிக்காமல் விட்டுவிட்டாள்..

நடு ரோட்டில் நின்று கொண்டு.. அவள் கையை பிசைந்து கொண்டிருக்கையில்.. கார் கதவைத் திறந்து கொண்டு

கோபத்துடன் இறங்கினான் கிருஷ்ணா.. அழுத்தமான காலடியோசையுடன் அவளை நெருங்கினான்..

"ஹலோ.. நீ.. மறிக்க என் கார் தான் கிடைத்ததா..?" என்று கோபமாகக் கேட்டவன்.. பதட்டத்துடன் திரும்பியவளின் பேரழகைக் கண்டு பிரமித்து விட்டான்..

முன்பின் தெரியாதவனின் காரை மறித்துக் கொண்டு நிற்கும் உணர்வில் ஹரிதா முகம் சிவந்து போனாள்..

"ஐ ஆம் ஸாரி.. வெரி ஸாரி.. நான் ஏதோ யோசனையில்.. இப்படி.. ப்ளீஸ்.. டோன்ட் மைன்ட் இட்.."

அவள் தடுமாற்றத்துடன் பேசுவதைக் கேட்டவனுக்கு மனம் தாளவில்லை..

அவள் இந்த அளவுக்கு பதறிப் பதில் சொல்ல.. அவன் கேட்டுக் கொண்டு நிற்பதா..?

"இட்ஸ் ஆல்ரைட்.. இதில் உங்க மிஸ்டேக் எதுவுமில்லை.. பதட்டப்படாதீங்க.." என்று அவன் அவளை சமாதானப்படுத்த ஆரம்பித்து விட்டான்..

## 25

அது முன்னிரவு நேரம்.. அப்போதுதான் மாலை மறைந்து இருள் சூழ ஆரம்பித்த நேரம்.. பகலின் வெம்மை.. மாலையில் காணாமல் போய்.. மாலையின் குளுமை தொடர்ந்த இனிமையான இரவு நேரம்..

அந்த நேரத்தில் தெருவின் நியான் விளக்கின் மஞ்சள் வெளிச்சத்தில் ஹரிதா அன்றுதான் பூத்த புதுமலர் போல கிருஷ்ணாவின் கண்களுக்குத் தெரிந்தாள்..

அவனும் எத்தனையோ நாடுகளை சுற்றி வந்திருக்கிறான்.. எத்தனையோ பெண்களை சந்தித் திருக்கிறான்.. ஹரிதாவைக் கண்டதும் அவனுக்குள் உருவான காதல்

உணர்வு.. வேறு எந்தப் பெண்ணிடமும் அவனுக்கு ஏற்பட்டதில்லை..

தந்தையின் உடல்நிலை குறித்த கவலை.. தந்தைக்குப் பின்னால் தான் யாருமில்லாத அநாதையாகி விடுவோம் என்ற நிராதரவான நிலைமை.. தந்தையின் சிகிச்சைக்கு உறவினரிடம் கையேந்த வேண்டியிருக்கிறதே என்ற மனத்துடிப்பு.. இவையெல்லாம் சேர்ந்து.. வாடிய மலர் போல நின்ற அவளின் தோற்றம் அவன் மனதில் பதிந்துவிட்டது..

"நீங்க என்ன செய்வீங்க..? பாவம்.. பார்ட்டிக்கு வந்தவங்க.. வீட்டுக்குள் போக இங்கே நின்றிருப்பீங்க.. நான் ஓரமாய் காரை பார்க் பண்ணியிருந்திருக்கலாம்..

அதை விட்டுவிட்டு இறங்கி வந்து உங்களை அதட்டியது என் தவறுதான்.. உங்கள் மேல் குற்றம் இல்லை.."

கிருஷ்ணா அவளைத் தாங்கிப் பேச.. அவள்.. மறுப்பாகத் தலை அசைத்தாள்..

"இல்லையில்லை.. என் மேல்தான் தவறு.."

"இல்லைங்க.. என் மேல்தான் தவறு.."

"இல்லை.. என் மேல்தான் தவறு.."

"ஓகே.. இரண்டு பேரும் பிப்டி.. பிப்டி.. அக்ரிமெனட் போட்டுக்கலாம்.. உங்கள் மேல் பாதி தவறு.. என் மேல் பாதி தவறு.. ஓகேதானே..?" கிருஷ்ணா சமாதானத்திற்கு வந்தான்..

ஹரிதா பதிலுக்கு சிரிக்க முயன்றாள்.. அவளால் அது முடியவில்லை..

"பார்ட்டிக்கு வந்தீங்களா..?" அவன் மென்மையாக வினவ..

'இல்லை..'யென்று சொல்ல அவள் வாய் திறந்தாள்.. அப்போதுதான்.. வேதாந்தம் அங்கே விரைந்து வந்தான்..

"வெல்கம் மிஸ்டர் கிருஷ்ணா.. உங்கள் வரவால் என்னைக் கௌரவப்படுத்திவிட்டீர்கள்.." என்று கூறிய வாறு

கிருஷ்ணாவிடம் கைகுலுக்க தன் கையை நீட்டினானன்..

"உங்கள் பார்ட்டிக்கு நீங்க என்னை இன்வைட் பண்ணியிருக்கும்போது வராமல் எப்படி இருப்பேன் வேதாந்த்.." கிருஷ்ணா வேதாந்தம் நீட்டிய கையைப் பிடித்துக் குலுக்கினான்..

"ப்ளீஸ் கம் இன்.." கிருஷ்ணாவின் கைபிடித்து உள்ளே அழைத்துச் செல்ல வேதாந்தம் முயன்ற போது.. ஹரிதாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் கிருஷ்ணா தயங்கி நின்றான்..

"வாட் இஸ் தி பிராப்ளம்..?" என்று கிருஷ்ணாவிடம் கேட்டபடி திரும்பிய வேதாந்தம்.. அப்போது தான் ஹரிதாவைப் பார்த்தான்..

"என்னம்மா..?" கிருஷ்ணாவை மறந்தவனாக பரிவுடன் அவன் கேட்டபோது ஹரிதாவுக்கு கண் கலங்கி விட்டது..

அந்த சூழ்நிலையில் வந்த விவரத்தை சொல்ல முடியாமல் அவள் தயங்கி நின்றபோது.. வேதாந்தம் அவள் நிலையைப் புரிந்துகொண்டு விட்டான்..

"உள்ளே வாம்மா.." என்று அழைத்தான்..

வேறு வழியில்லாமல் அவர்களுடன் உள்ளே சென்றாள் ஹரிதா.. அந்தப் பார்ட்டியைத் தவிர்த்து வீட்டுக்குள் செல்லும் அளவிற்கு பழக்கம் இல்லாத தால்.. பார்ட்டியில் கலந்து கொண்டு வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த வேதாந்தத்திடம் தனியாகப் பேசும் வாய்ப்பை எதிர்நோக்கியபடி.. தோட்டத்தின் இருள் மூலையில் அமர்ந்துவிட்டாள் ஹரிதா..

"ஹாய்.." என்றபடி அவளுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டான் கிருஷ்ணா..

"ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறீங்க..?" என்று அவன் கேட்டதும்..

'என் விதி..' என்று சொல்லப்போன ஹரிதா.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சோகையாய்ச் சிரித்தாள்..

"என் கேள்விக்கு இந்தச் சிரிப்புத்தான் பதிலா..?"

"தனியாகத்தானே பிறந்து வந்தோம்..? தனியாகத் தானே போகப் போகிறோம்... இதில்.. தனியென்ற வார்த்தையை ஆச்சரியம் போலக் கேட்கறீங்களே சார்.."

"இந்த வயதில் பிலாஸபியா..?"

"பிலாஸபி பேச வயது வரம்பு கிடையாது சார்.."

"ஈஸிட்..? இது வாழ வேண்டிய வயது.."

"அப்படி நிர்ணயித்தது யார்..?"

ஹரிதாவின் கேள்வியில் அவனது நெற்றியில் ரேகைகள் படிய.. அவளையே கூர்ந்து பார்த்தான் கிருஷ்ணா..

அவள் அனைத்து வகைகளிலும் அவனை ஆச்சரியப்படுத்திக் கொண்டிருந்தாள்..

"இந்த நைட் டயத்தில் யாராவது பாடினால்.. இந்த பார்ட்டி இன்னும் நன்றாக இருக்கும்.." யாரோ ஒருவர்.. பக்கத்திலிருந்தவரிடம் கூற.. வேதாந்தம் அவர்களுக் கருகில் வந்தான்..

"நீ நன்றாகப் பாடுவாயே.. ஒரு பாட்டுப் பாடும்மா.." என்று ஹரிதாவிடம் கேட்டான்..

பாட்டுப் பாடும் சூழ்நிலையிலா அவள் இருந்தாள்..? தாயின் மடி கிடைக்காதவள்.. தந்தையின் நிழலும் நிலைக்காதோ என்ற பரிதவிப்பில் இருந்தாள்..

யாருமில்லாத அநாதையாக.. பூமியில் தனித்து நின்றுவிடுவோமோ என்ற கலக்கத்தில் இருந்தாள்..

அவளிடம் போய் பாட்டுப் பாடச் சொன்னால்.. அவளால் என்ன பாட முடியும்..?

அவள் மறுக்க வாய் திறந்தபோது வேதாந்தம்.. மைக்கை அவள் கையில் கொடுத்துவிட்டான்..

அலை மோதும் உணர்வுகளோடு அவள் பாட ஆரம்பித்தாள்..

"நல்லதோர் வீணை செய்தே - அதை

நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ..?

சொல்லடி சிவசக்தி - எனை

சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்..

வல்லமை தாராயோ - இந்த

மாநிலம் பயனுற வாழ்வதற்கே..

சொல்லடி சிவசக்தி - நிலச்

சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ..?"

மகாகவி பாரதியின் பாடலை உருக்கமான குரலில் அவள் பாடிக் கொண்டிருக்க.. காற்றுக் கூட சத்தமில்லாமல் பரவி நின்றது..

"விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்

வேண்டியபடி செல்லும் வழி கேட்டேன்..

நசையறு மனம் கேட்டேன் - நித்தம்

நவமெனச் சுடர்விடும் ஒளிகேட்டேன்

தசையினைத் தீச்சுடினும் - சிவசக்தியைப்

பாடும் நல்வரம் கேட்டேன்..

அசைவறு மதிகேட்டேன் - இவை

அருள்வதில் உனக்கெதும் தடையுள்ளதோ..?

இவை அருள்வதில் உனக்கெதும்

தடையுள்ளதோ..?"

ஹரிதாவின் குரல் உணர்ச்சியில் பிழம்பாகி ஓங்கி ஒலித்து.. இறுதியில் சிறு விசும்பலுடன் முடிந்தபோது அங்கே கனத்த அமைதி நிலவியது..

"பெண்டாஸ்டிக்.." கிருஷ்ணா மனப்பூர்வமாகக் கூறினான்.. எல்லோரும் அவளுக்கு அருகில் வந்து பாராட்டிய போது..

கிருஷ்ணாவின் முகம் விகசித்ததை வேதாந்தம் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

மிகப் பெரிய வி.ஐ.பி.யான கிருஷ்ணா.. அந்தப் பார்ட்டி முடிந்த பின்னாலும் போகாமல் தயங்கி நின்று.. ஹரிதாவிடம் விடைபெற்றுக் கொண்டதும் அவனது கவனத்தில் பதிந்தது..

## 26

விருந்தினர்கள் போன பின்னால்.. வேதாந்தம் ஹரிதாவின் அருகில் வந்தான்..

"சொல்லு ஹரிதா.. என்ன விசயம்..?"

"மாமா.. அப்பாவுக்கு.." ஹரிதா சொல்ல முடியாமல் அழுதாள்..

"வா.. போகலாம்.." வேதாந்தம்.. அவளுடன் உடனே கிளம்பிவிட்டான்..

சம்பந்தத்தின் சிகிச்சைக்கான பணத்தைக் கட்டி.. அவருக்கு சிகிச்சையை ஆரம்பிக்க வைத்து விட்டு அவன் கிளம்பிய போது ஹரிதா.. கண்களில் நீர்மல்கக் கைகூப்பினாள்..

"இதுக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்னு தெரியலை மாமா.."

அதைக் கேட்ட வேதாந்தம்.. அவளையே கூர்மையாகப் பார்த்தான்..

"இது என் கடமைன்னு நான் நினைக்கிறேன் ஹரிதா.. இதைப் போல எனக்கொரு கஷ்டம் வந்தால் நீ உதவிக்கு ஓடிவர மாட்டாயா என்ன..?"

"உங்களுக்கு உதவுகிற அளவுக்கு நான் பெரிய ஆளில்லை மாமா.."

"உன்னால் முடிந்த உதவியைக் கேட்டால்.. எனக்காக நீ அதைச் செய்ய மாட்டாயா..?"

"கட்டாயம் செய்வேன்.."

ஹரிதா மனமாற இதைச் சொன்னாள்.. தன் தந்தையைக் காப்பாற்றிக் கொண்டிருப்பவனுக்கு தன்னால் முடிந்த உதவியைச் செய்யத் துடித்தாள்.. அவளையும் அறியாமல் அவள் வேதாந்தத்திற்கு வாக்குக் கொடுத்து விட்டாள்..

வேதாந்தம் அந்த உதவியைக் கேட்டபோது திகைத்து நின்றுவிட்டாள் ஹரிதா..

அவள் எதிர்பார்த்திராத உதவியைச் செய்யச் சொல்லி வேதாந்தம் அவளிடம் கோரிக்கை வைத்தான்..

"உனக்கே தெரியும் ஹரிதா.. என் தொழில் ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது.."

"எனக்கும் அந்தக் கவலையுண்டு மாமா.."

"நீ நினைத்தால் என் கவலை தீரும்.."

"நானா..? எனக்கென்ன தெரியும் மாமா..?"

"உனக்குத் தெரியாது.. ஆனால்.. உன்னை கிருஷ்ணாவிற்குத் தெரியும்.."

"யாரந்த கிருஷ்ணா..?"

இப்படிக் கேட்டவளை வினோதமாகப் பார்த்தான் வேதாந்தம்.. அந்தப் பார்ட்டி முடியும் வரை கிருஷ்ணா ஹரிதாவையே சுற்றி சுற்றி வந்ததை அவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.. அவனுடைய தொழில் வட்டாரத்தில் கிருஷ்ணாவின் கவர்ச்சியான தோற்றமும்.. பணமும் பிரசித்தி பெற்று இருந்தது..

அப்படிப்பட்டவன் தன்னைச் சுற்றி வந்ததை அறியாதவளாக அவனுடைய ஒன்றுவிட்ட அக்காவின் மகள் வினவியதைக் கேட்கும் போது அவனுக்குப் பெருமையாக இருந்தது..

'இவளிடம் போய்.. இந்த வேலையை ஒப்படைக்க வேண்டியிருக்கிறதே..' அவனுக்கு மனக் கஷ்டமாகத்தான் இருந்தது..

ஆனாலும் அவனுக்கும் வேறு வழியிருக்க வில்லை.. மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவளிடம் அந்த உதவியைக் கேட்டான்..

"உன்னுடன் வாசலில் பேசிக் கொண்டு நின்றானே.. அவன்தான் கிருஷ்ணா.."

"அப்படியா.."

அதற்கு மேல் ஹரிதா கிருஷ்ணாவைப் பற்றிய பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை..

"அவனிடம் நீ வேலைக்குச் சேர வேண்டும்.."

அப்போதுதான் படிப்பை முடித்திருந்த ஹரிதா ஆனந்தப்பட்டுப் போனாள்..

அவள் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டால் வேதாந்தத்திடம் உதவி கேட்க வேண்டிய நிலைமை மாறிவிடுமே..

"எனக்கு வேலை கிடைக்குமா மாமா.." அவள் பரபரத்தாள்..

"கட்டாயம் கிடைக்கும்.."

"நீங்க சிபாரிசு செய்வீங்களா..?"

"என் சிபாரிசே தேவையில்லை.. நீ போ.. உன்னைப் பார்த்தவுடன் கிருஷ்ணா நிச்சயம் வேலை போட்டுக் கொடுப்பான்.."

"ஆனால் மாமா.. என் சர்டிபிகேட் கிடைக்க நாளாகுமே.."

"அந்தக் கவலை உனக்கெதற்கு.. உனக்கான சர்டிபிகேட்கள் ரெடி.."

"எப்படி மாமா.."

"தயாரித்தோம்.."

"மாமா.." அவள் விழியகல அவனை நோக்கினாள்..

"யெஸ்.. அவை போலி சர்டிபிகேட்கள்தான்.. பூஜா என்ற பெயரில் இருக்கும் சர்டிபிகேட்கள்.."

"அது பொய்யில்லையா..?"

"உன்னைப் பூஜான்னுதானே உன் அப்பா கூப்பிடுவார்..?"

"ஆமாம்.."

"அப்புறம் எப்படி அது பொய்யாகும்..?"

"ஆனாலும்.. மாமா.."

"நீ படித்திருப்பது உண்மைதானே.."

"ரிசல்ட் இன்னும் வரவில்லையே.."

"நீ பாஸ் பண்ணுவது உறுதி.."

"அதற்காக.. இப்படிச் செய்யலாமா..?"

"செய்யலாம்.. அப்படிச் செய்வதுதான் உனக்குப் பாதுகாப்பு.. உன் முகவரியை அவன் அறியாமல் வைத்துக் கொண்டால்தான் நாளைக்கு நீ அவனிடம் அகப்படாமல் தப்பிக்க முடியும்.."

"தப்பிப்பதா.. அப்படியென்றால்..?"

"நீ என் உளவாளியாக அவனுடைய கம்பெனியில் நுழையப் போகிறாய் ஹரிதா.."

"மாமா..."

"உனக்கு நான் சொல்லி.. என் கம்பெனியின் நிலைமை தெரிய வேண்டியதில்லை.. அதைத் தூக்கி நிறுத்தியாக வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.."

"அதற்கும்.. நான் உளவாளியாகப் போவதற்கும் என்ன சம்பந்தம்..?"

"அவன் தயாரிக்கும் பொருள்களைப் பற்றிய ஃபார்முலா எனக்கு வேண்டும்.."

"மாமா..."

"நீ அதை கண்டறிந்து என்னிடம் சொல்லி விட வேண்டும்.."

"மாமா.."

"இதுதான் நான் உன்னிடம் எதிர் பார்க்கும் உதவி.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ சொன்னாயே.. எப்படி நான் கைம்மாறு செய்யப் போகிறேன் என்று.. இப்படித்தான் நீ எனக்கு கைம்மாறு செய்ய வேண்டும்.."

எப்படி மறுப்பது..? இதைச் செய்யச் சொல்கிறவன்.. இக்கட்டான சூழ்நிலையில் கைகொடுத்து அவளுடைய குடும்பத்தைத் கரை சேர்த்தவன்.. நோயின் தாக்கத்தில் துடித்துக் கொண்டிருந்த அவளுடைய தந்தைக்கு.. அந்தத் துன்பத்தைக் குறைத்து அவரின் உயிரை இழுத்துப் பிடித்து வைத்திருப்பவன்.. அதற்காக தண்ணீரைப் போல பணத்தை முகம் சுளிக்காமல் செலவு செய்பவன்..

இதனால் என்ன ஆகும்..? ஹரிதா நம்பிக்கைத் துரோகி ஆவாள்.. திருட்டுத்தனமாய் வேவு பார்க்க வந்த உளவாளி என்று இந்த ஊர் சொல்லும்..

சொன்னால் சொல்லி விட்டுப் போகட்டும்.. வள்ளுவரே சொல்லியிருக்கிறார்..

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்- உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகர்க்கு..' என்று

செஞ்சோற்றுக் கடன் தீர்க்கச் சேராத இடத்தில் கர்ணன் சேரவில்லையா..? அதே செஞ்சோற்றுக் கடன் தீர்க்க ஹரிதாவும் தன் இயல்புக்கு மாறான வேலையைச் செய்தால்தான் என்ன..? நன்றிக் கடனை தட்டிக் கழிப்பதை விட இது ஒன்றும் பெரிய பாவச்செயல் அல்ல..

வேதாந்தம் சொன்ன வேலையைச் செய்ய ஹரிதா முடிவெடுத்து விட்டாள்..

## 27

ஹரிதாவின் துயரம் மிகுந்த வார்த்தைகளைக் கேட்டு கொண்டிருந்த குமரனின் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்து கொண்டது..

'பாவம்..' என்று அவன் நினைத்துக் கொண்டான்..

'இவளால் என்ன செய்திருக்க முடியும்..? இவளே சொல்வதைப் போல.. இவளின் நேர்மையைக் காப்பாற்றிக் கொள்ள நன்றிக் கடனைத் தட்டிக் கழித்திருக்க வேண்டுமா..? அது முடியுமா..?'

"எனக்கு வேறு வழி தெரியவில்லை குமரன்.. நான் மாமா சொன்ன வேலையைச் செய்ய ஒப்புக் கொண்டேன்.. அதனால் எனக்கு என்ன அவப்பெயர் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளும் உறுதியுடன்தான் நான் கிருஷ்ணாவின் கம்பெனியில் சேரப்போனேன்.. அங்கே எனக்கு காத்திருந்தது 'உளவு வேலை' என்று நினைத்துத்தான் அங்கே காலடி எடுத்து வைத்தேன்.. ஆனால்.. அங்கே எனக்காக கிருஷ்ணாவின் காதல் காத்துக் கொண்டிருந்தது.." ஹரிதா மீண்டும் கடந்த காலத்திற்குள் பிரவேசித்தாள்..

"யெஸ்.. கமின்.." கிருஷ்ணாவின் அனுமதிக் குரல் ஒலித்ததும் கதவைத் திறந்து கொண்டு அவன் அறைக்குள் சென்று நின்றாள் ஹரிதா..

வந்திருப்பது யார் என்று நிமர்ந்து பார்த்த கிருஷ்ணாவின் விழிகளில் மின்னல் வந்தது..

"ஹேய்.. யு..."

அவன் இருக்கையை விட்டு எழுந்தே விட்டான்..

"ஆர் யு பூஜா..?"

"யெஸ் சார்.."

"ஹைய்யோ.. யாரோ பூஜான்னு ஒரு பெண் உங்களைப் பார்க்க வந்திருக்காங்கன்னுதான் என் பி.ஏ சொன்னாங்க.. அது நீயாக இருக்கக் கூடும்ன்னு நான் நினைத்தே பார்க்கவில்லை.. சிட்டவுன்.. சிட்டவுன்.."

அவனது பரபரப்பைக் கண்டு ஒரு குற்ற உணர்வுடன் அமர்ந்து கொண்டாள் ஹரிதா..

கிருஷ்ணா இன்டர்காமில் அவளுக்கு குளிர் பானம் கொண்டு வரச் சொன்னான்..

"எதற்கு சார்..?" ஹரிதா சங்கடப்பட்டாள்..

"யூ ஆர் மை கெஸ்ட்.."

"நோ சார்.. நான் உங்களிடம் வேலை கேட்டு வந்திருப்பவள்.."

"ஈஸிட்..?"

அவள் அவனருகிலேயே இருப்பதற்காக வந்து இருக்கிறாள் என்று மகிழ்ந்து போனான் கிருஷ்ணா..

"யூ ஆர் அப்பாயின்டட்.. இன்றைக்கே.. இப்போதே.. இந்த செகண்டிலிருந்தே நீ என் கம்பெனியின் ஸ்டாப்.." என்று உத்திரவாதம் கொடுத்துவிட்டான் கிருஷ்ணா..

"நான் என்ன படித்திருக்கிறேன்னு நீங்க கேட்கவில்லையே.."

"எதைப் படித்திருந்தாலும்.. அதற்கான வேலை என் கம்பெனியில் உண்டு.."

"ஒருவேளை நான் மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்காத ஆளாக இருந்தால்..?"

"படிக்காத மேதைன்னு நினைத்து.. அதற்கும் ஒரு வேலையைப் போட்டுக் கொடுப்பேன்.."

'ஏன் இப்படிச் செய்கிறாய்..?' ஹரிதா பரிதவித்தாள்..

'அங்கே என் மாமா நன்றிக் கடனை கழிக்க என்னை உளவு பார்த்து விட்டு வான்னு சொல்லி அனுப்பி

வைத்திருக்கிறார்.. நீ என்னடாவென்றால்.. ஒரு தேவதையைப் பார்ப்பதைப் போல என்னைப் பார்த்து வைக்கிறாய்.. நீ நினைப்பதைப் போல நான் தேவதையில்லை.. ஏன்.. சாதாரணமான பெண்ணும் இல்லை.. நான் உளவாளி.. ஒற்று வேலை பார்க்க வந்தவள்.. என்னைக் கொண்டாடாதே..'

"நான் எம்.எஸ்ஸி கெமிஸ்டிரி படித்திருக்கிறேன்.."

"ஓகே.. இது கெமிகல் கம்பெனி.. சரியான இடத்துக்குத்தான் நீ வந்திருக்கிறாய்.."

அவன் இயல்பாக அவளை ஒருமையில் விளித்தான்.. அதை உணர்ந்தவளின் மனம் கனத்தது..

"இது என் சர்டிபிகேட்ஸ் சார்.."

அவன் முகம் பார்க்காமல் போலி சர்டிபிகேட்களை எடுத்து அவனிடம் நீட்டினாள் ஹரிதா..

அதைப் படித்துக் கூடப் பார்க்காமல் அக்கவுண்ட்ஸ் செக்ஷனிற்கு அனுப்பிவிட்ட அவனது செய்கையைக் கண்டு மனம் நொந்து போனாள் அவள்..

கிருஷ்ணா அவளிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்தான்.. அவளுக்கு பதவி உயர்வு கொடுத்து அவனருகிலேயே வைத்துக் கொண்டான்.. அவன் போகுமிடத்திற்கெல்லாம் அவளையும் அழைத்துச் சென்றான்..

அழகான ஒரு மாலைப்பொழுதில் அவன் தன் காதலை அவளிடம் சொல்லியபோது..

'ஏன் என்னைப் படைத்தாய் இறைவனே..' என்று ஹரிதா மனதிற்குள் கதறினாள்..

'இவன் நான் விரும்பும் ஆண் மகன்.. என்னைப் பெண்ணென்று உணரச் செய்தவன்.. நான் காதலிக்கும் முதலும்.. கடைசியுமான காதலன்.. என் மனதை

ஆக்ரமித்து என் இரவுத் தூக்கத்தை திருடிக் கொண்டவன்.. இவனின் கடைக்கண் பார்வை கிடைத்தால் கூடப் போதும்..

காலமெல்லாம் இவன் காலடியில் நான் விழுந்து கிடப்பேன்.. இவனோ தன் காதலையே கொடுக்கிறான்.. அதை ஏற்றுக்கொள்ளும் தகுதி எனக்கில்லையே..'

ஹரிதா அவனை விட்டு விலக ஆரம்பித்தாள்..

"பூஜா.. நீ என்னை அவாய்ட் பண்ணுகிறாய்.."

அவன் நேரடியாக குற்றம் சாட்டினான்..

'ஆமாம்..' என்று சொல்ல முடியாமல் ஹரிதா நிலம் பார்த்தாள்..

"என் முகத்தைப் பார்.."

'ஏன்.. என் பேச்சு மறந்துபோவதற்கா..? இல்லை மறைத்து பேசுவதற்கா..?'

"உன் கண்களில் நான் என் மீதான காதலைப் பார்த்திருக்கிறேன்.."

'அதில் பொய்யில்லை.. ஆனால்.. நான் பொய்யான வளாச்சே..'

"உன் மேல் காதல் கொண்டிருக்கிறேன்.."

'அது என் மீதான காதல் அல்ல.. 'பூஜா' என்கிறவள் மீது நீ கொண்ட காதல்.. நான் ஹரிதா..'

"ஐ லவ் யூ.."

ஹரிதா பதில் சொல்லாமல் மௌனித்தாள்.. பிடிவாதமாக விலகி நின்றாள்..

ஆனால் ஒருநாள் மாலையில்.. யமுனையின் கரையில் தாஜ்மஹாலின் முன்னால் அவளால் விலகி நிற்க முடியாமல் போனது..

அருவிக் கரையின் ஓரமாக பூத்திருந்த பூச்செடிகளில் இருந்து வந்து வாசனையை நுகர்ந்தபடி குமரன் ஹரிதாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்..

அந்தப் பூவாசனைக்கு நிகரானது அவளது காதலின் வாசனை என்றே அவனுக்குத் தோன்றியது.. "அது தாஜ்மஹால் குமரன்.. காதலுக்காக..தன் காதலிக்காக ஷாஜஹான் கட்டிய வெண் பளிங்கு மாளிகை.. காதலின் சின்னம்.. அதன் முன்னால் நின்று ஆணையிட்டுச் சொல் என்கிறார்.. எப்படி நான் பொய் சொல்வது..? என் மனதில் அவர் மீதான காதல் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கையில் காதலே இல்லையென்று எப்படிச் சாதிப்பது..?"

ஹரிதாவின் உதடுகள் துடித்ததைக் கண்ட குமரனுக்கு அவள்மீது பரிதாபம் ஏற்பட்டது..

"என்னால் பொய் சொல்ல முடியவில்லை குமரன்.. நான் என் காதலை ஒப்புக்கொண்டேன்.. அவரைச் சரணடைந்து விட்டேன்.."

அழகான வார்த்தைகளில் கிருஷ்ணாவின் மீதான அவளது காதலை ஹரிதா வெளிப்படுத்தி விட்டதாக குமரன் நினைத்துக் கொண்டான்..

'சரணடைதல்..' எவ்வளவு அழகான வார்த்தைப் பிரயோகம் அது.. பாரதி பாடியிருக்கிறாரே..

'நின்னைச் சரணடைந்தேன்..' என்று..

"அவர் மேலிருக்கும் காதலை ஒப்புக் கொள்ளாத வரை எனக்கு நான் எஜமானியாக இருந்தேன்.. எது செய்ய வேண்டும்.. எதைச் செய்யக்கூடாது என்பதை நானே தீர்மானித்தேன்.. ஆனால்.. எந்த நொடியில் அவரிடம் என் காதலைச் சொன்னேனோ.. அந்த நொடியிலிருந்து எனக்கு அவர் எஜமானராக ஆகிப் போனார்.. நான் அவரின் அடிமை ஆனேன்.."

ஹரிதாவின் வார்த்தைகளில் கர்வம் தென்பட்டது.. ஒரு ஆணிடம் அடிமையாவதில் பெண்மைக்கு ஏன் இத்தனை

கர்வம் ஏற்படுகிறது என்று புரியாமல் யோசித்தான் குமரன்..

"எனக்கு அவர் சுவாசமாய் ஆகிப்போனார்.. தினமும் விழிக்கும்போது அவரைப் பார்க்கப் போகும் நினைவில் விழிப்பேன்.. உறங்கும்போது அவரைக் கனவில் காணப் போகும் நினைவில் உறங்குவேன்.. என் கிருஷ்ணாவின் அருகாமையில் அப்பாவைப் பற்றிய கவலையைக் கூட மறந்து விட்டேன் குமரன்.."

"உங்க அப்பாவைப் பற்றி கிருஷ்ணாவிற்குத் தெரியுமா..?"

"தெரியாது.. என் குடும்பத்தைப் பற்றி எந்தக் கேள்விகளையும் கிருஷ்ணா கேட்கவில்லை.."

இதைக் கூறியபோது ஹரிதாவின் நெஞ்சை அடைத்தது.. பாரம்பரியம் கொண்ட பெரிய பணக்காரன்.. தன் உயரத்தை மறந்து அவளை.. அவளுக்காக நேசித்தான்.. அந்த நேசம் நிலைக்காத வரம் வாங்கிக் கொண்டு வந்திருந்த ஹரிதா தன் பிறவியை நினைத்து மனதிற்குள் குமுறினாள்..

"நிஜமாகவா சொல்கிறீங்க..?" குமரன் ஆச்சரியத்துடன் வினவினான்..

"நிஜமாகத்தான் சொல்கிறேன், குமரன்.. அவர் ஒருமுறை கூட என்னைப் பற்றி விசாரித்ததில்லை.."

"நீங்க சொல்லவில்லையா..?"

"சொல்ல நினைத்தேன்.. முடியவில்லை.. என் கிருஷ்ணாவின் காதல்தான்

எனக்கு இந்த உலகத்தில் வாழும் ஆசையைக் கொடுத்தது.. அதை இழந்து

விட்டால் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது என்று தோன்றியதால் சொல்லவில்லை.."

"தவறு செய்துவிட்டீங்க ஹரிதா.. நீங்க கிருஷ்ணாவிடம் நடந்ததைச் சொல்லியிருக்க வேண்டும்.. அவன் கட்டாயம்

உங்களை மன்னித்திருப்பான்.. அவனுக்கு உங்கள் மேல் அளவு கடந்த காதல் இருந்திருக்கிறது.."

"சொல்வது எளிது குமரன்.. செய்வது கஷ்டம்.."

"ஏன்..?"

"அப்பா போன பின்னால் நான் வாழக் கூடாதென்று நினைத்திருந்தேன்.. தனியே இந்த உலகத்தை சந்திக்க எனக்கு தெம்பு இல்லை குமரன்.. மீதி வாழ்க்கையை சொல்லிக் கொள்ள சொந்தம் எதுவுமில்லாமல்.. தாங்கி நிற்க.. தாய் தகப்பனின் மடி கிடைக்காமல் வாழ எனக்கு விருப்பமில்லை.. அப்பா இருக்கும் வரை வலியில்லாமல் இருக்க வேண்டும்.. அவர் போகும் போது நானும் கூடப் போய்விட வேண்டும்.. இது தான் என் முடிவாக இருந்தது.."

"ஹரிதா.."

"சாவதற்கு முன் மாமாவிடம் பட்ட நன்றிக் கடனை தீர்த்துவிட நினைத்தேன்.. சாகத் துணிந்தவளுக்கு சமுத்திரம் முழங்கால் அளவுதான்.. அவர் கேட்ட செயலைச் செய்வதால் ஏற்படும் பழி பாவம் என்னைச் சேர்ந்தால் சேரட்டும்.. அவர் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்துடன் தான் மாமா கேட்ட செயலைச் செய்ய ஒப்புக்கொண்டேன்.."

"உங்களுக்கு மட்டும் ஏன் ஹரிதா இவ்வளவு சோதனை வருகிறது..?"

"எனக்கும் அது தெரியவில்லையே.. கடவுளுக்கு என்மேல் என்ன கடுப்போ தெரியவில்லை.. விளையாடிப் பார்க்கிறார்.."

"கிருஷ்ணாவிற்கு உங்கள் மேல் கடுகளவு கூட சந்தேகம் வரவில்லையா...?"

"வரவில்லை.."

"அவனைக் காதலித்த பின்னால் உங்கள் மனம் மாறவில்லையா..?"

"மாறாமல் எப்படியிருக்கும்..?"

"கிருஷ்ணாவிற்கு துரோகம் செய்யக் கூடாதென்ற முடிவுக்கு வந்துவிட்டீங்களா..?"

"இல்லை.."

ஹரிதா தெளிவான குரலில் கூற.. குமரன் திகைத்தான்..

"என்ன சொல்கிறீங்க..? இப்பத்தானே மனம் மாறிவிட்டதாய் சொன்னீங்க..?"

"மனம் மாறியது.. வாழ்வைப் பற்றி.. என் துரோகத்தைப் பற்றியில்லை.."

"புரியவில்லை.."

"அப்பா போன பின் உயிரோடு இருக்கக் கூடாதுன்னு நினைத்திருந்ததை மாற்றிக் கொண்டேன்னு சொன்னேன்.. செய்யப் போன வேலையை பற்றிய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டேன்னு சொல்ல வில்லை.. நான் மாமா கேட்டதைச் செய்துவிட்டேன்.."

"ஹரிதா..?" குமரன் அதிர்ந்து விட்டான்..

எப்படி இவளால் இதை இவ்வளவு எளிதாகவும்.. நிதானமாகவும் சொல்ல முடிகிறது என்றிருந்தது அவனுக்கு..

கிருஷ்ணாவை உயிருக்குயிராய் காதலித்ததை இவள் ஒப்புக் கொள்கிறாள்.. அவனைப் பார்த்தவுடன் தான் இவளுக்கு வாழ வேண்டும் என்ற ஆசையும்.. வாழ்க்கையின் மீது ஒரு பிடிமானமும் ஏற்பட்டது என்பதையும் சொல்கிறாள்..

அப்படியிருக்கையில் அவனுக்கு துரோகத்தை இவள் செய்யலாமா..?

"ஏன் ஹரிதா..? ஏன்..?"

மனம் தாளாமல் குமரன் கேட்டான்.. அவனை நிமிர்ந்து நோக்கிய ஹரிதாவின் விழிகளில் செத்துக்

கொண்டிருக்கும் பறவையின் வேதனை தெரிந்தது..

குற்றுயிராய் அவள் தன் உயிரைப் பிடித்துக் கொண்டு வாழ்வது புரிய.. குமரன் வாயடைத்துப் போனான்..

29

"எனக்குத் தெரியும் குமரன்.. நான் அதைச் செய்வதால் என் கிருஷ்ணா என்மேல் வைத்த நம்பிக்கையை இழக்கப் போகிறேன்னு தெரியும்.. உண்மை தெரிந்தவுடன் காதலாய் பார்த்த அவரது கண்கள் வெறுப்பாய் பார்க்கும்ன்னு தெரியும்.. என்னை 'தேவதை'ன்னு கொண்டாடியவர்.. 'பிடாரி'ன்னு வெளியே துரத்தி விடுவார்ன்னு தெரியும்.. தெரிந்தே அதை நான் செய்தேன்.."

"உங்கள் வாழ்க்கையை நினைத்துப் பார்க்காமல் இப்படிச் செய்துவிட்டீங்களே ஹரிதா.."

"என் வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால்.. என் மாமாவிடம் நான் பட்ட நன்றிக் கடனை அடைக்க முடியாமலே போயிருக்குமே.. நான் கடனாளியாக உயிர்வாழ விரும்பவில்லை குமரன்.."

"இப்போது உங்கள் வாழ்க்கை கேள்விக்குறியாய் ஆகிவிட்டதே.."

"இல்லை.. என் வாழ்க்கை கேள்விக் குறியாய் ஆகவில்லை.. ஆகவும் நான் விடமாட்டேன்.."

"கிருஷ்ணா உங்களை வெறுக்கிறான் ஹரிதா.."

"வெறுக்கட்டுமே.."

"அவன் வாழ்க்கையில் இனி உங்களுக்கு இடமிருக்காது.."

"அவர் வாழும் இந்த வீட்டில் ஒரு மூலையில் எனக்கு இடம் கிடைத்திருக்கிறது இல்லையா.. இதுவே எனக்குப் போதும்.."

"ஹரிதா இது வேறு.. அது வேறு.."

"எனக்கு இரண்டும் ஒன்றுதான்.."

"அவனின் மனைவியாக அந்த வீட்டில் இருக்காமல் ஒரு வேலை செய்யும் பெண்ணாகத் தான் நீங்க இப்போது இருக்கறீங்க.. ஹரிதா.."

"அதனால் எனக்கு ஒரு குறையும் இல்லை.. என்றைக்குமே நான் அவர் அடிமைதான்.. வேலைக் காரிதான்.."

"ஆனால் ஹரிதா.."

'இதுவும் கூட உனக்கு நிலைக்குமா..?' என்று கேட்க நினைத்து வாயைத் திறந்தவன்.. அதை எப்படிக் கேட்பது என்று புரியாமல் திகைக்க..

"இது எத்தனை நாளைக்கு.. என்று நினைக் கறீங்களா குமரன்..?" என்று ஹரிதா இலகுவாகக் கேட்டாள்..

'மனதிற்குள் புகுந்து எண்ணங்களைப் படிக்கும் வித்தையை இவள் எங்கு கற்றாள்..?' அவன் பிரமித்தான்..

"இது நிலைக்கும் குமரன்.." ஹரிதா உறுதியாகக் கூறினாள்..

"அதை எப்படி இவ்வளவு நிச்சயமாய் சொல்கிறீங்க ஹரிதா..?"

"நிச்சயம்தான்.. கிருஷ்ணாவின் அம்மா ஒரு நாளும் என்னை வீட்டை விட்டு அனுப்ப மாட்டாங்க என்ற நிச்சயம்.."

"கிருஷ்ணாவின் பேச்சை பெரியம்மா தட்ட மாட்டாங்க.."

"இந்த விசயத்தில் தட்டுவாங்க.."

அவளது நம்பிக்கையான பதில் குமரனுக்கு ஆச்சரியததைக் கொடுத்தது..

"என்ன ஆச்சு.. இப்படி ஆச்சரியமாய் பார்க்கறீங்க..?" ஹரிதா புருவம் உயர்த்தினாள்..

"நீங்கள் அதிகமாய் நம்பிக்கை வைக்கறீங்க.."

"இல்லை குமரன்.. உங்களுக்கு என்னைப் பற்றியும் முழுதாய் இன்னும் தெரியவில்லை.. கிருஷ்ணாவின் அம்மாவைப் பற்றியும் இன்னும் தெரியவில்லை.."

இந்தப் பெண்களின் மனம் கடல் போல ஆழமானது என்று கிருஷ்ணா ஏன் அடித்துச் சொல்கிறான் என்று அப்போதுதான் கொஞ்சமாக குமரனுக்குப் புரிந்தது..

"தெரியத்தான் இல்லை.. நீங்கதான் தெரியப் படுத்துங்களேன்.."

"மாமா கேட்டதைச் செய்து விட்டேன்.. கிருஷ்ணாவின் தயாரிப்புக்கு இணையாக மாமாவின் தயாரிப்பும் இருக்க.. மாமா சரிவிலிருந்து மீண்டார்.. அப்போதும் கிருஷ்ணா என் மேல் சந்தேகப்பட வில்லை.."

"நீங்களும் அதைச் சொல்லவில்லை.." குமரன் குத்தலாக வினவினான்..

"ஆமாம்.." ஹரிதா அமைதியாகப் பதில் சொன்னாள்..

"அருமையான காதலி.. கிருஷ்ணா கொடுத்து வைத்தவன்.." குமரன் குத்தலைத் தொடர்ந்தான்..

ஹரிதா அதை கண்டு கொள்ளவே இல்லை..

"அப்போதுதான் ஒரு பார்ட்டியில் என் மாமா கிருஷ்ணா அருகிலிருப்பதைக் கவனிக்காமல் என்னிடம் சந்தோசமாக பாராட்டி பேசி வைத்து விட்டார்.. கிருஷ்ணா அதைக் கேட்டுவிட்டார்.. மாமாவுக்கும்.. அவருக்கும் வாக்குவாதம் வர.. மாமா.. ஆமாம்.. நான்தான் இவளை அனுப்பி உன் ரகசியத்தை களவாடி என்னிடம் கொடுக்கச் சொன்னேன்.. இப்ப அதுக்கு என்னங்கிறன்னு சொல்லிட்டார்.."

"ம்ம்ம்..."

"கிருஷ்ணா அப்போதும் கூட அதை நம்பவில்லை.. என்னை விசாரிக்கவேயில்லை.. என் மாமா சொல்வது பொய்ன்னு சொன்னார்.."

"நீங்க அப்படியே விட்டிருக்க வேண்டியதுதானே..?"

"என்னால் எப்படி அது முடியும் குமரன்..?"

"ஏன் முடியாது.. உங்களை நம்பிய உங்கள் காதலனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய உங்களால் முடிந்திருக்கிறது.. நீங்கள் வேலை செய்த கம்பெனியின் ரகசியத்தை களவாட உங்களால் முடிந்திருக்கிறது.. இத்தனைக்கும் மேலாக.. உங்கள் உண்மைப்

பெயரை விட்டு வேறு பெயரில் நடமாட உங்களால் முடிந்திருக்கிறது.. இத்தனையும் உங்களால் முடியும்

போது இது மட்டும் ஏன் முடியாது..?" குமரன் கோபத்துடன் கேட்டான்..

அவனுடைய கோபத்திலிருந்த நியாயத்தை ஹரிதாவும் உணர்ந்துதான் இருந்தாள்.. எனினும்.. அவள் பக்க நியாயத்தை சொல்வது அவள் கடமை யல்லவா..?

"இல்லை குமரன்.. இது.. அப்படியில்லை.. என்னை நம்பிய என் காதலனுக்கு.. ஒரு காதலி என்ற முறையில் நான் நம்பிக்கைத் துரோகம் செய்ய வில்லை.. ஏனென்றால்.. நான் என் கிருஷ்ணாவைத் தவிர வேறு எந்த ஆணையும் மனதாலும் நினைத்த

தில்லை.. அந்தக் கம்பெனியின் ஃபார்முலாவை களவாடத்தான் நான் அங்கே போனேன்.. அப்போது நான் கிருஷ்ணாவைக் காதலிக்க வில்லை.. அவரைக் காதலிக்க ஆரம்பித்த பின்பு அதைக் களவாடாமல் இருந்திருந்தால் அது என் மாமாவுக்கு நான் செய்யும் நம்பிக்கைத் துரோகமில்லையா..?"

ஹரிதா விளக்கிய கோணத்திலிருந்து பார்க்கையில் அதுவும் நியாயமாகப்பட.. குமரன் என்ன பேசுவது என்று தெரியாமல் வாயடைத்துப் போனான்..

"நான் அந்தக் கம்பெனிக்கு வேலை செய்யப் போகவில்லையே.. அதன் ரகசியத்தை அறிந்து வரத்தானே போனேன்..? அதனால்.. நான் அந்தக் கம்பெனிக்கும் துரோகமிழைக்கவில்லை.." ஹரிதா அடுத்த நியாயத்தை அவன் முன் வைத்தாள்..

ஹரிதாவிடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில்கள் இருந்தன.. அவள் நியாயத்தின் மறுபக்கத்தை குமரனுக்கு உணர்த்தினாள்.. அதர்மம் செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டு.. அதைச் செய்ய மறப்பதும்.. மறுப்பதும்.. தர்மமாகாது என்று அவள் கூறியதைக் கேட்டபோது.. புரியாத பல பரிணாமங்கள் குமரனுக்கு புரிந்தது..

"என் சொந்தப் பெயரை நான் மறைக்க வில்லை.. 'பூஜா' என்பதும் என் பெயர்தான்.. என்னை என் வீட்டில் அப்படித்தான் கூப்பிடுவார்கள்.."

"உங்கள் சர்டிபிகேட்கள் போலியானவைதானே..?"

"அதை நான் தயாரிக்கவில்லையே.. அதோடு.. அதை உபயோகப்படுத்தி கிருஷ்ணாவின் கம்பெனியில் தொடர்ந்து வேலை செய்யவில்லையே.."

"நீங்கள் அறிவார்த்தமாகப் பேசித் தப்பிக்கப் பார்க்கிறீங்க.."

"தப்பித்து எங்கே போனேன்..?"

"இருந்தாலும் ஹரிதா.. நீங்க கிருஷ்ணாவிடம் உண்மையைச் சொல்லாமல் விட்டிருக்கலாம்.."

"காலம் பூராவும் நெஞ்சில் ஒரு நெருஞ்சி முள்ளோடு நான் வாழ்ந்திருக்கனும்னு சொல்கிறீங்களா..?"

"ஹரிதா.."

"இல்லை குமரன்.. நான் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்துவிட்டேன்.. அதன் பின்னால்.. என் கிருஷ்ணாவிடம் நான் பட்ட கடனையும் தீர்க்க வேண்டாமா..?"

"கடனா..?"

"கடன்தான்.. பிறந்தவுடனே தாயை இழந்து.. வளர்ந்த பின்னால் தந்தையையும் இழக்கப் போகும் பரிதவிப்பில்

இருந்தேனே.. என்னை மடிசாய்த்து இளைப்பாற நிழல் கொடுத்தாரே.. அந்தக் கடன் எனக்கும் அவருக்கும் இடையில் இருந்தது.."

"நீங்க ஏன் எல்லாவற்றையும் கடனாகவே பார்க்கறீங்க..?"

"பின்னே.. அவரது அன்பை அனுபவிக்க எனக்கு என்ன தகுதியிருக்கிறது..? அவருக்கு அநியாயம் செய்யப் போய் விட்டு அவர் காதலில் குளிர் காய்ந்தேனே.. ஒருநாள்.. ஒருபொழுதாவது என்னை அவருடைய மனைவியாக நினைத்தாரே.. அதற்கு பிரதியாக.. நான் அவரை ஏமாற்றுவதை நிறுத்த வேண்டாமா..? என் உண்மை முகத்தை அவருக்கு காட்ட வேண்டாமா..?"

'இவள் நியாய தேவதை..' என்று திகைத்துக் கொண்டான் குமரன்..

இவள் செய்தது சரியோ.. தவறோ.. அதற்கான தெளிவான நியாயங்கள் இவளிடம் இருக்கின்றன.. மனச்சாட்சியுடன் இவள் செயல்பட்டிருக்கிறாள்..

'இது நீரோடு செல்கின்ற ஓடம்..

இதில் நியாயங்கள் யார் சொல்லக்கூடும்..?

எந்த தர்மங்கள் எதனாலே மாறும்..?

எந்தக் குற்றங்கள் எதனாலே தீரும்..?'

ஹரிதா பாடிய பாடலின் அர்த்தங்கள் இப்போது தெளிவாகக் குமரனுக்குப் புரிந்தது..

'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே..

உனக்கு நீதான் நீதிபதி..

மனிதன் எதையோ பேசட்டுமே..

மனதைப் பார்த்துக்க நல்லபடி..'

கவியரசு கண்ணதாசனின் கூற்று அவனது நினைவில் ஆடியது..

இதோ இருக்கும் இந்த இளம் பெண்.. தன் மனதின் வழியில் பயணப்பட்டிருக்கிறாள்.. தவறு என்று தெரிந்தும.. அதைச் சரியான முறையில் செய்திருக்கிறாள்.. தவறு செய்ததை மறைக்காமல் தன் காதலனிடம் ஒப்புக் கொண்டிருக்கிறாள்..

'இவளின் நேர்மை யாருக்கு வரும்..?'

இமைக்காமல் ஹரிதாவின் முகத்தையே பார்த்தான் குமரன்..

"நான் கிருஷ்ணாவிடம் உண்மையைச் சொன்னவுடன் அவர் கோபப்பட்டார்.. என்னை வெறுத்துப் பேசினார்.. விலகிப் போய்விடச் சொன்னார்.."

"நீங்கள் விலகிப் போய்விட்டீங்களா..?"

"ம்ம்ம்..."

"ஏன்..?"

"அதுதானே நியாயம்..?"

"ஓ...? அப்புறம் எதற்காக.. இப்போது வந்தீங்க..?"

"அப்பா இறந்து விட்டார்.."

"ஹரிதா..?"

குமரன் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.. அவள் விழிகளில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள்..

"அப்பா போன பின்னால்.. அவருக்காக நான் மாமாவிடம் உதவி கேட்க வேண்டிய தேவை இல்லாமல் போய் விட்டது.. மாமா என்னை அவர் வீட்டோடு வந்து இருக்கும்படி கூப்பிட்டார்.. நான் மறுத்து விட்டேன்.."

"ஏன்..?"

"திரும்பவும் அவரிடம் நன்றிக் கடன் பட எனக்கு விருப்பமில்லை.. அத்தோடு.. அது கிருஷ்ணாவின் எதிரியின் வீடு.."

"அப்ப.. உங்க மாமாவை நீங்க எதிரியாக நினைக்கறீங்களா..?"

"தெரியாது.. ஆனால்.. அவர் உதவியால் உயிர் வாழ எனக்கு விருப்பமில்லை.."

"நீங்க படித்திருக்கீங்க.. ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொள்ளக் கூடாதா..?"

"வேலை.. வயிற்றுக்கு சாப்பாட்டையும்.. வாழ்க்கை நடத்த பணத்தையும் கொடுத்து விடும்.. நிம்மதியைக் கொடுக்குமா..?"

"அந்த நிம்மதியைத் தேடித்தான் இங்கே வந்தீங்களா..?"

"ஆமாம்.."

"இங்கே நீங்க தேடி வந்த நிம்மதி கிடைக்க வில்லையே ஹரிதா.."

"அப்படி யார் சொன்னது..?"

"கிருஷ்ணா உங்களைத் தேளாகக் கொட்டு கிறானே.."

"எனக்கு அது பூமழை பொழிவதைப் போல இன்பமாக இருக்கிறது.."

"உங்களை வெறுக்கிறானே.."

"விருப்பத்தின் இன்னொரு முகம் வெறுப்பு.."

"வீட்டை விட்டு விரட்ட நினைக்கிறானே.."

"அவர் மனதை விட்டு என்னை விரட்டிவிட்டாரா..?"

கண்ணீர் காய்ந்த கன்னங்களுடன் ஹரிதா.. சளசளத்து ஓடிக் கொண்டிருந்த அருவி நீரை வெறித்தாள்..

"ஹரிதா.." மெதுவான குரலில் குமரன் அழைத்தான்..

"சொல்லுங்க.."

"கிருஷ்ணாவின் அம்மாவிற்கு உங்களை எப்படித் தெரிய வந்தது..? வேலைக்கு வந்ததாகக் கதை சொல்லாதீங்க..

அது எப்படி.. உங்களை மட்டும் அவங்க செலக்ட் பண்ணினாங்க..? அவங்க என்னைக் கேட்காமல் எதையும் செய்ய மாட்டாங்க.. செகரட்டரி தேவைன்னு விளம்பரம் கொடுக்காமல் நீங்க எப்படி அப்ளை பண்ணியிருக்க முடியும்..? அம்மா அப்படியொரு விளம்பரத்தைக் கொடுக்கவே இல்லையே.."

"இல்லைதான் குமரன்.. கிருஷ்ணாவின் அம்மா விளம்பரம் கொடுக்கவில்லை.."

"பின்னே.. என்னதான் நடந்தது..?"

"நான் அவங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.."

"என்னது..?"

குமரன் ஆச்சரியத்துடன் வாய் பிளந்தான்.. அவனைக் கேட்காமல் எதையும் செய்யாத சகுந்தலா.. ஹரிதாவின் கடிதம் வந்த விவரத்தை குமரனிடம் மறைத்து விட்டாளே..

'ம்ஹூம்.. பெண்களின் மனது ஆழ் கடலேதான்..'

## 31

"அன்புள்ள அம்மா..

என் பெயர் ஹரிதா.. தாய்.. தந்தையில்லாதவள்.. இதைச் சொல்வது உங்களுடைய அனுதாபத்தைத் பெறுவதற்காக இல்லை.. உங்கள் வீட்டில் அடைக்கலம் பெறுவதற்காக..

கடைசிவரை.. உங்கள் வீட்டின் ஒரு மூலையில் நான் ஒன்றிக் கொள்ள சிறு இடம் கிடைக்குமா..?

அன்புடன்,

யாருமே இல்லாத

ஹரிதா"

சகுந்தலாவிற்கு எழுதிய கடிதத்தை விவரித்தாள் ஹரிதா..

"அப்புறம் என்ன நடந்தது..?" குமரன் ஆர்வமாக விசாரித்தான்..

"அவங்க எனக்குப் பதில் போட்டாங்க.."

"என்னன்னு..?"

"உன் கடிதம் கிடைத்தது.. உன் நிலையை அறிந்து பரிதாபம் உண்டாகிறது.. ஆனால்.. என் வீட்டில் ஏன் அடைக்கலம் கேட்கிறாய்..? என் முகவரி உனக்கு எப்படிக் கிடைத்தது..?

சகுந்தலா தேவி"

சுருக்கமாகக் கடிதம் எழுதியிருந்த சகுந்தலா தேவியின் புத்தி சாலித்தனத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்டான் குமரன்..

"அடுத்து என்ன நடந்தது..?"

"நான் பதில் எழுதினேன்.."

"அதையும் சொல்லுங்கம்மா.. சொன்னால் தானே எனக்கும் என்ன நடந்ததுன்னு தெரியும்..?"

"உங்களின் முகவரியை எனக்குத் தெரியாதா..? நீங்க கிருஷ்ணாவின் அம்மாவாயிற்றே..

அன்புடன்

அடைக்கலம் வேண்டும்

ஹரிதா"

"நீங்களும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க ஆரம்பித்துவிட்டீங்க போல.. அம்மா என்ன பதில் போட்டாங்க..?"

"கிருஷ்ணாவை உனக்குத் தெரியுமா..?"

"குட் கொஸ்டின்.. உங்க ஆன்ஸர் என்ன..?"

"தெரியும்.. நான் அவரின் கம்பெனியில் வேலை பார்த்தேன்.."

"ஓஹோ.. அம்மா என்ன பதில் சொன்னாங்க.."

"இப்போது வேலை பார்க்கவில்லையான்னு கேட்டிருந்தாங்க.."

"நீங்க என்ன சொன்னீங்க..?"

"விலக்கி விட்டார்.. விலகி விட்டேன்னு சொன்னேன்.."

"அம்மா என்ன கேட்டாங்க..?"

"விலகிய பின்பு ஏன்.. அவனின் அம்மாவிடம் அடைக்கலம் கேட்கிறாய்ன்னு கேட்டு எழுதியிருந்தாங்க.."

"ம்ம்ம்.. அப்புறம்..?"

"எனக்கு அம்மா இல்லை.. கிருஷ்ணாவின் அம்மாவை என் அம்மாவாக நான் நினைத்துக் கொண்டு.. மீதி வாழ்வை வாழ்ந்து முடிக்க ஆசைப்படுகிறேன்னு எழுதியிருந்தேன்.."

"அவங்க ஒப்புக் கொண்டு வரச் சொல் லிட்டாங்களா..?"

"அதுதான் இல்லை.. மீதி வாழ்வைத் தனியாக எப்படி உன்னால் வாழ முடியும்..? திருமணம் என்ற ஒன்று இருக்கிறதேன்னு கேட்டு எழுதியிருந்தாங்க.."

"அதுதானே பார்த்தேன்.. அவங்க யாரு..?"

"என் வாழ்வில் திருமணம் என்ற பேச்சிற்கே இனி இடமில்லை.. உங்கள் காலடியில் வாழ்ந்து முடித்தால் போதும்ன்னு எழுதியிருந்தேன்.. வரச்சொல்லி கடிதமும்.. பணமும் வந்தது.. கிளம்பி வந்து விட்டேன்.."

"இவ்வளவு போதும்.. உங்களுக்கும்.. கிருஷ்ணாவுக்கும் இடையில் எதுவோ இருக்குன்னு அம்மா யூகிக்க.."

"அது எனக்குத் தெரியாது.. நான் கிருஷ்ணா பிறந்த மண்ணில் வாழ ஆசைப்பட்டேன்.. அவருடைய வீட்டில் உறங்க ஆசைப்பட்டேன்.. அவரைப் பெற்ற தாய்க்கு சேவை செய்ய ஆசைப்பட்டேன்.. அவரை என்றைக்காவது ஒருநாள் பார்த்துவிடணும்னு ஆசைப்பட்டேன்.."

"ஆனால் வந்த அன்னைக்கே அவனைப் பார்த்து விட்டீங்க.."

"ஆமாம்.." ஹரிதாவின் விழிகள் ஒளிர்ந்தன..

"அதை நீங்க எதிர்பார்க்கலை இல்லையா..?"

"ஷ்யூர்.. அவரைப் பார்ப்பேன்.. அவர் கூடவே ஒரே வீட்டில் இருப்பேன்னு கொஞ்சம்கூட எதிர் பார்க்க வில்லை.."

"அவனும் இத்தனை நாள் சேர்ந்தாற்போல் இங்கே தங்கியதில்லை.. அவனுடைய தொழில் அப்படிப்பட்டது.. ஒரு இடத்தில் நிலைத்து நிற்க அவனால் முடியாது.. ஓடிக்கொண்டே இருப்பான்.."

"என் அதிர்ஷ்டம்.. அவரைப் பார்த்துவிட்டேன்.."

அவனது காதல் கிடைத்தும அதைக் கை நழுவ விட்டு விட்டு.. அவன் வீட்டில் வேலைக்காரியாய்.. அவளே சொன்னது போல.. அந்த வீட்டின் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டு.. அதிர்ஷ்டத்தைப் பற்றிப் பேசுகிற அந்த துரதிர்ஷ்டசாலியை இரக்கத்துடன் பார்த்தான் குமரன்..

அவனது பார்வையிலிருந்த இரக்கத்தை உணர்ந்த ஹரிதா..

"ஏன் அப்படிப் பார்க்கறீங்க..?" என்று கேட்டாள்..

"இப்படிப் பிழைக்கத் தெரியாத பச்சை மண்ணாக இருக்கறீங்களேம்மா.. கிடைத்த வாழ்வை தக்க வைத்துக் கொள்ள வேண்டாமா..?"

"தக்க வைத்துக்கொள்வதா..? எப்படி..?"

"உங்க மாமா சொன்ன வேலையை மறந்து விட்டு கிருஷ்ணாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக் கலாம்.."

"மாமாவிடம் நான் பட்ட நன்றிக் கடனையும்.. அப்பாவின் ட்ரீட்மென்டையும் மறந்துவீட்டீங்களா..?"

"கிருஷ்ணாவிடம் பணத்தை வாங்கி.. உங்க மாமா உங்களுக்காகச் செலவழித்த பணத்தை வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுத்திருக்கலாமே.. உங்க அப்பாவின் நோயைப் பற்றிக் கிருஷ்ணாவிடம் சொல்லியிருந்தால் அவன் வெளிநாட்டிற்கே உங்க அப்பாவைக் கொண்டு போய் வைத்தியம் பார்த்திருப்பானே.."

"என் காதலைக் காட்டி அவரிடம் பணத்தை வாங்கிக் கொண்டால் அதற்கு அர்த்தமே வேறு.."

"ஹரிதா.."

"ஒருநாளும் என்னால் அதைச் செய்திருக்க முடியாது..."

"அதை விடுங்க.. நீங்க மாட்டிக் கொண்ட பின்னாலாவது சுதாரிப்பாய் இருந்திருக்கலாமே.."

"அதுவும் எப்படி..?"

"கிருஷ்ணா தான் உங்களைச் சந்தேகிக்க வில்லையே.. உங்களை யார் முந்திரிக்கொட்டையைப் போல.. ராஜினாமா கடிதத்தை எடுத்து நீட்டச் சொன்னது..?"

"கிருஷ்ணா என்னைக் கேள்வி கேட்காமல் போனாலும் என் மனச்சாட்சி என்னைக் கேள்வி கேட்காதா..?"

'இது வேலைக்கு ஆகாது..' என்ற பெருமூச்சோடு அவளைப் பார்த்தான் குமரன்..

"உங்களிடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருக்கிறது.."

ஹரிதா லேசாகச் சிரித்துவிட்டு எழுந்து கொண்டாள்..

"என்ன..? எழுந்து விட்டீங்க.."

"இருட்டுகிற நேரம்.. வீட்டுக்குப் போக வேண்டும்.."

"உங்க வேலை முடிந்ததும் கழட்டிக் கொள்ளப் பார்க்கறீங்களே.."

"என் பக்க நியாயத்தை உங்களிடம் சொல்ல வந்தேன்.. சொல்லியும் விட்டேன்.. இனிக் கிளம்ப வேண்டியது

தானே.."

"இருங்க நானும் வருகிறேன்.."

"நான் போய்க் கொள்வேன்.."

"நீங்கள்தானே இப்போது சொன்னீங்க..?"

"என்ன சொன்னேன்..?"

"அதற்குள் மறந்துவிட்டிங்களா..?"

"எத்தனையோ சொன்னேன்.. அதில் எதை நீங்க கேட்கறீங்கன்னு தெரியலையே.."

"இது இருட்டுகிற நேரம்ன்னு சொன்னீங்களா.. இல்லையா..?"

"ஆமாம்.. சொன்னேன்.."

"இருட்டும்போது தனியாக வயதுப் பெண் போகலாமா..?"

அவன் சொல்வதும் நியாயம்தான் என்று தோன்ற.. எதிர்பேச்சுப் பேசாமல் மௌனமாக கூட நடந்தாள் ஹரிதா...

வீடு வரை துணைக்கு வந்த குமரன் உள்ளே வராமல் கையசைத்து விட்டு போய்விட.. பதிலுக்கு கையசைத்து விட்டு திரும்பியவள் திகைத்து

நின்றாள்..

எதிரே அனல் பறக்கும் பார்வையோடு கிருஷ்ணா நின்றிருந்தான்..

"எங்கே போய்விட்டு வருகிற..?" அவன் முறைப்புடன் கேட்டான்..

"அருவிக் கரைக்கு.." ஹரிதா மென்று விழுங்கினாள்..

"குமரனைச் சந்திக்கப் போனாயா..?"

அவள் மறுப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் அவன் கேட்க.. அவளோ..

"ஆமாம்.." என்றாள்.

"என்ன சொன்னாய்..?" அவன் கண்கள் சிவந்தன..

"உண்மையைத்தான் சொன்னேன்.."

"அப்போ.. அவனைப் பார்க்கத்தான் நீ போனாய்..?"

"ம்ம்ம்.."

"இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா..?"

கிருஷ்ணா கனலைக் கக்கினான்.. ஹரிதா நிமிர்ந்து அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள்..

"இல்லை.. இதைச் சொல்ல நான் ஏன் வெட்கப் படணும்..? அவர் எனக்குக் கூடப் பிறந்தவரைப் போல.."

"என்ன.. என்ன.. சொன்னாய்..?"

"அவரை என் அண்ணனைப் போல நான் நினைக்கிறேன்னு சொன்னேன்.."

கிருஷ்ணாவின் முகத்திலிருந்த கோபம் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்துவிட.. அவன் வழிவிட்டு விலகி நின்றான்..

அவனது விழிகளில் தெரிந்த அமைதியைக் கண்ட ஹரிதா மனநிம்மதியுடன் வீட்டுக்குள் போனாள்..

"எங்கே போயிருந்தாய் ஹரிதா..?" சகுந்தலா ஆதரவுடன் கேட்டாள்..

"அருவிக் கரைக்கு போயிருந்தேன் மேடம்.." ஹரிதா இரவுச் சமையலைக் கவனிக்க விரைந்தபடி பதில் சொன்னாள்..

அன்றைய இரவு உணவின்போது கிருஷ்ணாவின் பார்வை ஹரிதாவின் மீது படிந்தது.. படிந்து விலகியது.. அவள் பரிமாறியதை மறுக்காமல் அவன் சாப்பிட்டான்.. அவனது பார்வையைக் கண்டும் காணாத வளைப்போலக் கவனித்துக் கொண்டிருந்தாள் சகுந்தலா..

அவள் மனதில் அப்போதுதான்.. அந்த எண்ணம் தோன்றியது.. தூண்டிவிடாமல் விளக்கின் திரி சுடர்

விடாது.. சகுந்தலா.. மகனைத் தூண்டிவிட முடிவு செய்தாள்..

"உனக்கு இளங்கோவைத் தெரியும்தானே கிருஷ்ணா..?" என்று மகனைப் பார்த்துக் கேட்டாள்..

இளங்கோ அவர்களுடைய எஸ்டேட் மேனேஜரின் மகன்.. வக்கீலுக்குப் படித்துவிட்டு.. சென்னையில் இருக்கிறான்..

"அவனைத் தெரியாமல் இருக்குமா..? இப்போ எதுக்கும்மா திடீர்ன்னு இப்படியொரு கேள்வியைக் கேட்கறீங்க..?" வியப்புடன் கேட்டான் கிருஷ்ணா..

"அவனை நம் ஹரிதாவுக்குப் பார்த்தால் என்ன..?" சகுந்தலா அடிக்கண்ணால் அவர்கள் இருவரையும் நோட்டம் விட்டபடி வினவினாள்..

பரிமாறிக் கொண்டிருந்த ஹரிதாவின் கை அப்படியே நின்றுவிட்டது.. அவளுக்கு 'திக்'கென்று ஆகிவிட.. பதட்டத்துடன் சகுந்தலாவைப் பார்த்தாள்..

கிருஷ்ணாவின் முகமோ இருண்டுவிட்டது.. அவன் ஹரிதாவை முறைக்க ஆரம்பித்துவிட்டான்..

"இதற்கு என்ன அர்த்தம் மேடம்..?"

"இளங்கோ நல்லவன் ஹரிதா.."

"இருக்கட்டுமே.. அதைப் பற்றி எனக்கென்ன வந்தது..?"

"அவர்களுடைய குடும்பமும் நல்ல குடும்பம்.."

"அவர்கள் எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும்.. என்னிடம் எதுக்கு அதைச் சொல்கிறீங்க.."

"அவன் கைநிறைய சம்பாதிக்கிறான்ம்மா.."

"யாரோ.. எப்படியோ போகட்டும்.. அதை என்னிடம் ஏன் சொல்கிறீங்க மேடம்..?"

"அவனுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் என்னன்னு நினைக்கிறேன் ஹரிதா.."

"மேடம்..?" ஹரிதா அதிர்ச்சியுடன் கூவி விட்டாள்..

"என்னம்மா.. எதுக்கு இவ்வளவு பதட்டப்படு கிறாய்..?"

"என் கல்யாணத்தைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன் மேடம்.."

"காலம் பூராவும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்னு சொல்லியிருக்கிறாயே.. அதைச் சொல் கிறாயா..?"

ஜாடையாய் மகனைப் பார்த்தபடி கேட்டாள் சகுந்தலா.. அவள் யூகித்தபடியே அவன் கண்களின் மின்னல் வந்தது.. இருள் மறைந்து முகத்தில் வெளிச்சம் பரவ.. ஹரிதாவை ஒரு சொந்தத்துடன் பார்த்தான் அவன்..

"ஆமாம் மேடம்.."

"அதெல்லாம் ஒரு வேகத்தில் சொல்வது.. பாவம்.. தாயைச் சிறு வயதிலேயே இழந்தவள்.. அப்பாவிற்கும் கேன்சர் வந்து.. உன் மாமாவின் உதவியால்தான் அவருக்கு வைத்தியம் பார்த்திருக்கிறாய்.."

சகுந்தலா சொல்லிக்கொண்டே போக..

'இது என்ன புதுக்கதை..?' என்ற நினைவுடன் தன் தாய் சொல்வது உண்மையா என்று ஹரிதாவிடம் விழிகளால் வினவினான் கிருஷ்ணா.. அவள் விழி

தாழ்த்தி அது உண்மையென்பதை அவனுக்கு உணர்த்தினாள்..

"உன் அப்பாவும் இறந்துவிட்டார்.. உனக்கென்று ஒரு துணை வேண்டாமா..?"

"அதுதான் நீங்க இருக்கீங்களே.. மேடம்.."

இதைக் கேட்டதும் சகுந்தலாவின் கண்கள் பனித்து விட்டன.. கிருஷ்ணாவின் இதயம் பிசைய..

'பாவி.. ஏண்டி இப்படி நிராதரவாய் என் முன் நின்று என் நிம்மதியைக் குலைக்கிறாய்..?' என்று அவன் மனதிற்குள் அவளைத் திட்டித் தீர்த்தான்..

"என் காலத்திற்குப் பின்னால் உனக்கென்று ஒரு துணை வேண்டாமா..?"

"வேண்டாம் மேடம்.."

"நீ சொல்வதற்காக நான் என் கடமையைச் செய்யாமலிருக்க முடியுமா..? நீ என்னிடம் அடைக்கலமாய் வந்து விட்டாய்.. உன்னை நான் வாழவைக்க வேண்டாமா..?"

"வேண்டாம்.." ஹரிதா தீர்மானமாகச் சொன்னாள்..

"என்னம்மா சொல்கிற..?"

"எனக்கு அந்தத் திருமண வாழ்க்கை வேண்டாம்.. மீறி நீங்க வற்புறுத்தினால்.." ஹரிதா பேச்சை சற்று நிறுத்த..

"என்ன செய்வாய்..? இந்த வீட்டை விட்டுப் போய் விடுவாயா..?" என்று கேட்டாள் சகுந்தலா..

"இல்லை மேடம்.. ஒருநாளும் நான் இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன்.. நீங்க வற்புறுத்தினால்.. உங்கள் காலடியிலேயே விழுந்து செத்து விடுவேன்.." ஹரிதாவின் உடல் உணர்ச்சி வசத்தில் நடுங்கியது..

"ஹரிதா.." சகுந்தலா அதிர்ச்சியுடன் அழைத்த போது.. கிருஷ்ணா கோபமாக எழுந்துவிட்டான்..

"உங்களுக்கு எதுக்கு இந்த வீண்வேலை..? அவள் உங்களிடம் கல்யாணம் பண்ணி வையுங்கன்னு கேட்டாளா..? அவளை எதுக்கு கஷ்டப்படுத்தறீங்க.."

சகுந்தலாவிடம் கத்தியவன்.. அதே கோபத்துடன் அங்கேயிருந்து நகர்ந்து விட்டான்.. சகுந்தலா ஹரிதாவைப் பார்க்க.. அவள் நிலம் பார்த்தாள்..

தூக்கம் வராமல் புரண்டு படுத்தாள் ஹரிதா.. அவளது மனக்கண்ணில் கிருஷ்ணாவின் முகம் தோன்றி அவளது தூக்கத்தை விரட்டியது..

'ஏன் அவ்வளவு கோபப்பட்டான்..? எனக்கு கல்யாணம் என்றவுடன் அவன் முகம் மாறிப்போனதே..'

அந்த நினைவு தந்த சுகத்தில் அவள் தூக்கத்தை மறந்து எழுந்து அமர்ந்து மடியில் தலையணையை வைத்துக் கொண்டாள்.. சுரேஷ் கிருஷ்ணாவைச் சந்தித்த அந்த முதல் தினத்தை நினைத்துப் பார்த்தாள்.. அப்போதுதான் அந்தச் சப்தம் கேட்டது..

யாரோ சுவரேறி குதித்து வரும் சத்தம்.. காலடி யோசை தெளிவாகக் கேட்க.. ஹரிதாவின் காதுகள் கூர்மையாகின..

அவளும்.. சகுந்தலாவும் வீட்டின் கீழ்தளத்தில் அடுத்தடுத்த அறைகளில் படுத்திருந்தார்கள்.. கிருஷ்ணா மாடியிலிருந்தான்.. வாசலில் செக்யூரிட்டியின் அறையில் செக்யூரிட்டி இருக்கும்போது.. எப்படி இந்தச் சத்தம் வந்தது என்ற யோசனையுடன்.. ஹரிதா.. மெதுவாக எழுந்து நின்றாள்..

ஜன்னல் கதவுகளைக் குளிருக்காக சாத்தியிருந்த தால்.. அவளால் ஜன்னல் வழியாக வெளியே பார்க்க முடியவில்லை.. ஜன்னலின் அருகே போய் திறந்து பார்க்க அவளுக்குப் பயமாக இருந்தது..

அப்போது.. அவளது ஜன்னல் கதவின் மீது.. அந்த நிழல் உருவம் படிந்து நின்றது..

"டொக்.. டொக்.." அவளது ஜன்னல் கதவு தட்டப்பட....

"யாரது..?" என்று ஹரிதா குரல் கொடுத்தாள்..

"..." சற்ற நேரம் பதில் இல்லை..

இப்போது அந்த நிழல் உருவம் நகர்ந்து சென்று விட்டது.. அடுத்த படுக்கையறை சகுந்தலாவின் படுக்கையறை..

ஹரிதா அவசரமாகக் கதவைத் திறந்து ஹாலுக்கு வந்து.. சகுந்தலாவின் அறைக்கதவைத் தட்டினாள்..

"மேடம்.. மேடம்.." பலமாக அவள் குரல் கொடுத்த வேகத்தில் கதவு திறந்தது..

"என்னம்மா..?" சகுந்தலா தூக்கக் கலக்கதுடன் நின்றிருந்தாள்..

"திருடன் மேடம்.." ஹரிதா குரலும்.. உடலும் சேர்ந்து நடுங்க வெடவெடத்தாள்..

"திருடனா.. நம்வீட்டிலா.. இருக்காதும்மா.." சகுந்தலா மறுத்தாள்..

"நான் பார்த்தேன் மேடம்.."

"எங்கே பார்த்தாய்..?"

"ஜன்னலில் நிழல் உருவம் தெரிந்தது.. நல்ல வேளையாக நான் ஜன்னலைச் சாத்தி வைத்திருந்தேன்.. அது ஜன்னல் கதவைத் தட்டியது.."

"நான் ஜன்னலைத் திறந்து வைத்திருக்கிறேனே.."

"என்னது..?"

ஹரிதா திகிலுடன் ஜன்னலைப் பார்த்தபோது.. ஜன்னலில் அவன் முகம் தெரிந்தது.. தாடி.. மீசையுடன்.. பார்க்கப் பயங்கரமாக இருந்தான்..

"வீல்.." ஹரிதா வாயில் கைவைத்து அலறினாள்..

சகுந்தலாவும் அந்தத் திருடனைப் பார்த்துவிட்டாள்.. ஹரிதாவை அணைத்துக் கொண்டு.. மாடியை அண்ணாந்து பார்த்துக் கத்தினாள்..

"கிருஷ்ணா.. கிருஷ்ணா..."

"அம்மா.." அறைக் கதவைத் திறந்து கொண்டு கிருஷ்ணா வெளிப்பட்டான்..

மாடியின் பால்கனி போன்ற உள்பக்க கைப்பிடியில் சாய்ந்து அவன் பார்த்தபோது.. சகுந்தலாவின் கைப்பிடியில் ஹரிதா நடுங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது..

இரண்டிரண்டு படிகளாய் தாவி இறங்கி.. அவர்களின் அருகே ஓடினான்..

"என்னம்மா.. என்ன விசயம்..?"

"கிருஷ்ணா.. அங்கே.. திருடன்.."

சகுந்தலா விரல் நீட்டிய திசை வெறுமையாக இருந்தது..

"யாரும் இல்லையேம்மா.." என்றான் கிருஷ்ணா..

ஹரிதா கூர்ந்து கவனித்தாள்.. மெதுவான 'சரக் சரக்'கென்ற ஓசை காதில் விழ..

"மேடம்.. அவன் போகவில்லை.. இன்னும் இருக்கிறான்.." என்று பயத்துடன் கூறினாள்..

கிருஷ்ணாவின் காதுகளிலும் அந்தச் சத்தம் கேட்டது.. அவன் வாசல் கதவைத் திறக்கப் போனான்..

"வேண்டாம் கிருஷ்ணா.." சகுந்தலா தடுத்தாள்..

"சும்மாயிருங்கம்மா.." கிருஷ்ணா திமிறினான்..

"பொறு செக்யூரிட்டியைக் கூப்பிடுவோம்.."

சகுந்தலா இன்டர்காமில் செக்யூரிட்டியை அழைத்தாள்.. அரைத் தூக்கத்திலிருந்த அவன் தூக்கம் பறந்தோடியவனாக.. துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்..

வீட்டைச் சுற்றிலும் விளக்குகள் எரிய.. செக்யூரிட்டி திருடனைப் பார்த்து விட்டான்.. அவனும்.. திருடனும் கட்டிப் புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது.. கிருஷ்ணா வாசல் கதவைத் திறந்து வெளியே போய் விட்டான்.. சகுந்தலாவும்.. ஹரிதாவும் அவனைத் தொடர்ந்தார்கள்..

"இவனைக் கட்டிப்போடு ராம்சிங்.. போலீஸைக் கூப்பிடுவோம்.." திருடனின் கையை பின்பக்கமாக முறுக்கி.. கிருஷ்ணா.. ராம்சிங்கிடம் அவனைத் தள்ளினான்.. அவனை ராம்சிங் பிடித்துக் கொள்ளப் போகும் போது.. அவன் விலகி.. ராம்சிங்கின் துப்பாக்கியை எடுத்து சகுந்தலாவின் நெற்றிப் பொட்டில் வைத்து விட்டான்..

"கிட்ட யாரும் வராதீங்க.. சுட்டு விடுவேன்.."

"அம்மா.."

கிருஷ்ணா பதட்டத்துடன் அசையாமல் நின்றுவிட.. திருடன் சகுந்தலாவுடன்.. வாசல் பக்கமாக நகர ஆரம்பித்தான்..

"நில்.. எங்கே போகிறாய்..?" கிருஷ்ணா கூவினான்..

"தப்பித்துப் போகிறேன்.."

"அதற்கு ஏன்.. என் அம்மாவைப் பிடித்து வைத்திருக்கிறாய்..?"

"இல்லாவிட்டால் நீங்க என்னை பிடித்து வைத்து விடுவீங்களே.."

"உனக்கு என்ன வேண்டும் சொல் தருகிறேன்.. என் அம்மாவை விட்டுவிடு.."

"அதை முதலிலேயே நீ செய்திருக்கணும்.. அதை விட்டுவிட்டு என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுக்கப் பார்த்தாயே.. அதுக்கு உனக்கு தண்டனை கொடுக்க வேண்டாமா..?"

"அப்படி நீ நினைத்தால்.. என்னை என்ன வேண்டு மானாலும் செய்து கொள்.. என் அம்மாவை விட்டுவிடு.."

"உன்னிடம் மாட்டிக் கொள்ள நான் என்ன முட்டாளா..?"

சகுந்தலா ஏற்கனவே நோயாளி.. இப்போது பயத்தில் அரை மயக்க நிலைக்கு போய்விட.. அப்போதுதான் ஹரிதா அந்தக் காரியத்தைச் செய்தாள்..

தோட்ட வேலை செய்து கொண்டிருந்த சுப்பன் போட்டிருந்த மண்வெட்டியை எடுத்து நொடிப் பொழுதில் திருடனின் தலையில் அடித்து விட்டாள்..

"ஆ.." என்று அலறிக்கொண்டே அவன் தலையைப் பிடித்துக் கொண்டபோது சகுந்தலாவை தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்..

வலி தாங்காமல் திருடன் துப்பாக்கியால் சகுந்தலாவைக் குறிவைத்துச் சுட்டு விட்டான்..

"அம்மா.." என்று கிருஷ்ணா அலறினான்..

"ஹரிதா..?" என்று சகுந்தலா அலறினாள்..

சகுந்தலாவின் மீது குண்டு பாய்ந்தபோது அவளைப் பின்னுக்குத் தள்ளி மறைத்து முன்னே வந்து நின்று அந்தக் குண்டை ஏற்றுக் கொண்டு ரத்த வெள்ளத்துடன் சுருண்டு விழுந்தாள் ஹரிதா..

அவளை மடியில் தாங்கிக் கொண்ட சகுந்தலா கதறியழ..

"டேய்ய்.." என்று கூவியபடி அந்தத் திருடனின் மேல் பாய்ந்துவிட்டான்.. கிருஷ்ணா..

அவனைப் புரட்டி எடுத்தவனிடமிருந்து அந்தத் திருடனை குற்றுயிராக செக்யூரிட்டியும்.. தோட்டக் காரனும் மீட்டார்கள்..

"வேண்டாங்க ஐயா.. போலீஸிற்குத் தகவல் சொல்லி போலீஸ் வந்துக்கிட்டு இருக்குது.. அவங்க பாத்துக்கு வாங்க.. நீங்க விட்டுவிடுங்க.."

ஹரிதாவை மடியில் தாங்கிக் கதறிக் கொண்டிருந்த சகுந்தலா..

"கிருஷ்ணா இங்கே வாடா.." என்று அழைத்தாள்..

கிருஷ்ணா ஹரிதாவின் அருகே ஓடினான்.. மெலிதாய் சுவாசம் வந்து கொண்டிருக்க.. அவள் பேச முடியாமல் திணறினாள்..

"பூஜா.. கண்ணைத் திறந்து என்னைப் பார்.." கிருஷ்ணா பரிதவித்தான்..

அவனது குரலுக்கு என்ன சக்தி இருந்ததோ தெரியவில்லை.. அவள் லேசாக இமை திறந்தாள்.. அவனை ஒளிரும் கண்களுடன் பார்த்தாள்..

"நான் ஹரிதா.."

"எனக்கு நீ பூஜாதான்.."

அவள் திருப்தியுடன் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் கடந்த காலத்தின் காதல் இருந்தது..

"ஏண்டி.. இப்படிச் செஞ்சே..?"

"வேறு என்ன செய்வது..? அம்மாவை இழந்து விட்டேன்.. அப்பாவை இழந்துவிட்டேன்.. அந்த இரண்டுமாக இருந்த உங்க அம்மாவையும் இழக்கச் சொல்கிறீங்களா..? இனியொரு இழப்பைத் தாங்கி உயிர் வாழ எனக்குச் சக்தியில்லை சுரேஷ்.."

"பூஜா.."

"கடைசிவரை உங்க காலடியில் அடைக்கலம் தாங்கன்னு உங்க அம்மாவிடம் கேட்டேன் சுரேஷ்.. என்னைப் பற்றி எதுவும் தெரியாமல் என்னை முன் பின் பார்க்காமல்.. உடனே புறப்பட்டு வான்னு என்னை வரச் சொன்னாங்க.. இந்த வீட்டில் என்னையும் சேர்த்துக் கிட்டாங்க.. என் வாழ்வில் உங்க முகத்தை ஒரேயொரு தடவையாவது பார்த்து விட மாட்டோமான்னு தவித்தேன்.. நான் அதுக்காக ஏங்கிய ஏக்கம்.. எனக்கு மட்டும்தான் தெரியும்.. இங்கே வந்தவுடன் உங்களைப் பார்த்து விட்டேன்.. ஒரே வீட்டில் உங்களோடு வாழ்ந்து விட்டேன்.. இதை எனக்குத் தந்த உங்க அம்மா நீண்ட நாள் வாழ வேண்டும் சுரேஷ்.. அவங்களை இழக்க என்னால் முடியாது.."

"என்னோடு வாழ்ந்தாயா..?"

"ம்ம்.. உங்களோடுதான் வாழ்ந்தேன்.. உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டே.. நீங்க பிறந்த இந்த வீட்டில்.. உங்க அம்மாவின் நிழலில் நான் நடமாடினேனே.. அதுவே எனக்குப் போதும்.. இதுதான் நான் கேட்ட வாழ்க்கை.. அதை எனக்கு உங்க அம்மா கொடுத்துட்டாங்க.. இனி திருப்தியோடும்.. நிறைவோடும் செத்து விடுவேன்.."

"நான் உன்னைச் சாக விட மாட்டேன்.."

கிருஷ்ணா அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டான்.. குமரனின் கார் புயல் வேகத்தில் வந்து நிற்க.. கலவரமான முகத்துடன் இறங்கினான் அவன்.. ரத்த வெள்ளத்தில் ஹரிதாவைப் பார்த்ததும பதறினான்..

"என்னடா கிருஷ்ணா..?"

"ராம்சிங்கிடம் கேளு.. சொல்வான்.. நீ இங்கேயிருந்து மற்றதைப் பார்.. நான் ஹாஸ்பிடலுக்குப் போகிறேன்.."

அவசர கதியில் ஓடிக் கொண்டே கிருஷ்ணா பேச.. குமரன் அவனுக்கு கார் கதவைத் திறந்து விட்டான்.. பின் சீட்டில் ஹரிதாவை மடி தாங்கிக் கொண்டு சகுந்தலா அமர்ந்து விட.. கிருஷ்ணா காரைக் கிளப்பினான்.. காற்றை விட வேகமாக பறந்தது அவனுடைய கார்..

ஹாஸ்பிடலில் குண்டடிபட்ட ஹரிதாவைக் கண்டதும் தயங்கிய டாக்டர்கள்.. கிருஷ்ணாவைக் கண்டதும்.. உடனடியாக செயலில் இறங்கினார்கள்.. ஐசியுவில் ஹரிதா அனுமதிக்கப்பட்டாள்.. அறைக்கு வெளியே கைகளைப் பிசைந்து கொண்டு சகுந்தலா நின்று கொண்டிருக்க.. கலைந்த தலை முடியோடும்.. சிவந்த கண்களோடும் குறுக்கும்.. நெடுக்குமாக.. நடந்து கொண்டிருந்தான் கிருஷ்ணா..

"ஹரிதா எப்படியிருக்கிறாங்க கிருஷ்ணா.." குமரன் வேகமாக வந்தான்..

"ஐசியுவில் இருக்கிறா.. டாக்டர்ஸ் ட்ரீட்மென்ட் கொடுத்துக்கிட்டு இருக்கிறாங்க.."

"அந்தத் திருடனை போலீஸில் ஒப்படைத்து விட்டேன்.. இன்ஸ்பெக்டர் உன்னிடம் ஸ்டேட் மென்ட் வாங்க வந்திருக்கிறார்.."

கிருஷ்ணா நடந்ததைக் கூற.. இன்ஸ்பெக்டர்.. ஹரிதாவிடம் வாக்குமூலம் வாங்குவதற்காக அங்கேயிருந்த சேரில் அமர்ந்து காத்திருக்க ஆரம்பித்தார்..

கிருஷ்ணாவைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றான் குமரன்.. நண்பனின் முகத்தில் தெரிந்த பரிதவிப்பைக் கண்டு அவனுக்குள் இரக்கம் சுரந்தது..

"பயப்படாதே கிருஷ்ணா.. ஹரிதா பிழைத்து விடுவாங்க.."

"இப்படி ஆகிவிட்டதேடா.. அவள் துரோகின்னு தெரிஞ்ச பின்னாலும் அவளை நான் வெறுத்த தில்லையேடா..

விலகித்தானே போனேன்.."

"அவங்க துரோகியில்லை கிருஷ்ணா.."

"அவ என்ன செய்தான்னு உன்னிடம் நான் சொன்னேனே.."

"எதுக்கு செய்தாங்கன்னு என்னிடம் அவங்களும் சொல்லிட்டாங்க.."

குமரன் அருவிக்கரையில் ஹரிதா கூறியதை யெல்லாம் கிருஷ்ணாவிடம் சொன்னான்.. கவனமாக அதைக் கேட்டுக் கொண்ட கிருஷ்ணாவின் முகத்தில் சிந்தனை படர்ந்தது..

"அவங்களிடம் பொய்யில்லை கிருஷ்ணா.. உண்மை இருக்கிறது.. செய்வது சரியோ.. தவறோ.. அதற்கான நியாயம் அவங்களிடம் இருக்கிறது.. அதை ஒப்புக் கொள்ளும் நேர்மை இருக்கிறது.. இத்தனைக்கும் மேலாக உன்னிடம் உண்மையான காதலும் இருக்கிறது.. இப்படியொரு பெண்ணின் காதல் கிடைக்க.. உண்மையிலேயே நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. கிருஷ்ணா.. என்ன மாதிரியான பெண் இவங்க..?!!.. இவங்களைப் போல ஒரு ஜீவனை நான் பார்த்ததே யில்லை.."

அதைக் கேட்டுக் கொண்டே அங்குவந்த சகுந்தலா மகனைப் பார்த்தாள்..

"அம்மா.." தாயின் கைகளில் முகம் புதைத்தான் கிருஷ்ணா..

"எனக்கு எல்லாம் தெரியும் கிருஷ்ணா... ஹரிதாவின் கடிதத்தைக் கண்டதுமே நான் டிடெக்டிவ் ஏஜென்ஸியை ஏற்பாடு பண்ணி எல்லாத்தையும் விசாரித்து விட்டேன்.. இக்கட்டான நிலைமையில் அவளுடைய ஒன்றுவிட்ட மாமா.. உதவியிருக்கிறான்.. அவன் கேட்ட உதவியை இவள் பதிலுக்குச் செய்திருக்கிறாள்.. உதவி செய்ய வந்த இடத்தில்

உன் மேல் கொண்ட காதலுக்காக அவள் மனம் மாறியிருந்தால்.. அது அவளுடைய மாமாவிற்கு அவள்

செய்யும் நம்பிக்கைத் துரோகமாகி விடாதா..?"

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப் போல.. எந்தவொரு குற்றத்திற்கும் இரண்டு பக்க நியாயங்கள் உண்டு என்று ஹரிதா கூறியது குமரனுக்கு நினைவு வந்தது.. நண்பனைப் பார்த்தான்.. சுரேஷ் கிருஷ்ணாவின் விழிகளிலும் அது தெரிந்தது..

'இந்தப் பெண்கள்தான் எத்தனை அறிவாளிகள்..?' அந்த நண்பர்கள் இருவரும் ஒன்றுபோல் வியப்புடன் நினைத்துக் கொண்டனர்..

## 32

திருமணப் பத்திரிக்கைகளில் பெயர்களை எழுதிக் கொண்டிருந்தான் குமரன்.. அருகில் அமர்ந்து பெயர்களை யோசித்து.. யோசித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள் சகுந்தலா.. யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தான் கிருஷ்ணா..

"ஹரிதா எங்கேம்மா..?" திடீரென்று குமரன் கேட்டான்..

"அதையேன் கேட்கிற.. கல்யாணம் நிச்சயம் ஆனதும்.. அவள் கிருஷ்ணாவின் முன்னால் வர மாட்டேன்னு ஒளிந்து கொள்கிறாள்.." சகுந்தலா சிரிக்க.. கிருஷ்ணாவின் முகத்தில் ஆண்மையின் பெருமிதம் தெரிந்தது..

"அம்மா.. வேதாந்தம்கிற பெயருக்கு ஒரு இன்விடேசனை அனுப்பி விடுங்க.." என்றான் கிருஷ்ணா..

"அது ஹரிதாவின் மாமாவின் பெயராச்சே.." குமரன் வியப்புடன் கேட்டான்..

"அவனேதான்.."

"அவனுக்கா இன்விடேசன் அனுப்பச் சொல்கிற..?"

"ஆமாம்.."

"நீயும்.. ஹரிதாவும் பிரிந்ததுக்கு காரணம் அவன்தானேடா.."

"நானும் பூஜாவும் சந்தித்துக் கொண்டதற்கு காரணமும் அவன்தான்.."

"அவன் பூஜாவின் குடும்பத்திற்கு உதவியிருக் கிறான்.. அதையும் நான் மறந்துவிடக்கூடாது.. தவிரவும்.. இன்னொன்றும் உண்டு குமரா..?"

"என்னடா..?"

"என் பக்க சொந்தங்கள் நிறைந்திருக்கும் சபையில் பூஜாவின் சொந்தமாக ஒருவராவது வந்து நிற்க வேண்டாமா..? அவன் ஒருத்தன்தானே பூஜாவிற்கு பிறந்த வீட்டுச் சொந்தமாக இருக்கிறான்.."

சகுந்தலா மகனைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டாள்..

'இவன் என் மகன்..' அவள் மனம் நிறைந்தாள்..

மன்னிக்கத் தெரிந்தவன் தேவன்.. தன் மகன் அப்படிப்பட்டவன் என்பதில் அவளுக்கு மகா சந்தோஷம்..

ஆனைமலையே பேசுமளவிற்கு பிரம்மாண்டமாக சுரேஷ் கிருஷ்ணா.. ஹரிதாவின் திருமணம் நடைபெற்றது.. முகூர்த்த வேளைக்கு சற்று முன்னதாக வேதாந்தம் மனைவி குழந்தைகளுடன் வந்து விட்டான்..

ஹரிதாவிற்கு தாரை வார்த்துக் கொடுக்க.. தாய்.. தகப்பன் ஸ்தானத்தில் மண மேடையேறும் படி சகுந்தலா அவர்களை அழைத்தபோது.. மறுக்காமல் மனைவியுடன் மணமேடைக்கு வந்து தாரை வார்த்துக் கொடுத்தான்.. சுரேஷ் கிருஷ்ணாவின் பெரியப்பாவும்.. பெரியம்மாவும்.. மணமேடையில் சுரேஷ் கிருஷ்ணாவின் பெற்றவர்கள் ஸ்தானத்தில் நின்றார்கள்..

கிருஷ்ணா ஹரிதாவின் கழுத்தில் தாலியைக் கட்டியபோது அட்சதை தூவி மனமார வாழ்த்திய வேதாந்தம்.. அவர்கள் அக்கினியை வலம் வந்து பெரியவர்களை வணங்கி முடித்து சற்று நேரம் ஓய்வாக அமரலாம் என்று

அமர்ந்திருந்தபோது அருகில் வந்து கிருஷ்ணாவிடம் தடிமனான ஒரு கவரைக் கொடுத்தான்.

"என்ன இது..?" கிருஷ்ணா புரியாமல் பார்த்தான்..

"ஹரிதாவுக்கு நான் கொடுக்கும் தாய்வீட்டுச் சீதனம்.. என் பேக்டரியை உங்க பெயருக்கு மாற்றி எழுதியிருக்கிறேன்.." வேதாந்தம் அமைதியாகக் கூறினான்..

"வாட்..?" கிருஷ்ணா அதிர்ச்சியுடன் பார்த்தான்..

"யெஸ் மிஸ்டர் கிருஷ்ணா.. இந்த பேக்டரியில் உளவு வேலை பார்க்கத்தானே ஹரிதாவை அனுப்பினேன்..? இப்போது அந்தச் சரிவு சமனப்பட்டு விட்டது.. எனக்கு அதுபோதும்.. நான் போகிறேன்.."

"எங்கே..?"

"மலேசியாவிற்கே.. இந்த பேக்டரிக்காக என் அக்கா மகளைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்ட குற்ற உணர்வு என்னைக் கொல்கிறது.. எனக்கு இந்தச் சொத்து வேண்டாம்.."

கிருஷ்ணா எழுந்து.. வேதாந்தத்தின் தோள்களில் கைவைத்து அவன் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.. சட்டென்று அவனைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்..

"கிருஷ்ணா.." வேதாந்தத்தின் குரல் கம்மியது..

"நீங்க நல்லவர் வேதாந்த்.. எப்படி பூஜா.. தான் செய்த குற்றத்திலும் ஒரு நியாயம் உண்டு என்று சொன்னாளோ.. அதைப் போலவே நீங்களும்.. அந்தக் குற்றத்தை செய்ய வைத்ததில் ஒரு நியாயம் உண்டு என்று சொல்லி விட்டீங்க.. உங்கள் இருவரின் தன்மைகளைப் பார்க்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.. ஐ ஆம் வெரி பிரெவுட் ஆப் யு.."

கிருஷ்ணா அந்தக் கவரை வேதாந்தத்திடம் திருப்பிக் கொடுத்தான்..

"இது உங்க பேக்டரி.. நீங்கள் உருவாக்கிய தொழிலின் சரிவைக் காணச் சசிக்காமல் உங்களின் இயல்புக்கு மாறான வேலையில் இறங்கத் துணிந்தீர்கள் என்றால் அந்தப் பேக்டரியை நீங்க எவ்வளவு நேசித்திருக்க வேண்டும்.. அது உங்களிடம் தான் இருக்க வேண்டும்.."

"ஆனாலும் கிருஷ்ணா.."

"வேண்டாம் வேதாந்த்.. நீங்க ஆரம்பித்த அதே தயாரிப்பையே நானும் தயாரிக்க ஆரம்பித்ததால் தான் இந்தப் பிரச்னை வந்துவிட்டது.. நான் வேறு தயாரிப்பில் இறங்கி விட்டேன்.. இனி நாம் உறவினர்கள் மட்டுமே.. தொழில் போட்டியாளர்கள் கிடையாது.."

வேதாந்தம் கிளம்பியபோது.. குடும்பத்துடன் அவனுக்குக் கை அசைத்து விடை கொடுத்தான் கிருஷ்ணா...

"எனக்கு உங்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது.."

கிருஷ்ணாவின் மார்பில் தலை வைத்து முகத்தை நிமிர்த்தி அவன் விழிகளுக்குள் பார்த்தபடி கூறினாள் ஹரிதா..

மல்லிகைச்சரம் அவனது தோளில் வழிந்து.. அவன் முகத்திற்கு வெகு அருகே சுகந்தமான மணத்தைத் தர.. மனம் கிளர்ந்த கிருஷ்ணா.. அவளை இறுக்கி.. முகத்தின் அருகே இழுத்தபடி..

"ஏண்டி.. என்னை நினைத்தால் உனக்கு காதலாக இல்லையா..?" என்று கேட்டான்..

பட்டு வேட்டி.. பட்டுச் சட்டையில் அவனது கவர்ச்சி அதிகமாக இருப்பதை உணர்ந்தவள்.. அவனிடம் மயங்கினாள்.. அந்த மயக்கத்தோடு.. அவனது இதழ்களில் முகத்தை உராய்ந்தவள்.. விழிமூடிக் கூறினாள்..

"காதலாக இருக்கப் போய்த்தானே உங்களைத் தேடி வந்தேன்.."

"பூஜா.."

அவளது இதழ் தேடிக் குனிந்த கிருஷ்ணாவின் ஆவேச ஆக்ரமிப்பில் அடங்கிப் போனாள் ஹரிதா..

மறுநாள் காலையில் குளித்து முடித்து ஈரத் துண்டை தலையில் சுற்றி.. பூஜையறையில் கண்மூடி நின்றவளின் மனம் நன்றியால் ததும்பிக் கொண்டிருந்தது..

'நீ கருணையானவன் கடவுளே.. என்னை நீ கைவிடவில்லை.. என் காதலை என்னிடம் கொடுத்து விட்டாய்..'

"பூஜா.." மாடியிலிருந்து கிருஷ்ணா அழைக்கவும்..

"இதோ வந்துட்டேன்.." என்றபடி.. அவசரமாக மாடிப் படிகளில் ஏறி ஓடினாள்..

"என்னங்க..?" மூச்சிரைத்தபடி முன்னால் வந்து நின்றவளை ஆசையுடன் பார்த்தவன்..

"ஏண்டி இப்படி ஓடிவருகிற..? உன் பெயர் பூஜாவா இல்லை.. பி.டி உஷாவா..?" என்று கேட்டான்..

"நீங்கதானே கூப்பிட்டிங்க..?" பூஜா சிணுங்கினாள்..

"கூப்பிட்டால் உடனே ஓடி வரணுமா..? மெதுவாகத்தான் வருகிறது..?" கிருஷ்ணாவின் கை அவள் மேல் படர்ந்து பரவியது.. பூஜா இறங்கி.. அவன் மேல் சரிந்தபடி..

"வேண்டாம்.." என்று முணுமுணுத்தாள்..

"எனக்கு வேண்டும்.." அவன் உல்லாசமாகச் சிரித்தான்..

"நான் குளித்து விட்டேன்.."

"இன்னொரு முறை குளித்தால் தப்பில்லை.."

அவளது இடுப்பில் கைகொடுத்து அவளை அவன் தூக்கிக் கொண்டபோது ஈரத்துண்டு அவளை விட்டு விலகி நழுவியது.. அவளது ஈரக்கூந்தலில் முகம்

புதைத்த கிருஷ்ணா.. அதற்கு மேல் பேச வில்லை.. அவளையும் பேசவிடவில்லை..

"பூஜா.." திருப்தியுடன் விலகி அவள் நெற்றியில் முத்தமிட்டு அழைத்தான்..

"ம்ம்..?" கண் திறக்காமல் அவள் முணுமுணுத்தாள்..

"ஹனிமூனுக்கு எங்கேடி போகலாம்..?"

"ம்ம்ம்.." அவள் புரண்டு அவன் மார்பில் தலை வைத்து அவன் முகம் பார்த்தாள்..

அவனிடம் பேச அவள் கையாளும் முறை இது..

கிருஷ்ணாவிற்கு அவளின் இந்தச் செய்கை மிகவும் பிடிக்கும்..

"ஆனை மலைக்கு போகலாம்.."

"அடி.. என் முட்டாள் பெண்டாட்டியே.. இது தான் ஆனைமலை."

"என் அறிவுக் கணவனே.. எனக்கும் அது தெரியும்.."

"அப்படின்னா..?"

"ஆமாம்.. நாம் இங்கேயே நம் தேநிலவைக் கொண்டாடலாம்.. அத்தையை விட்டுவிட்டு நாம் மட்டும் தனியாகப் போக எனக்கு விருப்பமில்லை.."

"என்னைவிட உனக்கு அம்மா மேல் தான் பிரியம் அதிகம் போல இருக்கு.." கிருஷ்ணாவின் குரலில் அப்பட்டமான பொறாமை தொனித்தது..

"ஆமாம்.." ஹரிதா நகைத்தாள்..

"என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கு..?" அவன் கடுகடுத்தான்..

"எனக்கு அத்தை மேல் கொள்ளைப் பிரியம் தான்.. ஏன்னா.. அவங்க என் கிருஷ்ணாவைப் பெற்றெடுத்த அம்மா.."

அவள் கணவனின் கழுத்தை வளைத்து... அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.. அவளது பதிலில் மனம் நிறைந்தவன்.. மீண்டும் அவளில் புதைந்தான்..

சகுந்தலா எவ்வளவோ சொல்லிப் பார்த்தும்.. ஹரிதா அவளை விட்டுவிட்டு கிருஷ்ணாவுடன் போக மறுத்தாள்..

"நீங்க தனியாக இங்கே இருக்க.. நான் மட்டும் போவதா..?"

"என்னம்மா இது..? இவளை இங்கே விட்டு விட்டு நான் எப்படி நிம்மதியாய் என் தொழிலைப் பார்க்க.."

கிருஷ்ணா தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட.. சகுந்தலா ஒரு முடிவெடுத்தாள்..

"சரிடா கிருஷ்ணா.. நானும் உங்களோடு வருகிறேன்.."

"நிஜமாகவா அம்மா.." விழி விரித்தான் கிருஷ்ணா..

"நிஜமாகத்தான்.. உன் அப்பா எங்கேயிருந்தாலும் நம்மோடுதான் இருப்பார்.. நான் வருகிறேன்.." மகனுக்காக அந்த எஸ்டேட்டை விட்டுக் கிளம்பாத அந்தத் தாய்.. மருமகளுக்காகக் கிளம்பினாள்..

அவர்கள் மூன்று வருடம் கழித்து.. ஆனைமலைக்கு திரும்பி வந்தார்கள்.. குமரன் அவர்களை வரவேற்றான்..

"ம்ம்.. உலகம் சுற்றுகிற குடும்பத்தை.. உன் மகன் ஆனைமலைக்கு இழுத்து வந்துவிட்டான்.."

குமரன் கை நீட்ட.. ஹரிதாவின் கைகளில் இருந்த சுரேஷ் கிருஷ்ணாவின் மகன் குமரனிடம் தாவினான்..

"எப்படிடா..? இவன் யார் கூப்பிட்டாலும் போக மாட்டான்.." கிருஷ்ணா ஆச்சரியப்பட்டான்.

"மத்தவங்களும்.. நானும் ஒன்றா..?" குமரன் பெருமையாக ஒருவயதுக் குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டான்..

"பெயர் என்னடா..?" ஆதுரத்துடன் வினவினான்..

"ம்ம்.. கிருஷ்ணா..."

"அதுதான் தெரியுமே.. முழுப்பெயரைச் சொல்லு.."

"கோகுலகிருஷ்ணா.."

ஆனைமலையில்.. குலதெய்வம் கோவிலில் கோகுல கிருஷ்ணனுக்கு மொட்டையெடுக்கப் போன போது..

"தாய் மாமனின் மடியில் குழந்தையை உட்கார வையுங்க.." என்றார் மொட்டை எடுப்பவர்..

ஹரிதா குமரனின் மடியில் குழந்தையை உட்கார வைக்க..

"நினைத்தேன்.. நீ இதைத் தான் செய்வாய்ன்னு.." என்று சிரித்தான் கிருஷ்ணா..

வழக்கம் போல மருமகளைப் பெருமையுடன் பார்த்தாள் சகுந்தலா..

குமரன் மனம் நெகிழ்ந்துவிட்டான்.. அவனது மாமன் சீராக... தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அவிழ்த்து குழந்தையின் கழுத்தில் போட்டு விட்டான்..

"எஸ்டேட் உன் பொறுப்பு குமரா.."

"நீ இதைச் சொல்லணுமா கிருஷ்ணா.."

குமரனிடம் இருந்து விடைபெற்று அந்தக் குடும்பம் காரில் புறப்பட்டது.. யாருமற்ற அநாதையாக அந்த ஆனைமலைக்கு வந்த அந்தப் புதிய பறவை.. கணவன்.. மாமியார்.. குழந்தை.. என்று குடும்பத்துடன் பிணைந்து அந்த ஆனைமலையை விட்டு கிளம்பியது..

- முற்றும் -